
கல்கி
KALKI 28.4.1968 40காசு

கல்கி


பொருளடக்கம்

கீலக சித்திரை 16 - ஏப்ரல் 28





பட விளக்கம் 10ம் பக்கம்

திருமணம்



பம்பாயில், பிரபல விளம்பர ஆலோசகர்களான மெஸர்ஸ் லின்டாஸ் லிமிடெட்டைச் சார்ந்த திரு எஸ். வி. வேணுகோபாலன் அவர்களின் குமாரத்தி செள. **லக்ஷ்மிக்கும்**, சிரஞ்சீவி **ராம்கோபால்** அவர்களுக்கும், பெங்களூரில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அதையொட்டி சென்னையில் நடைபெற்ற வரவேற்பு விழாவுக்கு உறவினர்களும், நண்பர்களும், நகரப் பிரமுகர்கள் பலரும் சினிமா நட்சத்திரங்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். ஏராளமான பரிசுகளும், வாழ்த்துச் செய்திகளும் வந்து குவிந்தன.


குடி
ராஜ்ய சர்க்கார்கள்
நவீன மார்க்கண்டேயர்கள்


உ.பி.யிலும் ராஷ்டிரபதி ஆட்சி!
நம்மை யாரும் கவிழ்க்க முடியாது.
பொருளாதார நெருக்கடி
இந்திய சர்க்கார்
P.K



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 39

கட்சி மாற்றம் சட்டப்படி குற்றமா?

சட்டசபையாளர்கள் ஒரு கட்சி விட்டு இன்னொரு கட்சிக்கு மாறுவது சமீப காலத்தில் அதிகமாகி வருகிறது. இது காரணமாகவே சென்ற வருடத்திய பொதுத் தேர்தலுக்குப்பின் பல ராஜ்ய மந்திரி சபைகள் கலைக்கப்பட நேர்ந்தது. இலட்சியத்தின் அடிப்படையில் இன்றி, சுய லாபங்களுக்காகக் கட்சி மாறுவது கண்டனத்துக்குரியது என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் உண்மையான மனமாற்றத்தின் மீது ஒருவர் கட்சி மாறுவதைக் தடுப்பது ஜனநாயகத்தின் அடிப்படையையே தகர்ப்பதாகும். ஒருவர் அந்தரங்க சுத்தத்துடன் கொள்கையை மாற்றிக் கொண்டு அதனால் கட்சி மாறுகிறாரா, அல்லது வேறு காரணங்களுக்காகக் கட்சி மாறுகிறாரா என்பது அந்த ஒருவரைத் தவிர வேறு யாருக்கும் நிரூபிக்கக்கூடிய முறையில் தெரியாது. இது காரணமாகக் கட்சி மாற்றத்தைச் சட்டபூர்வமாகத் தடை செய்வதற்கு நியாயமில்லாமல் போகிறது. இவ்விஷயத்தில் பொது மக்களின் கருத்து அழுத்தமாக உருவாகி அங்கத்தினர்கள்மீது அதன் தார்மிக சக்தி பிரயோகிக்கப்படுவதொன்றே முறையற்ற கட்சி மாற்றத்தைத் தடுக்க முடியும் என்று தோன்றுகிறது.

ஒருவர் கட்சி மாறி அதனால் ஊதியமுள்ள ஒரு பதவியைப் பெறுவாரேயாகில் அவரைக் குற்றவாளியாகக் கருதும் வகையில் குற்றச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சட்ட மந்திரி இலாகா யோசித்து வருவதாகத் தெரிகிறது. விஷயத்தில் ஆழ்ந்த ஆலோசனை இல்லாததாலேயே இத்தகைய கருத்து உருவாகியுள்ளது. ஒருவர் கட்சியை மாற்றிக் கொண்டதன் விளைவாக ஊதியமுள்ள பதவிக்கு வருவது லஞ்சக் குற்றமெனில், லிபரல் கட்சியிலிருந்து கன்ஸர்வேடிவ் கட்சிக்கு மாறிப் பிரதமரான சர்ச்சில் கூடக் குற்றவாளியாகி விடுவார்.

கொள்கை மாற்றம் ஒன்றுக்காகவே ஒருவர் கட்சி மாற வேண்டும் என்றும் தீர்மானமாக விதிக்க முடியாது. தம்முடன் ஒருவர் கொள்கையில் ஓரளவு மாறுபட்டிருந்தாலும் கூட, அவரது பொதுவான குண நலன்களைக் கண்டு மதிப்புக் கொண்டு, அவரது தலைமையில் அரசாங்கம் அமைந்தால் அது நல்ல முறையில் செயலாற்றும் என்ற கருத்தில் அவரது கட்சிக்குச் சிலர் செல்லக் கூடும். இவ்வாறு ஒரு நல்ல இலட்சியத்துக்காகத் தம் கருத்துக்களை ஓரளவு விட்டுக் கொடுப்பவர்களை நேர்மையற்ற அரசியல்வாதிகள் என்று சொல்லிவிட முடியாது.

ஒரு கட்சியின் கொள்கைகளுக்காகவேதான் அங்கத்தினர் அனைவரும் அக்கட்சியில் இருக்கின்றனர் என்று சொல்லிவிட முடியாது. கொள்கையோடுகூட, வேறு பல புறக் காரணங்களுக்காகவும் ஒருவர் ஒரு குறிப்பிட்ட கட்சியில் இருக்கக்கூடும். இப்புறக் காரணங்களில் எல்லாமே சுயநலமானவை என்று சொல்லிவிட முடியாது. இவற்றில் பல நியாயமானவையாகவே இருக்கக்கூடும். எனவே, ஒருவர் கட்சி மாறுவதைக் குற்றமாக்கி, வெகு எளிதான முறையில் நேர்மையின்மையைத் தடுப்பதாக நினைப்பது உண்மையில் விவேகமற்ற முடிவே ஆகும். இதற்கு அரசியல் சாஸனத்தின் அடிப்படையில் பலம் தேடுவது அப்பாவித்தனம். ஏனெனில் அரசியல் சாஸனம் அரசியல் கட்சி அமைப்பைப் பற்றி எதுவுமே கூறவில்லை.

'ஒருவர் கட்சி மாறுவதால் மந்திரியாகும் போது அவர் ஊதியம் பெறுகிறார். எனவே, திரவிய லாபத்துக்காக அவர் கட்சி மாறியதாகிறது. இது லஞ்சக் குற்றமாகும்' என்று சொல்வதில் ஒரு பெரிய 'பொத்தல்' இருக்கிறது. மனப்பூர்வமாகவோ அல்லது நாட்டு நலனைக் கருதியோ ஒருவர் கட்சி மாறி, மந்திரி பதவி வகிப்பதை இது தடுக்கிறதென்பது ஒருபுறமிருக்க, கட்சி மாறி, மந்திரி பதவி பெறும்போதே தங்களுக்கு ஊதியம் எதுவும் வாங்கிக் கொள்ளாமலிருந்

தால், அவர்களை எப்படி லஞ்சக் குற்றம் செய்ததாகச் சொல்ல முடியும்? இந்த ஏற்பாட்டினால் நேர்மையற்ற அரசியல்வாதிகள் கட்சி மாறுவதை உண்மையில் தடுத்துவிட முடியாது என்பதையும் கவனிக்க வேண்டும். அதாவது நேர்மையற்ற அரசியல்வாதிகள் கட்சி மாறி, ஊதியமில்லாமலே மந்திரி பதவி ஏற்று, 'வேறு விதங்களில்' தமக்கு லாபம் தேடிக் கொண்டால் அப்போது இந்தச் சட்டம் நமக்கு எப்படிப் பயன்படும்?

ஆக, அரசியல் கட்சி நடவடிக்கைகளைச் சட்டக் கட்டுப்பாடு இன்றிச் சுதந்திரமாகவே விட்டு விடுவதுதான் நல்லதாகப்படுகிறது. கட்சிகளின் கட்டுக்கோப்பை முன்னிட்டு ஒருவரது அரசியல் நடவடிக்கைகளைச் சட்டப்படி கட்டுப்படுத்துவது பொருந்தாது. ஒருவர் எந்த ஒரு சமயத்திலும் தாம் கொண்டுள்ள கருத்துக்கு ஏற்ப ஏதேனும் ஒரு கட்சியில் இருக்க வழி செய்தால்தான் ஜனநாயகம் சுதந்திரமாக இருக்கும். அவர் மிகக் குறுகிய காலத்திலேயே கருத்தை மாற்றிக் கொண்டு வேறு கட்சிக்குப் போனாலும் அதற்காக அவரைக் குற்றவாளியாக்கி விட முடியாது. ஒருவர் சத்தியமான காரணங்களிருந்தாலன்றிக் கட்சி மாறாமல் அவரைக் கட்டுப்படுத்துவதற்குப் பொதுமக்களின் தார்மிகக் கருத்து வலுப்படுவதே வழி. தார்மிக ரீதியில் நடைபெறவேண்டியதைக் குற்றச் சட்டத் திருத்தத்தாலோ, அரசியல் சாஸனத் திருத்தத்தாலோகூடச் சாதிக்க முடியாது.

இப்போது இவ்விஷயமாகக் கூறப்படும் யோசனைகளின் போக்கைப் பார்க்கும்போது ஒரு நாலணா காங்கிரஸ் அங்கத்தினர் வேறு கட்சிக்கு வாக்குப் போட்டு, பிறகு என்றோ ஒருநாள் ஏதேனும் பதவியோ லாபமோ பெற்றால் அதுகூடக் குற்றமாகிவிடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த விவகாரத்தில் சட்ட மந்திரி இலாகா நிதானமாகச் செயலாற்ற வேண்டும்; அரசியல் நீதியறிந்த சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்த பின்னரே முடிவுகள் எடுக்க வேண்டும். அரசியல் தலைவர்களுக்கு உதவுவதைவிட அரசியல் நீதிக்கு உகந்ததைச் செய்வதே சிலாக்கியம்.

சட்டசபையின் உரிமையை மறக்கலாமா?

உத்தரப் பிரதேசத்தில் சட்டசபையாளர்கள் கட்சிக்குக் கட்சி மாறியதை அடுத்து, இப்போது அங்கு சட்டசபை கலைக்கப்பட்டு, ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மீண்டும் அந்த ராஜ்யத்தில் பொதுத் தேர்தல் நடத்திப் புதிய சட்டசபையைக் கூட்ட வேண்டும் என்று கவர்னர் முடிவெடுத்து, இதனை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டுள்ளது.

எந்தக் கட்சி சர்க்கார் அமைத்தாலும் அது ஸ்திரமாக இராது என்ற அபிப்பிராயத்தில் கவர்னர் எந்தக் கட்சித் தலைவரிடமும் மந்திரி சபை அமைக்கும் பொறுப்பைத் தராமல், ராஷ்டிரபதி ஆட்சிக்கு வழி செய்துவிட்டார். மந்திரிசபை ஸ்திரமாக இருப்பதும் இராததும் சட்டசபையில் முடிவாக வேண்டிய விஷயங்கள். ஒரு மந்திரி சபையிடம் நம்பிக்கை உள்ளதா இல்லையா என்று வாக்குத் தரச் சட்ட சபையாளருக்குள்ள உரிமையின் மீதே அம் மந்திரிசபை நீடிக்கப்படவோ கலைக்கப்படவோ வேண்டும். 'சட்டசபையாளர்கள் கட்சி மாறிக் கொண்டேதான் இருப்பார்கள்; எனவே யார் மந்திரி சபை அமைத்தாலும் அது உறுதியாக நிற்காது' என்ற கருத்தில், அதாவது சர்க்காரின் ஸ்திரத்தன்மையை முன்னிட்டுச் சட்ட சபையாளரின் உரிமையைப் பறிமுதல் செய்து ராஷ்டிரபதி ஆட்சியை கவர்னர் ஏற்படுத்தினது நியாயமா என்பதே கேள்வி. கவர்னர் என்பவர் மத்திய சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டு, அதனிடமிருந்து மணிக்கு மணி உத்தரவுகள் பெற்று அதன் ஏஜெண்டாகவே செயல்படுவதை நாம் பார்த்து வருகையில், அவர் இவ்வாறு சட்ட சபைக்கு அதீதமாக முடிவெடுத்து மத்திய சர்க்காருக்கு யோசனை தெரிவித்ததை வரவேற்பதற்கில்லை. இதற்கு மக்கள் சபையில் பெரும்பான்மையினரின் ஆதரவு கிடைத்துவிட்டதால் யுக்தமாகி விடாது.

சர்க்கார் அமைப்பதில் சட்டசபைக்கு அரசியல் சாஸனம் அளித்துள்ள உரிமையைச் சட்டசபையாளர்தான் பிரயோகிக்க முடியும். அதைக் கவர்னர் என்பவர் பார்வையாளராக வெறுமே கவனிக்கத்தான் முடியுமே யன்றி, தாமே குறுக்கிட்டுச் 'சர்க்காரின் ஸ்திரத் தன்மை' என்ற பெயரில் முடிவு செய்யலாகாது.

உ. பி.யில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டதை எதிர்த்து மக்கள் சபையில் நடந்த வெளிநடப்பில் சுதந்திரக் கட்சி சேரவில்லை. இதனால் அரசியல் சாஸனம் சட்ட சபைக்கு அளித்துள்ள அடிப்படை உரிமைகளைச் சுதந்திரக் கட்சியினர் வலியுறுத்தாமல், கவர்னரின் நடவடிக்கைக்கு ஆதரவு தந்துவிட்டதாகப் பொருளாகாது. உத்தரப் பிரதேசத்தில் உருவாகி வந்த சூழ்நிலை குறித்து மற்ற பல அம்சங்களில் சுதந்திரக் கட்சி அதிருப்தி அடைந்திருந்தது. அதனாலேயே மக்கட் சபை வெளி நடப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஒரு விதத்தில் பார்த்தால், சட்ட சபை மூலம் ஆட்சி புரியும் ஜனநாயகத்தில் சர்க்கார்கள் தங்களது ஸ்திரத்தன்மையில் உத்தரவாதம் பெறாதிருப்பதே ஒரு நல்ல அம்சம் எனலாம். எந்த நிமிடமும் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்படலாம் என்ற பயம் இருப்பதே நிர்வாகத்தினர் விழிப்புடன் செயலாற்றுவதற்கு ஒரு தூண்டுகோலாக இருக்கும். கட்சி மாற்றத்தைக் குற்றமாக்குவதால் அரசாங்கம் தனது பலம் என்றும் குறையாது என்ற திருப்தியில் விழிப்புணர்ச்சியை விட்டுச் சொஸ்தமாகத் தூங்க முடியும்!

ராஜாஜியின் கருத்துக்கள்

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதல் விஷயமாக விசாரணை செய்வதற்கு ஹைகோர்ட் நீதிபதியை நியமிப்பது குறித்து, திரு அண்ணாதுரை அவர்கள் வெளி நாடு செல்லு முன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இவ்விஷயத்தில் தமிழக அரசாங்கம் பட்சபாதத்துடன் செயலாற்றுகிறது என்று குற்றம் சாட்டப்பட்டதை மனத்தில் கொண்டு நான் முதல் மந்திரிக்கு யோசனை தெரிவித்து எழுதியிருந்தேன். அவர் நியமனம் செய்துள்ள ரிடையராகவிருக்கும் மாவட்ட நீதிபதிக்குப் பதிலாக ஹைகோர்ட் நீதிபதி ஒருவரை நியமிக்குமாறு வற்புறுத்தி எழுதியிருந்தேன். இதற்கு ஒரு பதிலும் வராத பின்னர், இவ்விஷயமாக 'ஸ்வராஜ்யா'விலும் எழுதினேன். என் யோசனையை முதன் மந்திரி ஏன் புறக்கணித்தார் என்று அவரிடம் கேட்டனுப்பினேன். அவர் எனக்குத் தந்த விளக்கத்தில், எனது யோசனையைத் தாம் புறக்கணிக்காததாகவும், நான் அவருக்கு எழுதியவுடனேயே பிரதம நீதிபதியுடன் தொடர்பு கொண்டு, ஹைகோர்ட் நீதிபதி ஒருவரை இவ்விசாரணைக்குத் தந்து உதவுமாறு கேட்டதாகவும் இக் கோரிக்கையைப் பிரதம நீதிபதி ஏற்காததாகவும் தெரிவித்தார்.

வெளி நாடு கிளம்பு முன் முதன் மந்திரி வெளியிட்ட அறிக்கையில் இதையெல்லாம் அவர் தெளிவுபடுத்தாததற்காக வருந்துகிறேன். இதையெல்லாம் தெளிவு செய்யுமாறு முன்பே அவரை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அவரும் அப்படிச் செய்வதாகச் சொல்லியிருந்தார். ஆனால் தானே 'இரண்டாம் கை' விஷயமாக இதையெல்லாம் சொல்லுமாறு விட்டு விட்டார். வக்கீலாகப் பயிற்சி பெற்றுள்ள எனக்கு இது மகிழ்ச்சி தரவில்லை. பாதிக்கப்பட்ட மாணவர்களும், பொதுமக்களில் ஒரு பெரும் பகுதியினரும், நானும் ஹைகோர்ட் நீதிபதி இவ்விஷயத்தைக் கையாளுவதையே சிலாக்கியமாகக் கருதியிருப்போம். ஏனெனில் இது சர்க்காரின் நடுநிலைமையையே சந்தேகிக்கும் விஷயமாகும்.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீ சோமசுந்தரம் அவர்கள் அச்சம், தாட்சண்யமின்றி விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நீதி கிட்டும் வகையில் அறிக்கை வெளியிடுவார் என நம்புவோமாக.

* * *

ஹைகோர்ட்டுகளில் ஆங்கில மொழியே இப்போதைக்கு நீடிக்க வேண்டும் என்று இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இவ்விஷயமாகக் கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களையெல்லாம் 'ஹிந்து'ப் பத்திரிகை தனது தலையங்கத்தில் எடுத்துக் காட்டியுள்ளது. சட்டம் செய்வதிலும், உயர்நீதிமன்ற நடப்புகளிலும் ஆங்கிலத்தையே நீடிக்க வேண்டும் என்பதற்கு 'ஹிந்து' அழுத்தந் திருத்தமாகக் கூறும் காரணங்கள் உயர் கல்வி, மத்திய நிருவாகம் இவற்றுக்கும் முற்றிலும் பொருந்தும்.

போதனை, நிருவாக மொழிகளைக் கட்டாயத்தின் மீது மாற்றுவதால் நமது பிரதேச மொழிகள் வளர்ச்சியோ வளமோ பெற்றுவிடா. நவீன ஸயன்ஸ்களிலும், மற்ற விஷயங்களிலும் நல்ல தகுதி பெற்றவர்கள் பொதுமக்கள் விரும்பும் வகையில் சிறுகச் சிறுகப் பிரதேச மொழிகளில் நூல்கள் எழுதுவதால்தான் பிரதேச மொழிகள் வளர்ச்சியும் வளமும் பெறும். வெறும் மொழிபெயர்ப்பாளர்களும் பண்டிதர்களும் இவ்விஷயத்தில் உதவ முடியாது. சர்க்காரின் ஆதரவையும் மானியத்தையும் சார்ந்திராமல், பொதுமக்களே ஆதரிக்கும் முறையில் நூல்கள் தயாரிக்கக்கூடியவர் தெளிவாகவும் நம்பகமாகவும் உள்ள நூல்களைத் தயாரிக்க வேண்டும். ஒரு மொழியிடம் பற்றுதல் கொண்டதால் மட்டும் தெளிவும் நம்பகமான தன்மையும் உண்டாகிவிடாது. இதற்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களில் பூரண ஞானம் அவசியமாகும்.

* * *

அமெரிக்க ஜனாதிபதி கென்னடிக்கும், மதிப்புக்குரிய மார்டின் லூதர் கிங்குக்கும் நேரிட்டதை முன்னிட்டு ஜப்பான் பிரதமர் ஸாடோவின் ஜாகையின் ஜன்னல்களைக் குண்டு ஊடுருவாத பொருட்களால் அமைத்துப் பாதுகாப்புச் செய்கிறார்கள். இவ்வீட்டின் சுற்றுப்புறத்தில் உள்ள விண்ணளாவும்

காமகோடியின் கருணைமொழி

முன்பு லஞ்சம், பொய் எல்லாம் இவ்வளவு இருந்த இல்லை. ஜனநாயகம் வந்தபிறகு இப்பொழுது லஞ்சம், பொய் முதலியவை நிறையக் காண்கின்றன.

ஆண்டவன் அருளால்தான் உலகம் நடக்கிறது என்பதை மனத்துள் கொண்டால்தான் இவை விலகும். பக்தி இல்லாமல் கல்விப் பயனில்லை. இப்பொழுதுள்ள கெடுதலெல்லாம் பக்தியற்ற கல்வியால் விளைந்தவைதாம்.

நம் தவறுகளை உணர்ந்து ஆண்டவனிடம் சொல்லி மன்னிப்புக் கேட்க வேண்டும். நம் மக்கள் திருந்தி, தெய்வ பக்தி, அநுஷ்டான ஒழுக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து வந்தால் உலகையே ஜயித்துவிட முடியும். நாம் ஒழுக்கத்துடனும் அநுஷ்டானத்துடனும் இருந்தால்தான் நமது பெருமை உலகில் பிரகாசிக்கும்.



அடுக்கு மாளிகைகளிலிருந்து இவ்வீடு நோக்கித் தொலை நோக்கித் துப்பாக்கியால் எளிதில் சுட்டுவிட முடியும் என்பதால் இவ்வாறு காபந்து செய்யப்படுகிறது. ஜன நாயகத்தோடு கூட குண்டு துளைக்காத தடுப்பு ஜன்னல்களும் நிலைத்து விட்டன! 'கொலை சாஸ்திரத்'தின் வாழ்வுக்குப் புதுக் குத்தகை அளிக்கப்பட்டிருக்கிறது.

உயர் பதவிகள், அதிகாரப் பசி கொண்ட அரசியல் வாதிகளின் கவனத்தைக் கவர்கின்றன. இந்த அரசியல் வாதிகள் அறிவற்ற இளவயதினரின் கவனத்தைக் கவர்கின்றனர். இந்த அறிவற்ற இளைஞர்களுக்கு வாழ்க்கையில் நல்ல குறிக்கோள் எதுவும் இருப்பதில்லை. வழக்கத்துக்கு விரோதமாக எதையாவது செய்து அதிலிருந்து பரபரப்பு பெறவே இவ்விளைஞர்கள் விழைகிறார்கள். நுணுக்கம் வாய்ந்த நவீன கால ஆயுதங்களை இவர்கள் வாங்கித் தகாத போக்கில் சென்று பரபரப்புக்குரிய காரியத்தில் ஈடுபடுகிறார்கள். 'அபிவிருத்தி' யடைந்த ஆயுதங்கள்தாம் பல விதத்திலும் நாகரிக சமுதாயத்தை நாசமாக்கி வருகின்றன.

மதம் என்பது மூட நம்பிக்கை என்று நினைத்து மதத்தை விட்டுவிடுகிற ஜனநாயகங்களிலெல்லாம் இயற்கைக் காற்றை உள்ளே புகவிடாத குண்டுத் தடுப்பு ஜன்னல்களும், குண்டு நுழையாத கார்களும், பாதுகாப்புக்காகப் பெரிய ஏற்பாடுகளும் இருந்தாக வேண்டியதுதான். எல்லாத் தலைகளையும் ஒருபோல் எண்ணுகிற ஜனநாயகத்தால் தலைகளைச் சீவுகிற கொடுமை போகும் என்று கருதப்பட்டது. ஆனால் தனி மனிதர்களின் வெறித்தனத்தையும், இளைஞர்களை உருவாக்குவதில் உள்ள அடிப்படைத் தவறுகளையும் யாரும் எண்ணிப் பார்க்கவில்லை. இவற்றை இன்னும் சமாளித்தாகவில்லை.


கீகீகீ

மார்டின் லூதர் கிங்கின் கொலையோடு அவர் தம் வாழ்வை அர்ப்பணித்திருந்த அஹிம்சைக் கொள்கையும் முடிந்தது என்று 'டை வெல்ட்' பத்திரிகையில் ஹீன்ஸ் பார்த் எழுதியுள்ளார். 'இனி வெள்ளையரையும் கருப்பரையும் சமாதானப் பாதையில் இணைப்பது பற்றிப் பேசுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதுதான்' என்கிறார் அவர். நான் எங்கோ தொலைவில் தள்ளி இந்தியாவில் இருக்கிறேன். அமெரிக்காவில் நடைபெறுவது பற்றிப் போதிய விஷய ஞானம் எனக்கில்லை. என்றாலும் டை வெல்ட்டின் கருத்து அவநம்பிக்கைச் சித்தாந்தத்தில் பிறந்தது என்று உறுதியாக நினைக்கிறேன். டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் மரணத்தோடு சமாதான இணைப்பில் உள்ள நம்பிக்கையும் மரணமடைய வேண்டியதில்லை. டாக்டர் கிங்கைக் கொன்ற வெள்ளையன் வெள்ளையரின் பொது உணர்ச்சிக்குப் பிரதிநிதி அல்ல. ஏதோ ஒரு காரியத்தில் வெற்றி பெற்றுப் பிரபலமாகிவிட வேண்டும் என்பதில் அமெரிக்கர்களுக்குள்ள வெறியே இவனிடம் ஒரு வியாதியாக மாறுபாடு அடைந்திருக்கிறது. 'ஒன்று நீயே பெரியவனாக ஆவாய்; அல்லது பெரியவனாக உள்ள ஒருவனைக் கொல்லுவாய்' என்பதுதான் இந்த வெறி வியாதியின் சூத்திரம். பெரிதாக ஏதோ செய்து பெரியவனாக வேண்டும் என்ற அவனது ஆசை கிங்கைக் கொலை செய்ததோடு அவனை விட்டு விலகிவிட்டது. தன் உயிரைக் காத்துக்கொள்ளும் ஆசை அவனைப் பற்றிக் கொள்ள அவன் தப்பி ஓடி விட்டான். தர்மாதர்மம் பார்க்காமல் வெற்றியை மட்டும் கருதும் அமெரிக்கச் சித்தாந்தத்தின் திரிபை அவனிடம் காண்கிறோம். இதற்கு மேல் சொல்வதற்கில்லை.

நன்மை பிறப்பதற்கு டாக்டர் கிங்கின் உயிர்த் தியாகம் ஒரு புதிய மையமாக அமைய முடியும். இச்சமயத்தில் அமெரிக்காவிலுள்ள வெள்ளையர் கருப்பர் இரு சாராருமே ஆபிரஹாம் லிங்கன் காலத்திய அமெரிக்கா எதற்காக உள்நாட்டுப் போராட்டம் செய்ததோ அதை ஆழ்ந்து சிந்தித்து உன்னி உணருவார்கள். ஆபிரஹாம் லிங்கன் காலத்தில் நடந்ததும் அமெரிக்காவுக்கு நிரந்தரப் பெருமை கூட்டியதுமான உள் நாட்டுப் போரின் உட்கிடைகளை ஒரு வெறி வியாதிக்காரனின் பிராணுபத்து விளைவிக்கும் துப்பாக்கி அழித்து விடுவதற்கு அமெரிக்க வெளுப்பர் — கருப்பர் இருவருமே அனுமதிக்க மாட்டார்கள்.

காஞ்சியில் ஆசாரியாள் ஜயந்தி

அத்வைதமாகிய அமுத தத்துவத்தை நிலைநாட்டிய மகான் ஆதி சங்கர பகவத்பாதர்களின் திரு அவதார தினம் மே 2ந் தேதி நிகழ்கிறது. அவர் ஸ்ரீசக்ரம் பிரதிஷ்டை செய்த ஸ்தலமும், சர்வக்ஞ பீடம் ஏறிய பதியும், ஸ்ரீ காமகோடி பீடத்தை ஸ்தாபித்த க்ஷேத்திரமும், விதேக கைவல்யம் எய்திய முக்தி நகரமுமாகிய காஞ்சிபுரத்தில் இந்த ஜயந்திக்கு விசேஷமுண்டு. அங்கு ஸ்ரீ காமாட்சி அம்மையின் ஆலயத்தில் எழுந்தருளும் ஸ்ரீ சங்கர பகவத்பாத மூர்த்தத்துக்கு 28–4–1968 முதல் 10–6–1968 வரை லட்சார்ச்சனை நடைபெறுகிறது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஆக்ஞையின் மீது இப் புனித காரியம் நடக்கிறது. ஆஸ்திகர்கள் இதில் பங்கு பற்ற வேண்டுமென்று நாம் கூறவேண்டுவதே இல்லை. லட்சார்ச்சனையில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்கள் பெயர், கோத்திரம், நட்சத்திரம் தெரிவித்து அடியில் கண்ட முகவரிக்கு ரூ. 6 அனுப்பி வைக்க வேண்டும்: பொக்கிஷதார், ஸ்ரீ சங்கர பக்த ஜனசபை, 116–ஏ, ராஜ வீதி, காஞ்சிபுரம்.



கல்யாணி என்று வரலாற்றுக் காலத்தில் அழைக்கப்பட்ட களனி என்ற ஊரில் உள்ள இந்தப் பௌத்த ஆலயத்தில் தமிழர்கள் கலாசாரமும் பௌத்தர்கள் கலாசாரமும், இணைந்து பரிமளிக்கின்றன.

விபீஷணன் வழிவந்த மாணிக்க ரக்ஷிதன் என்ற மன்னன் அழைப்புக்கு இணங்கப் புத்தர் பெருமான் இந்த இடத்துக்கு வந்ததால் இந்த இடத்தை வணக்கத்துக்குரிய இடமாக்கிக் கலைவண்ணம் மிகுந்த ஆலயத்தை அவன் எழுப்பினான் என்பது ஐதிகம்.

கோயில் உள்ளே திருமாலுக்குத் தனிச் சன்னதி உண்டு. விஜயன் இலங்கைக்கு வந்த வரலாறு முதல் சிங்கள சரித்திரத்தின் பல சுவையான பகுதிகளை இங்கு வண்ண ஓவியமாகக் காணலாம். வெளிப் பிராகாரத்தை வலம் வரும்போது விநாயகப் பெருமான் அவரை அடுத்து லக்ஷ்மணன், விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்யும் திருக்கோலக் காட்சி இவை சிந்தை கவரும் சிற்பங்களாய்த் திகழ்கின்றன. அசோகன் மைந்தன் பௌத்த மதத்தோடு இலங்கைக்குக் கொண்டுவந்த அரச மரம் இங்கு பெருமரமாக வளர்ந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உறவுச் சின்னமாக ஓங்கி நிற்கிறது.

— கே. வி. எஸ். மோகன்



வாட்டத்தில் மலர்ந்த ஆற்றல்

டி. டி. விஜயராகவன்

(ஏப்ரல் 26ம் தேதி கணிதமேதை ராமானுஜத்தின் நினைவு நாள்)

இளம் சந்ததிகளுக்கு ராமானுஜன் ஒரு பெரிய கணித மேதை என்று தெரியுமே அல்லாது அவருடைய வாழ்க்கையைப் பற்றிய பல சம்பவங்களைத் தெரிந்து கொள்வதற்கு அதிக வாய்ப்பில்லை. இந்தப் பெரிய குறையைப் பூர்த்தி செய்யும் வகையில் வெகு சுவையாகவும் இதயத்தை உருக்கும் வகையிலும் புத்தக ரூபமாக *ராமானுஜத்தின் சரிதையை நமக்கு அளித்திருக்கிறார் பேராசிரியர் எஸ். ஆர். ரங்கநாதன்.

ரங்கநாதன் அவர்கள் லைப்ரரி ஸயன்ஸில் பெரிய நிபுணர். சென்னை ராஜதானிக் கல்லூரியில் அவர் கணித ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார். சென்னை பல்கலைக் கழகத்தில் ராமானுஜனைப் பற்றிப் பல விவரங்களைச் சேகரித்தார், இங்கிலாந்துக்குச் சென்று முக்கியமான தகவல்களைத் தொகுத்தார். மேலும், ராமானுஜனுடைய விலை மதிக்க முடியாத குறிப்புப் புத்தகங்களையும் (Notebooks) கொண்டு வந்து அவைகளைப் பிரகரிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளார். தவிர, ராமானுஜத்தினிடம் நெருங்கிப் பழகின நண்பர்களுக்குக் கடிதம் எழுதி இதுவரையில் தெரியாத பல விவரங்களைச் சேகரித்துத் தந்திருக்கிறார்.

ராமானுஜன் ஈரோட்டில் 1887, டிசம்பர் 22ந் தேதி பிறந்தார். அவர் 1920 ஏப்ரல் 26ந் தேதி சென்னையில் காலமானார்.

அவருடைய இவ்வுலக வாழ்க்கை முப்பத்திரண்டு வருடங்களே. இறைவனுக்கு யாரிடம் விருப்பம் அதிகமோ அவர்களை விரைவாகத் தன்னிடம் அழைத்துக் கொள்கிறான் என்பது ஆங்கிலப் பழமொழி. இதை நிரூபிக்கும் பொருட்டோ என்னவோ இம்மேதையை ஆண்டவன் அதிக காலம் வாழவிட விரும்பவில்லை. ஆனால் இந்தக் குறுகிய காலத்துக்குள் அவர் கணிதத்துக்குச் செய்த அரும் பெரும் சாதனைகள் அவரை அமரர் ஆக்கிவிட்டன.

இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது ஒரு முக்கியமான விவரம் தெளிவாகிறது. ராமானுஜன் கணித சாஸ்திரத்தில் காட்டிய ஆர்வம் பணத்துக்காகவோ அல்லது தாம் ஒரு மேதையாகத் திகழ வேண்டும் என்பதற்காகவோ இல்லை. சரஸ்வதியின் பூரண அனுக்கிரகத்தைப் பெற்றிருந்ததால், கணித சாஸ்திரத்தின் உண்மை சொரூபத்தையும் அழகையும் ஊடுருவிப் பார்க்க ஆவல் கொண்டிருந்தார். அவர் ஒரு வேதாந்தி. கடவுளிடம் அபார பக்தி உள்ளவர். அவருடைய இஷ்ட தேவதைகள் நரசிம்மரும் நாமகிரித் தாயாரும். வேதங்களையும், இதிகாசங்களையும் எவ்வளவு நன்றாகப் பயின்றவர் என்பது அவரது நண்பர்கள் கொடுத்திருக்கும் தகவல்களிலிருந்து நன்றாகத் தெரிய வருகிறது. அவர் கணித சாஸ்திரத்தில் காட்டிய ஆற்றல் அறிவை மட்டும் ஒட்டியதல்ல. அத்துடன் உள்ளுணர்வும் (Intuition) இயங்கியது.

ராமானுஜத்தின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது அவர் தமது இருபத்தாறுவது வயது வரை வறுமையினால் எப்படி வாடினார் என்பதை அறியும் போது சொல்ல முடியாத சோகம் ஏற்படுகிறது. ஆனால் அந்த வாட்டத்திலே தான் அவரது ஆற்றல் மலர்ந்தது! அவர் சென்னை போர்ட் டிரஸ்டில் வேலையாக இருக்கும்போது சாமான் மீது சுற்றப்பட்டு வரும் துண்டுக் காகிதங்களைச் சேர்ப்பது வழக்கமாம். ஒரு சமயம் அவர் நண்பர், "நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டபோது, "காகிதங்களைச் சேகரிக்கிறேன். கணக்குகள் போடுவதற்கு என்னிடம் காகிதம் இல்லை" என்று சொன்னாராம். பல சமயங்களில் காகிதம் கிடைக்காததால் ஏற்கனவே எழுதப்பட்ட காகி

* RAMANUJAN: The Man and the Mathematician. By S. R. Ranganathan. Asia Publishing House, Bombay. Price: Rs. 18.

சிற்பக்கலையும் சித்திரக்கலையும் கலந்த அந்தப் பிரும்மாண்டமான கலைப் படைப்பு எங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது என்று யோசிக்கிறீர்களா? சென்னை மவுண்ட் ரோட்டிலுள்ள ராஜி பில்டிங்கின் வெளிச் சுவரில் அந்த வேலைப்பாட்டை நீங்கள் பார்க்கலாம்.

பொருளடக்கப் பகுதிக்குப் படம் அனுப்பியவர்: க. கண்ணன்

தத்தில் சிவப்பு மையில் பேனாவைத் தோய்த்துக் கணக்குகளைப் போடுவாராம்.

கும்பகோணம் கல்லூரியில் படிக்கும் போது, கோட்டுக்கு அடியில் சட்டையே இருக்காதாம். பிறகு சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும் போது, ஒரு நாள் வழக்கமாக அணியும் குல்லாய் காற்றில் பறந்து விட்டது. ஆசிரியர் சைனுபஜாரில் வேறொரு குல்லாய் வாங்கிக் கொண்டு வரச் சொன்னார். மிகுந்த சங்கோசத்துடன் தம்மிடம் குல்லாய் வாங்குவதற்குப் பணம் இல்லை என்று பதில் சொன்னார் ராமானுஜம். அப்பொழுது ஒரு குல்லாய் விலை எட்டணா!

இவ்வளவு வறுமையிலிருந்த போதிலும், பிறரிடமிருந்து பணம் வாங்கிக் கொள்ள அவர் விரும்பவில்லை. இதை ஒட்டித்தான் அவரிடம் அக்கறை காட்டிய பல பெரியவர்கள் மிகவும் முயன்று அவருக்குச் சென்னை போர்ட் டிரஸ்டில் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்தார்கள். பின்னால் அவருக்குப் பண வசதி ஏற்பட்ட போதிலும், அவர் பணத்துக்கு அடிமையாகவில்லை. அவர் இறப்பதற்கு இரண்டு வருடங்களுக்குமுன் அவருக்கு வருடம் 500 பவுண்டுகள் கிடைப்பதற்கான வசதி ஏற்பட்டிருந்தது. இருநூற்றைம்பது பவுண்ட்கள் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிலிருந்தும் இருநூற்றைம்பது பவுண்டுகள் சென்னை சர்வகலாசாலையிலிருந்தும் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தத் தொகை தமது தேவைக்கு அதிகம் என்று கருதிச் சென்னை சர்வகலாசாலைக்குத் தாம் எழுதிய கடிதத்தில் தம் செலவுக்குப் போகப் பாக்கிப் பணத்தை ஏழை மாணவர்களுக்கு உபகாரம் செய்யும் வகையில் பயன்படுத்தினால் நலம் என்று குறிப்பிட்டிருந்தார்.

ராமானுஜத்தின் வாழ்க்கையில் சில முக்கியமான கட்டங்களைக் குறிப்பிட வேண்டும். 1903ல் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் முதலாவதாகத் தேறியதும் கும்பகோணம் கல்லூரியில் எப். ஏ. வகுப்பில் சேர்ந்தார். கணிதத்தில் ஏற்பட்ட ஆவலினால் அவர் மற்ற பாடங்களில் அக்கறை காட்டவில்லை. முதல் வருடப் பரீட்சையில் தேறவில்லை. பின் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். அங்கேயும் அதே அநுபவம்தான். எப். ஏ. பரீட்சையில் தேற முடியாமல் போனாலும் அவர் மனம் தளரவில்லை. 1907-11 வரை அவர் ஓயாமல் யாருடைய உதவியும் இல்லாமல் கணித ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஆனால் எவ்வளவு காலம் குடும்பப் பொறுப்பை ஏற்காமல் இருக்க முடியும்? இதற்குப் பின்தான் அவர் சென்னை போர்ட் டிரஸ்டில் ரூ. 25 சம்பளத்தில் குமாஸ்தாவாக அமர்ந்தார். அவருடைய ஆர்வத்தையும், ஆழ்ந்த ஞானத்தையும் அறிந்து சில பெரியோர்கள் தீவிரமாக முயன்று சென்னை சர்வகலாசாலையில் கணித ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு வழி செய்தார்கள். அவருக்கு ரூ. 75 உபகாரச் சம்பளம் கொடுப்பதாகச் சர்வகலாசாலை தீர்மானித்தது. ஆனால் அத்துடன் நிற்காமல் அவர் பெரிய மேதையாகத் திகழ்வார் என்பதை உணர்ந்து அவரை எப்படியாவது இங்கிலாந்துக்கு அனுப்ப வேண்டும் என்று தீர்மானித்து அதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்தார்கள்.

அப்பொழுது கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் இருந்த ஜி. எச். ஹார்டி (G. H. Hardy) அவர்களுக்கு ராமானுஜனே ஒரு கடிதம் எழுதித் தாம் செய்த கணித ஆராய்ச்சியின் சில பகுதிகளை அவருக்கு அனுப்பி வைத்தார். இதைப் பார்த்து வியந்த ஹார்டி மிகுந்த அக்கறை காட்டி ராமானுஜன் கேம்பிரிட்ஜில் சேருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்யலானார்.

இது ராமானுஜத்தின் வாழ்க்கையில் பெரிய திருப்பம். அந்தக் காலத்தில் ஆசாரத்தில் மூழ்கியிருந்த குடும்பத்தில் ஒருவர் இங்கிலாந்துக்குச் செல்வதென்றால் பல தொல்லைகள். எப்படியோ முயன்று ராமானுஜன் 1914 மார்ச் 14ந் தேதி இங்கிலாந்துக்குப் பயணமானார். அங்கு போய்ச் சேர்ந்ததும் பல வழிகளில் அவருக்கு இங்கிலாந்தின் வாசம் தொல்லைகளை உண்டாக்கியது. முக்கியமாக உணவு விஷயத்தில் அவர் வெகுவாகச் சிரமப்பட்டார். அவர் தாமே தம் உணவைத் தயாரித்துக் கொள்வது வழக்கம். இதைப் பற்றி முன்னாள் நிதி மந்திரி ஸி. டி. தேஷ்முக் அவர்கள் குறிப்பிடும்போது அவர் செய்த ரசத்தைத் தாம் பருகியதைச் சொல்கிறார்.

இவ்வளவு தொல்லைகளுக்கும் மத்தியில் ராமானுஜன் கணித சாஸ்திரத்தில் பல பெரிய சாதனைகளைச் செய்து முடித்தார். பல கௌரவங்கள் அவருக்கு அளிக்கப்பட்டன. முப்பதாவது வயதில் ராயல் சொஸைட்டி (Fellow of the Royal Society) யின் 'பெல்லோ'வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்துதான் சென்னை சர்வகலாசாலையும் அவருக்கு நிரந்தரமாக வசதி செய்வதற்குத் தீர்மானித்தது.

ஆனால் துர்ப்பாக்கியவசத்தினால் ராமானுஜத்தின் உடல்நிலை சீர்கெட்டது. அது க்ஷயம் என்று உறுதிப்பட்டது. இங்கிலாந்தில் இருக்க முடியவில்லை. 1919 மார்ச் 27ந் தேதி தாய்நாடு திரும்பினார். அதற்குப்பின் அவர் அதிக காலம் இருக்கவில்லை. முப்பத்திரண்டாவது வயதில் காலமானார்.


ராமானுஜத்தின் ஆராய்ச்சி விவரங்களைச் சீரிய முறையில் அச்சிட்டுப் பரவச் செய்வதே அவரது நினைவைச் சிறப்பான முறையில் கொண்டாடுவதாகும். கணித உலகில் மேலும் பல ராமானுஜன்கள் தோன்ற இப்பணி உதவும்.

நிஜமாயிருக்கிறதா?

மது அரக்கன் ஒழிந்தான்!

நந்தலால்


கீதாசாரியனான கண்ணன் ஒரு நரகாசுரனை வதம் செய்தார். 'கண்ணன் காட்டிய வழி'யை உபதேசித்த ஆச்சாரியனே மற்றொரு கொடிய அரக்கனை வதம் செய்யும் வழியைக் காட்டிவிட்டார். மதுவிலக்கு அமுலில் மற்ற ராஜ்யங்களுக்கெல்லாம் வழி காட்டிய பெருமை 1937ல் ராஜாஜியை முதன் மந்திரியாகக் கொண்ட சென்னை மாகாணத்துக்கே உரியதாகும். 1937 அக்டோபர் 1ந் தேதி சேலத்தில் மதுவிலக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. செப்டம்பர் 30ந் தேதி குடியர்கள் ஆசை தீரக் குடித்துத் தொலைத்தார்கள். அன்று நடுநிசியில் சேலம் மாவட்டத்திலுள்ள ரெவின்யூ அதிகாரிகள் எல்லாக் கள்ளுக் கடைகளையும் பூட்டி ''ஸீல்'' வைத்துவிட்டனர்.



அன்றைய மதுவிலக்குத் திட்டத்தில், மதுக்கடை டீக்கடையாக மாறியது. பிரதம மந்திரி ராஜாஜி அந்தத் தேநீர்க் கடையில் தேநீர் பெறுகிறார். ★

போலீஸ்காரர்களில் யாருக்கெல்லாம் குடிப் பழக்கம் உண்டோ அவர்களையெல்லாம் ராஜாஜி முதல் காரியமாக வேறு மாவட்டத்துக்கு மாற்றிவிட்டார். பத்து நாட்கள் ராஜாஜி தம் சகாக்கள் திரு வி. ஐ. முனுசாமி பிள்ளையுடனும், திரு ராமநாதனுடனும் சேலம் மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார். கள்ளுக்கடை இருந்த இடங்களெல்லாம் வாசசாலைகளாகவும், கிராம மக்களின் பொழுதுபோக்கு நிலையங்களாகவும் மாற்றப்பட்டன. மதுஅரக்கன் கொடும்பாவிகளைக் கிராம மக்கள் குதூகலத்துடன் எரித்தார்கள்.

மூன்றே மாதங்களில் லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் ஆச்சரியமான மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. இந்த ஆச்சரியமான மாறுதலை



மது அரக்கன் அழிக்கப்படுகிறான்.

ஆதாரபூர்வமாகவும் புள்ளி விவரங்களுடனும் ஆராய்ச்சி செய்வதற்காக அண்ணாமலை சர்வகலாசாலை நிர்வாகிகள் அனுப்பியிருந்த நிபுணரின் அறிக்கை மதுவிலக்கினால் மக்களுக்கு ஏற்படும் நலனை இந்தியா முழுதும் அறியச் செய்தது. மதுவிலக்கைத் தொடர்ந்து அமுல் நடத்தி வருவது தமிழகம்தான்.

துருவங்கள் சேர்ந்தால்....?

அண்ணாதுரை அவர்கள், கதா காலட்சேபம் செய்ய வருவார் என்று யாரும் கனவிலும் எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால் நடவாதது! நடந்துவிட்டால்...? இதோ ஒரு கற்பனை!



பலபீமா பலபீமா
அபார தவகுண மஹிமா...

ஆதௌ கீர்த்தனாரம்பத்திலே பகவானை வர் பக்த கோடிகளைப் பார்த்து என்ன சொல்லுறென்றால்,

ராம நாமம் பஜே – சீதா
ராம நாமம் பஜே

ன்னார். அந்த ராம நாமத்தைச் சதா சர்வதா நாமாவளிகளாலும் நாம சங்கீத கீர்த்தனங்களாலும் போற்றி வந்த சத்குரு தியாகராஜ சுவாமிகளின் சரித்திரத்தை இங்கே உபன்யாசிக்க இன்றைய நிகழ்ச்சியில் நானும் கலந்துகொள்ள நல் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த நண்பர்களுக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரிக் கரையிலே திருவையாறு திருவையாறுன்னு ஓர் அழகான கிராமம். அந்த ஊருக்குத் திருவாரூரிலிருந்து ராமப்பிரும்மம் ராமப்பிரும்மம்ன்னு பேருள்ள ஆந்திர நாட்டு "அந்தணர்" வந்து குடியேறினார். அவரே ஒரு பெரிய ராம பக்தர். பிழைப்பு உஞ்சவிருத்தி. தொழில் ராம நாம பஜனை. இவருடைய மூன்றாவது திருக் குமாரனாக அவதரித்தவர்தான் தியாகராஜர்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே காந்தாரமும், கனோசும், காமரூபமும், மாளவமும், கூர்ஜரமும், பிறவும் உருவாகாத நாட்களிலேயே அயோத்தியும், அஸ்தினபுரமும் காசியும் அரித்துவாரமும் திவ்ய க்ஷேத்திரங்களாகாததற்கு முன்பே பூம்புகாரும் கொற்கை தொண்டி, முசிறி என்னும் பல்வேறு துறை முகங்கள் கொண்டதாய் விளங்கியது எந்த நாடோ, எந்த நாட்டு முத்தையும் பவளத்தையும் பிற நாட்டுப் பேரரசர்கள் தமது காதலைப் பெற்ற கட்டழகியர்க்குக் காணிக்கையாக்கிக் களித்தனரோ, எந்த நாட்டுப் புலவர்கள் புவியாளுவோரையும் துச்சமென்று எண்ணி அறநெறிக்கு மக்களை அழைத்துச் சென்றனரோ, அத் தமிழ் நாட்டில் வாழ்ந்து, தெலுங்கில் இசை பாடி, பக்திப் பாதையில் வழி நடந்து முக்தியை அடைந்த தியாகராசரைப் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள்.

மகாத்மாவான தியாகராஜர் சொற்ப வயதுக்குள்ளேயே வேதாத்தியயனம் பூரணமாய் முடித்து வியாகரண வேதாந்த நியாய சாஸ்திரங்களிலும் ஜ்யோதிஷத்திலும் பாரங்கதரானார். படிப்புக்கேற்ற வினயமும் பித்ரு பக்தியும் அவரிடம் இருந்தன. தகப்பனார் கிழின கோட்டைத் தாண்ட மாட்டார்.

இந்தக் காலத்துப் பிள்ளையா? "மைடியர் ஃபாதர்! உங்களுக்கு வயசாயிடுத்து! இந்தக் காலம் ஜீன்ஸ், சல்வார், கமீஸ், டைட்ஸ் யுகம்! அனாவசியமாக மூக்கை நீட்டிண்டு வராதேயும். நான் ஒரு மேஜர்!"ன்னு பித்ரு பக்தியைக் காண்பிக்க! தந்தை வழியிலேயே நடந்தார் தியாகராஜர். ஸ்ரீராகவனைக் குறித்து முதல் பாட்டை எழுதித் தந்தை முன் சமர்ப்பித்தார். அப்புறம் ராம நாம கீர்த்தனங்கள் அவரிடமிருந்து அருவியாக ஊற்றெடுத்தன! அத்தனையும் சுந்தரத் தெலுங்கில்!

நமது தமிழ் மொழி தொன்மை மிக்கது. மென்மை மிக்கது. வளம் பெற்றது. வலிமை பெற்றது. வளமும் பொலிவும் வாய்ந்தது. தானும் வாழ்ந்து பிற மொழிகளையும் வாழ வைத்தது தமிழ்.

உலகில் எக்கோடியில் உள்ளவர்களாயினும் அவர்களைத் தன் தோழர்களாக்கிக் கொள்வது தமிழினம். எங்கிருந்து வந்தாலும் அவர்களை வாழ்த்தி வரவேற்றுப் போற்றிப் பாராட்டியது; பாராட்டுவது தமிழினம். எந்த நாட்டு மொழியாயினும், எவரால் பேசப்படுகின்ற மொழியாயினும் அதை

மதிப்பதிலும், அம்மொழி இலக்கியத்தைக் கற்பதிலும் தமிழன் என்றும் தயங்கினவன் அல்லன். இந்த வகையிலேதான் தியாக ராசர் தெலுங்கிலே இசை பாடி இருந்தாலும், அதன் பொருட் செறிவிற்காகவும் ஓசை நயத்துக்காகவும் போற்றிப் பாராட்டி நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

தியாகராஜரோட மூத்த தமையன்தான் ஜப்யேசன்! அவனை ஜல்ப்யேசன்னும் சொல்லுவா! ஒருவேளை அல்ப்யேசன் என்கிற பேரு தான் அப்படி மாறிவிட்டதோ என்னவோ! தம்பி தியாகராஜர் எத்தனைக் கெத்தனை ராம ஜபம் பண்ணினாரோ அத்தனைக்கத்தனை அண்ணன் ஜப்யேசன் பண ஸ்மரணை, ரூபாய் நாமாவளி பண்ணினான். தன் தம்பி தன் சங்கீத ஞானத்தைக் காசாக மாற்றாமல், காசு பெறாத பஜனையில் ஈடுபட்டிருக்கிறானே என்று அவனுக்குக் கோபம்.

காடுகளையும் கானாறுகளையும் ஓடைகளையும் அவை தம்மில் துள்ளும் மீன்களையும் குவளையையும், தாமரையையும், யானையையும் பெடையையும், செங்கால் நாரையையும் கருங் குயிலையும், கடுவனையும் மந்தியையும், மலர்ந்த பூக்களையும், உயர்ந்த தருக்களையும் காணும்போதெல்லாம் புலவர்கட்குக் கருத்து ஊற்றெடுத்திருக்கிறது. தியாகராசர் இவைகளெல்லாவற்றிலுமே இராமனைக் கண்டார். பக்தியில் மூழ்கினார். பாடல்கள் இயற்றினார். வருங்காலத்துக்கு வழங்கினார்.

அப்போதைய மன்னன் சரபோஜி தியாகராஜர் பெருமையையும் புகழையும் கேள்விப்பட்டுத் தன் அவைக்கு அவரை அழைத்துவர ஆட்களை அனுப்பினான். ராயல் ஆர்டர் பறந்தது. அவர் வாய்மொழியாகத் தன் புகழ்மொழி கேட்க ஆசைப்பட்டான், மன்னன்! அந்தக் காலத்து ராஜாக்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் யாராவது வந்து அடிக்கடி அவர்களுடைய புகழ், கீர்த்தி, மூதாதையர் பெருமை எல்லாவற்றையும் ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இல்லாத போனால் அவாளுக்கு அதெல்லாம் மறந்து போயிடும்!


நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்த நாரீமணியை ஒரு 'பூதம்' சிறையெடுத்துச் சென்று யாரும் நுழைய முடியாத காட்டிலே இருந்த 'மாய மாளிகை'யில் சிறை வைத்துப் பொன்னும் பொருளும் கொட்டிக் காட்டிப் புன்னகை தந்தால் போதுமென்று கேட்க, 'நவநிதி கொடுத்தாலும் என் நாதனை நான் மறவேன்' என்று அந்த நாரீமணி சொன்னதாகக் கதைகளில் படிக்கிறோமல்லவா? தியாகராசரும் நவநிதி கொடுத்தாலும் ராமனைப் பாடும் வாயால் ராசனைப் பாட மாட்டேன் என்று சொல்லி விட்டார்!

ராஜா கொஞ்சம் கெடுபிடி பண்ணினான். போலீஸ் ஆக்ஷன் கூட எடுத்தான். கடைசியாக, அவன்கிட்டே தியாகராஜர் வரலே! தீராத வயிற்று வலி வந்தது. டாக்டர்கள் வந்தா! பஸ்மமும், சூர்ணமும் தந்தா! வயிற்று வலி அப்படியே இருந்தது!

ராஜா கடைசியிலே தன் தப்பை உணர்ந்து மனம் உருகின போதுதான் அந்த வயிற்று வலி 'குட்பை' சொல்லி விட்டுப் போச்சாம்!

தியாகராஜர் அரசருடைய சன்மானத்தின் மூலம் வரும் தனம் விசேஷமா, ராம பஜனை விசேஷமா என்ற ஆராய்ச்சியில் இறங்கி, 'நிதி சால ஸுகமா' என்று பாடிக் கொண்டிருந்தார்!

குடும்பம் வயிறு வாடும் நேரத்தில் தம்பி நடுத் தெருவில் பஜனை செய்து நாமாவளி பாடிக் கொண்டு வருவதைக் கண்டு அண்ணன் ஜப்யேசன் வெகுண்டு எழுந்து இழிமொழியும் பழிச்சொல்லும் வீசினான். இதயத்தில் ஈட்டி கொண்டு தாக்கினான். மனத்தைப் புண் செய்தான். குடும்பப் பாசம் என்ற மருந்தைக வினே கொட்டிக் கவிழ்த்தான். தம்பி வழிபட்டு வந்த ராமனின் சிலையையே தூக்கி நீரோடையில் வீசிவிட்டான்.



''எதையும் தாங்கும் இதயம் வேண்டும், அண்ணா'' என்று சொல்லித் தியாகராசர் தம் ராமனைத் தேடி நடந்தார். கண்டு பிடித்துக் கொண்டு வந்தார். கடைசியில் அந்த ராமனே அவருக்கு நேரில் தோன்றியும் அருள் பாலித்தார்.

தியாகராசர் பற்றிச் சில கருத்துக்களை இங்கு தெரிவிக்க — உபன்யாச உருவில் தெரிவிக்க நல்ல வாய்ப்பினை இங்கு ஏற்படுத்தித் தந்த நண்பர்களுக்கு என் மகிழ்ச்சியை மீண்டும் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

அடேடே! பல பொது நிகழ்ச்சிகளில் இனத்தோறும் கலந்து கொண்டதனால் வந்த பழக்கம். இங்கே பாட வேண்டியது:

பவமான சுதுடுபட்டு....

....

நீநாம ரூப முலகு நித்ய சுபமங்களம்

— **கோமதி சுவாமிநாதன்**

அடுத்த இதழில்: **செங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்** திரைப்பட விமர்சனம் எழுதுகிறார்.



இது நாள் வரை நீங்கள்
கனவிலே கண்டு
நெஞ்சத்தைப்
பறிகொடுத்து வந்த
நறுமணப் பவுடரை
நனவாக்குகிறது,
புதுமுறையில் அமைந்த
கோயா. பனித்துளிக்கு
நிகரான இந்த பவுடர்
இந்த நாள் வரை
கண்டிராதபடி மைய
அரைக்கப்பட்டதும்
மிருதுவானதும் ஆகும்.
அது மட்டுமா? கோயா
நிபுணர்கள் இதில் புகுத்தி
யுள்ள பரிமளம் நாள் முழு
தும் நிலைத்து, புத்தம்புதிய
சுகந்தத்தைப் பரப்பிக்
கொண்டே இருக்கும்.
புதுமை மணம்
பொருந்திய 'பிளாக்
ரோஸ்' பூத்த புது
மலரின் வாசனை
வீசும் 'கார்டீனியா',
உள்ளத்தை அள்ளும்
'பாஸ்போர்ட்'—
நீங்கள் தேர்ந்தெடுக்க
இந்த நல்ல வாசனை
ரகங்களில் கோயா
கிடைக்கிறது. நெடு
நாள் நீடிக்கும் உயர
மான புதிய டின்னில்
மூன்றுமே வருகின்றன
என்பதை மறவாதீர்.




புதிய முறையில்
அமைந்த உயரமான
புதிய டின்னில் கிடைக்கும்
அருமையான பவுடர்

இந்த நறுமண
பவுடரைத்
தயாரிப்போர்

கோயா

பாரிஸ்
லண்டன்
நியூயார்க்



அட்லாண்டிஸ் (ஈஸ்ட்)
லிமிடெட்
(இங்கிலாந்தில்
இணைக்கப்பட்டது)

AGC-5 TM

விளையும் பயிர்

ஏழை பங்காளன்

"ஆண்டவனே! நான் செய்த தவற்றை மறந்து மன்னித்துவிடு; என் செய்கைகளுக்காகப் பாவம் ஏதுமறியா முட்டைகளைப் பழி வாங்கிவிடாதே!" என்று மனமுருகக் கண்களை மூடி வேண்டினான் பாலகன்.

அவன் எத்தனை நேரம் இப்படித் தவம் இருந்தானோ, தெரியாது. ஆனால் அவன் தாயாருக்கு ஒரே மகிழ்ச்சி, 'இத்தகைய மகனைப் பெற நாம் என்ன பேறு செய்தோமோ?' என்று. "கண்ணா! கண்களைத் திறந்து பார்! உன் வேண்டுகோளுக்கு ஆண்டவன் செவிசாய்த்து விட்டார். தாய்க் குருவி தன் முட்டைகளை அடை காக்க வந்து விட்டது!" என்றாள்.

கண்களைத் திறந்து பார்த்தவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. அக்கணமே ஓர் உறுதியான முடிவு எடுத்தான்; 'மறந்தும்கூட எவ்வுயிர்க்கும் தீங்கு நினைப்பதில்லை' என்று!

அந்தப் பாலகனின் பெயர் ஆண்ட்ரூஸ்.

வெளி நாட்டவராயிருந்தும், வேற்று மதத்தினராயிருந்தும், நம் பாரதத்தையே தாயகமாகக் கொண்டு வாழ்ந்த சி. எப். ஆண்ட்ரூஸ் மகாத்மா காந்தி அவர்களால் 'தீனபந்து' என்று போற்றப்பட்டவர்.

சிறு பிராயத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று தான் அவரது வாழ்க்கைக்கு இப்படி ஒரு வித்திட்டது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாள். பாலகன் ஆண்ட்ரூஸ் வீட்டில் இருந்தார். ஆணும் பெண்ணுமாக இரு சிட்டுகள் அலகில் வைக்கோலையும் புல்லையும் கொத்தி வந்து மாடமொன்றில் பரப்பின. அதைக் கண்ட ஆண்ட்ரூஸ் "சிட்டுகள் என்ன அம்மா செய்கின்றன?" என்று தம் அன்னையைக் கேட்டார்.

"கூடு கட்டுகின்றன."

"எதற்காக?"

"நாம் வீடு கட்டி வாழ்கிறோமே, அது போல வாழத்தான்!" என்றாள் தாயார்.

அன்று முதல் தூங்கும் நேரம், படிக்கும் நேரம் போக மற்ற நேரங்களில் எல்லாம் சிட்டுக் குருவிகளின் செயல்களைக் கவனிப்பதோ ஆண்ட்ரூஸின் வேலையாகிவிட்டது.

சில நாட்களுக்கெல்லாம் ஒரே ஒரு குருவி மட்டும் அந்தக் கூட்டில் அமர்ந்திருந்தது. அது அதிகமாக வெளியே போவதில்லை. அப்படியே போனாலும் உடனே திரும்பி வந்துவிடும். மற்றொரு குருவி கூட்டுக்குள் அவ்வளவாக நுழைவதில்லை. ஆண்ட்ரூஸுக்கு ஒரு யோசனை, 'இரண்டு குருவிகளுக்கும் சண்டையோ' என்று! தம் ஐயத்தைப் போக்கிக் கொள்ள அம்மாவின் உதவியை நாடினார்.

"சண்டை ஒன்றும் இல்லை. பெண் குருவி முட்டை யிட்டிருக்கிறது. அடை காக்கிறது. அதனால் அது கூட்டிலேயே இருக்கிறது. ஆண் குருவி தனியாக இருக்கிறது. குருவிக் குடும்பம் பெரிசாகப் போகிறது. குஞ்சுகள் பிறக்கப் போகின்றன!" என்றாள் தாயார்.

ஆண்ட்ரூஸின் உள்ளத்தில் எப்படியாவது அந்த முட்டைகளைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் தலைதூக்கியது.

தாயார் ஏதோ அலுவலாக வெளியே போயிருந்தபொழுது மெதுவாக ஏணியை எடுத்து வந்தார். சுவரில் சாய்த்து வைத்து ஏறினார். அப்பொழுது தாய்க் குருவியும் இரை தேடி வெளியே போயிருந்தது. கூட்டினுள் கைவிட்டு அவர் முட்டையை எடுத்தார்.

இந்த நேரம் பார்த்துத்தானா வெளியே போயிருந்த தாயார் திரும்பி வர வேண்டும்? தனயனின் செயலைக் கண்டவள் ஆத்திரப்படாமல் முட்டையை ஜாக்கிரதையாக இருந்தது இருந்தபடியே வைத்து விட்டுக் கீழே இறங்கி வரும்படி சொன்னாள்.

ஆண்ட்ரூஸ் இறங்கி வந்த பின், "மனிதர்களாகிய நம் கைபட்டுவிட்டால், குருவி அப்புறம் முட்டையைத் திரும்பிக் கூடப் பார்க்காது. அது பெரிய பாவம் இல்லையா? உயிரினங்களிடம் கருணை காட்டுவதல்லவா மனிதர்களாகிய நமது கடமையாக இருக்க வேண்டும்?" என்றாள் அன்போடு.

அன்னையின் சொற்கள் ஆண்ட்ரூஸின் உள்ளத்தில் ஆழப் பதிந்தன. அதோடு 'குருவி தன் முட்டைகளை ஏறெடுத்துப் பார்க்காவிட்டால் என்ன ஆகும்?' என்ற பயமும் பற்றிக் கொண்டது. "ஏனம்மா குருவி நிஜமாகவே முட்டைகளைத் திரும்பிப் பார்க்காதா?" என்றார்.

"ஆண்டவன் அருள் இருந்தால் பார்க்கும்!" என்று கூறிய தாயார், "ஆண்டவன் ஏழை பங்காளன், எளியோர்க்கு நேசனாயிற்றே! உண்மையான மனத்தோடு வேண்டினால் கைவிடுவாரா?" என்றாள்.

உண்மையான மனத்தோடு வேண்டிய ஆண்ட்ரூஸை ஆண்டவனின் திரு நாமங்களில் ஒன்றான 'தீனபந்து'வே அடைமொழியாகப் பற்றிக் கொண்டதில் வியப்பென்ன?

— ரா. வீ.

ஸ்ரீ சி. எப். ஆண்ட்ரூஸ்



எரிபொருள் விஞ்ஞானம்

பூமிக்கு அடியிலிருந்து கிடைக்கும் நிலக்கரி எவ்வளவு விந்தையான பொருள் தெரியுமா?

நிலக்கரியில் கார்பன், ஹைடிரஜன், ஆக்ஸிஜன், நைட்ரஜன் கந்தகம் போன்றவைகளும், சிலிக்கா, அலுமினா, இரும்பு போன்ற தாதுக்களும், புரோட்டீன்கள், மெழுகுகள், பிசின்கள், கொழுப்புக்கள், செல்லுலோஸ் போன்ற தாவரப் பொருள்களும், இன்னும் என்னென்னவோ இருக்கின்றன! அவற்றை ஆராய ஆராய விஞ்ஞானிக்கு வியப்பு மேலிடுகிறதே தவிர குறைவதில்லை.

இப்படி மாயவித்தை செய்யும் நிலக்கரியிடம் இளமையிலேயே மோகங் கொண்டார் டாக்டர் மத்தூர் சீனிவாசய்யங்கார்.

அவருடைய முன்னோர்கள் மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள். பல ஆண்டுகளுக்கு முன்னே அதை விட்டு ஹைதராபாத்தில் குடியேறினார்கள். டாக்டர் மத்தூர் சீனிவாசய்யங்கார் பிறந்ததும் ஹைதராபாத்தில்தான். இவர் ஐந்து வயதுச் சிறுவனாக இருந்தபோதே தந்தையை இழந்து விட்டார். அவரது மாமா ஒருவர் பௌதிகப் பேராசிரியராக இருந்தார். அவரைப் பார்த்து இவருக்கும் விஞ்ஞானத்தில் பற்றும் மோகமும் ஏற்பட்டு விட்டது. ஹைதராபாத் ஓஸ்மானியா சர்வகலாசாலையில் எம். எஸ்ஸி. பட்டம் பெற்றபின் ஓர் ஆண்டு ஹைதராபாத்தில் கிடைக்கும் நிலக்கரியை ஆராய்ந்தார் — ஸி. எஸ். ஐ. ஆர். உபகாரச் சம்பளம் பெற்று, பின்னர் இவர் ராஜ்ய சர்க்காரில் உத்தியோகம் ஏற்றார். விஞ்ஞான ஆராய்ச்சியில் நாட்டம் கொண்டவருக்குச் சர்க்கார் நிர்வாக வேலையில் பிடிப்பு ஏற்படுமா? இரண்டே மாதங்கள்தான் வேலை செய்தார். பிறகு அதை உதறிவிட்டு, பாரத அரசாங்கத்தின் உபகாரச் சம்பளம் பெற்று, இங்கிலாந்தில் லீட்ஸில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு டாக்டர் பட்டம் பெறச் சென்றார். டாக்டர் பட்டம் பெற்ற பின், அங்கேயே பிரிட்டிஷ் நிலக்கரி உபயோகத்தை ஆராயும் கழகத்தில் பணியாற்றினார். அங்கிருந்து ஜெர்மனிக்குச் சென்றார். அங்குதான் மூல நிலக்கரியில் குறைந்த வெப்பத்தைச் செலுத்திப் பல்வேறு பொருள்களைப் பிரிக்கும் முறையையும், நிலக்கரியிலிருந்து செயற்கை எரிபொருள் செய்யும் முறைகளையும் நேரிலே கண்டு தெரிந்து கொண்டார்.

நிலக்கரியில் பல வகை. பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபாடு உண்டு. நம் நாட்டில் பல இடங்களில் நிலக்கரி கிடைக்கிறது. சில தரமானவை; சில மட்டமானவை. சில எரிபொருளாக உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளவை. இவற்றைச் சில ரஸாயன சோதனைக்கு உட்படுத்தினால் தரமான எரிபொருள் கிடைக்கும்.

இன்று தமிழ் நாட்டில் பல்லாயிரக் கணக்கான வீடுகளில் புகை உமிழாததும் நல்ல உஷ்ணம் நீண்ட நேரம் தரக் கூடியதுமான நெய்வேலி பழுப்பு நிலக்கரியை உபயோகித்துத் தாய்மார்கள் பெரு மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளார்கள். அவர்கள் எல்லாம் டாக்டர் மத்தூர் சீனிவாசய்யங்கார் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவர் ஆராய்ச்சிகள் புரிந்து பழுப்பு நிலக்கரியிலுள்ள நைட்ரஜன் பிடிப்பைத் தளர்த்தி, எரிக்க முடியாது இருந்த பொருளை எரிப்பதற்கு உபயோகிக்கக் கூடிய பொருளாகச் செய்தார். அதன் விளைவு இன்று நமது வீடுகளில் நெய்வேலிக் கரி புழங்குகிறது.

பாரத சர்க்காரின் பாதுகாப்புத் துறையிலிருந்த டாக்டர் அய்யங்காருக்கு ஒரு புது வேண்டுகோள் வந்தது. அதாவது நாட்டின் வட கோடியில் உள்ள லடாக் பகுதிக்குச் சிமிண்டு கொண்டு போக வேண்டியிருந்தது. தெற்கே சமவெளிப் பிரதேசத்திலிருந்து அங்கு கொண்டு போவது சிரமமாக இருந்ததால், லடாக்கிலேயே கிடைக்கக் கூடிய சுண்ணாம்புக்கல், நிலக்கரி ஆகியவற்றைக்கொண்டு ஓர் எளிய வகைச் சிமிட்டித் தொழிற்சாலை வகுத்து தர முடியுமா என்று கேட்டிருந்தனர். அதே போல் ஒன்று தயாரித்தார். அதில் சென்னை அரசாங்கமும் சிரத்தை காட்டியதாகப் பேசப்பட்டது.


டாக்டர் அய்யங்கார்

இப்படித் தமது அறிவாராய்ச்சியெல்லாம் தேச நலனுக்கும் பாதுகாப்புக்கும் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கும் பயன்பட வேண்டும் என்று நினைத்துப் பணியாற்றி வருபவர் டாக்டர் அய்யங்கார்.

அவருக்கு இப்பொழுது வயது 46 இருக்கும். இளவயதினர். அவர் பணி இன்னும் நாட்டுக்குப் பல வகையில் எதிர்காலத்தில் பயன்படும் என்று நினைக்கிறோம்.

அவர் மனைவி ஸ்ரீமதி கஸ்தூரியும் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டவர். பாரதியார் கூறியபடி அவர் 'காரியம் யாவினும் கை கொடுப்பவர்' என்று தெரிகிறது.

ஆதாரம்: 'ஹிந்து'



பொறுங்கள்!

உங்கள் துணிமணிச் செலவு கட்டுக்கடங்காமல் போகிறதா?

அப்படியானால் நீங்கள் டுவின் டஸ்கர் துணிகளைப்பற்றி சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே! இந்த ரக துணிகள் உங்களுக்குப் பிடிக்கும்...உறுதியானவை, நீடித்து உழைப்பவை, அதி நேர்த்தியாய் தயாரிக்கப்பட்டவை. விலையிலும் நயமானவை. இவை எல்லாம் மதுரை மில்ஸாரின் பெரிய அளவு உற்பத்தி சௌகரியங்களால் சாத்தியமாகின்றன. ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்—டுவின் டஸ்கர். நயமான விலையில் தரமுள்ள துணிகள்.

ஹார்வி

டுவின் டஸ்கர்

துணிமணிகள்

நயமான விலையில் தரமுள்ளவை

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
மதுரை

மானேஜிங் ஏஜண்டுகள்:
ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரையைச் சேர்ந்த ஹார்விஸ்

மகாபாரதம்

ராஜாஜி

சகுனி, ''துரியோதனா! பாண்டவர்கள் உன் சகோதரர்கள் அல்லவா? அவர்களுடைய சம்பத்தைப் பார்த்துப் பொறாமைப்படத் தகாது. தங்களுக்கு நியாயமாகக் கிடைத்த பாகத்தை அவர்கள் அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய அதிர்ஷ்டத்தினால் அவர்கள் பாக்கியம் பெற்று மேன்மை அடைந்திருக்கிறார்கள். பிறருக்கு எவ்விதத் துரோகமும் செய்யாமல் தங்கள் பாகத்தை வைத்துக் கொண்டு தங்கள் சக்தியின் பயனாக அவர்கள் அபிவிருத்தி அடைந்திருப்பதைப் பார்த்து நீ ஏன் பொறாமைப்படுகிறாய்? அவர்களுடைய பலமும், சந்தோஷமும், உனக்கு எவ்வாறு குறை செய்யும்? உன்னுடைய சகோதரர்களும் பந்துக்களும் உன்னுடைய பேச்சுக்கு அடங்கி நிற்கிறார்கள். துரோணரும் அசுவத்தாமரும் கர்ணனும் உன் பட்சத்தில் இருக்கிறார்கள். நீ ஏன் துக்கப்பட வேண்டும்? பீஷ்மரும், கிருபரும், ஜயத்ரதனும், சோமதத்தனும், நானும் துணையாக இருக்க நீ பூமி முழுவதுமே ஜயிக்கலாம். வருத்தப்படாதே'' என்றான்.

இதைக் கேட்ட துரியோதனன், ''சகுனியே! இவ்வளவு துணைவர்கள் இருப்பாராயின் யுத்தம் செய்து இந்திரப் பிரஸ்தத்திலிருந்து பாண்டவர்களை நாம் துரத்த வேண்டும்'' என்றான்.

''வேண்டாம். அது அபாயகரமான வேலை. யுத்தமின்றி, எந்த உபாயத்தினால் யுதிஷ்டிரனை எளிதில் வெல்லலாமோ அது எனக்குத் தெரியும்'' என்றான் சகுனி.

துரியோதனன் கண்ணில் பிரகாசம் தோன்றிற்று. ''மாமா! யாருடைய உயிரும் சேதப்படாமல் பாண்டவர்களை ஜயிக்க முடியுமா? அதற்கு ஏதாவது வழியுண்டா?'' என்று மிக்க ஆவலோடு சகுனியைக் கேட்டான்.

''துரியோதனா! யுதிஷ்டிரன் பந்தய ஆட்டத்தில் ஆசையுள்ளவன். அவனுக்கு ஆடத் தெரியாது. நாம் அழைத்தால் க்ஷத்திரிய குலாசாரத்தின்படி அவன் கட்டாயம் ஒப்புக் கொள்வான். நான் ஆட்டத்தில் தேர்ந்தவன். உனக்காக ஆடுவேன். அவனுடைய ராஜ்யத்தையும், ஐசுவர்யத்தையும் உனக்காக நான் அவனிடமிருந்து யுத்தமின்றிப் பறித்துவிட முடியும்'' என்றான்.

24. ஆட்டத்துக்கு அழைப்பு

துரியோதனனும் சகுனியும் திருதராஷ்டிரனிடம் சென்றார்கள். சகுனி முதலில் பேச ஆரம்பித்தான்:— ''அரசரே! துரியோதனன் துயரத்தினால் இளைத்து இரத்தம் இழந்து வெளுத்துப் போயிருக்கிறான். தாங்க முடியாத அவனுடைய துக்கத்தை நீர் விசாரிக்கவேயில்லை. ஏன் அவனைப் பற்றிக் கவலையில்லாமல் இருக்கிறீர்கள்?'' என்றான்.

மகனிடத்தில் அளவுகடந்த அன்பு கொண்ட திருதராஷ்டிரன், துரியோதனனைக் கட்டித் தழுவி ''நீ துயரப்படுவதற்குக் காரணம் ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே! எல்லா ஐசுவரியமும் பெற்றிருக்கிறாய். உலகமெல்லாம் உன் சொல்லுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. எல்லாவிதச் சுகங்களும் தேவர்களுக்கு இருப்பது போல் உனக்கு இருக்க ஏன் துயரப்படுகிறாய்? வேதமும் அஸ்திர வித்தைகளும் சாஸ்திரங்களும் பூர்ணமாய், கிருபாசாரியாரிடமும் பலராமனிடமும் துரோணரிடமும் படித்திருக்கிறாய். எனக்கு மூத்த மகனாய் ராஜ்ய லக்ஷ்மியை அடைந்திருக்கிறாய். உன் விசனத்துக்கு என்ன காரணம்? சொல்!'' என்றான்.

துரியோதனன், ''தந்தையே! அற்ப மனிதனைப் போல் உண்கிறேன், உடுக்

கிறேன். அவமானத்தையும் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். இது என்ன வாழ்க்கை!'' என்று ஆரம்பித்துத் தன் துயரத்தை விவரமாகத் தெரிவித்தான். பாண்டவர்களுடைய நகரத்தில் தான் பார்த்த செல்வத்தை எடுத்துச் சொல்லித் தன் பொறாமையைத் தகப்பனுக்குத் தெரியப்படுத்தி. ''உள்ளது போதுமென்றிருப்பது க்ஷத்திரிய தருமம் அல்ல; பயமும் தயையும் அரசர்களுடைய கௌரவத்தைத் தாழ்த்தி விடுகின்றன. யுதிஷ்டிரனிடமுள்ள ராஜ்ய லக்ஷ்மியைப் பார்த்த பிறகு என் செல்வமும் சுகமும் எனக்குத் திருப்தி கொடுக்கவில்லை. அரசனே! பாண்டவர்கள் உயர்ந்து போனார்கள்; நாம் வீழ்ந்தோம்'' என்று அலறினான்.



திருதராஷ்டிரன், ''புத்திரனே! எனக்கு நீ மூத்த புத்திரன்; பட்டமகிஷியின் மகன். பாண்டவர்களைப் பகையாதே. பகையினால் துக்கமும் மரணமும்தான் உண்டாகும். வஞ்சகம் அறியாத யுதிஷ்டிரனை ஏன் பகைக்கிறாய்? அவனுடைய செல்வம் நம்முடையதுமாகும். நம்முடைய மித்திரர்களே அவனுக்கும் மித்திரர்கள். நம் பேரில் அவனுக்கு அசூயையாவது விரோதமாவது எள்ளளவும் இல்லை. குலத்திலும் பராக்கிரமத்திலும் அவனுக்குச் சரியாக நீயும் இருக்கிறாய். சகோதரனைக் கண்டு ஏன் பொறாமைப்படுகிறாய்? வேண்டாம்!'' என்று மகன் பேரில் அன்பு மேலிட்டுத் தன்னுடைய அறிவில் கண்ட நியாயத்தை எடுத்துச் சொன்னான்.

தகப்பன் சொல் துரியோதனனுக்குப் பிடிக்கவில்லை.

''இயற்கை அறிவில்லாமல் எவ்வளவு கல்வி கேள்விகள் பெற்றும் என்ன பயன்? பக்ஷணங்களின் சுவை

அவற்றில் மூழ்கி மிதக்கும் அகப்பைக்குத் தெரியாதது போல், நீர் நீதி சாஸ்திரங்களில் மூழ்கியிருந்த போதிலும் அவற்றின் பொருளையறியாமல் பேசுகிறீர். உலக நடை வேறு. அரசர்களின் தருமம் வேறு என்று பிருகஸ்பதி சொல்லியிருக்கிறார். சாதாரண மக்களுக்குப் பொறுமையும் திருப்தியும் தருமமாகும். அரசர்களுக்குப் பொறுமையும் திருப்தியும் தருமமல்ல. க்ஷத்திரியனுடைய கடமை எப்போதும் வெற்றியைத் தேடுவதேயாகும். தருமமாயினும் சரி, அதருமமாயினும் சரி, ஜெயத்தைத் தேடுவதே அரசன் தொழில்'' என்று துரியோதனன் தகப்பனிடம் ராஜநீதியை எடுத்துச் சொன்னான்.

பிறகு சகுனியும் பேசினான். சூதாட்ட யோசனையைத் திருதராஷ்டிரனுக்குச் சொல்லி, ''யுத்தமின்றித் துரியோதனனுடைய துயரத்தைத் தீர்க்க முடியும்'' என்றான்.

திருதராஷ்டிரன் மன உறுதி இழக்க ஆரம்பித்தான். அதைக் கண்டு இதுதான் தகப்பனுடைய சம்மதம் பெறுவதற்குச் சமயம் என்று துரியோதனன், ''கபடமாகவோ, வெளிப்படையாகவோ எதிரியை வீழ்த்தக்கூடிய எல்லா உபாயங்களும் க்ஷத்திரியனுக்கு ஆயுதமாகும். வெட்டும் கருவியே ஆயுதமல்ல. மித்திரன் யார், சத்ரு யார் என்பது பிறப்பாலும் குலத்தாலும் நிர்ணயமாகாது. எவனால் துன்பம் உண்டாகிறதோ அவனே பகைவன். சகோதரனானாலும் அவனே பகைவன். திருப்தி கொண்டு வாழ்வது அரசர்களுடைய வாழ்க்கைக்குப் பொருந்தாது. பகைவனுடைய அபிவிருத்தியைப் பார்த்தும் கவனியாமல் விட்டுவிடுகின்ற அரசன் அழிந்து போவான். சத்துருவின் வளர்ச்சியை முன்னதாகவே தெரிந்து கொண்டு அதைத் தகுந்த சூழ்ச்சியில் அடக்கப் பார்ப்பதே ராஜதருமம். வேரில் உண்டான புற்று, மரத்தை அழிப்பதுபோல் நம்முடைய குலத்தவர்களின் சம்பத்து நம்மை அழித்துவிடும்'' என்றெல்லாம் நீதி சாஸ்திர கிரந்தங்களிலிருந்து எடுத்துப் பேசினான்.

''குந்தி மகனை 'ஆட்டத்திற்கு வா' என்று நீர் சொன்னால் மட்டும் போதும். மற்ற வேலையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் மகா புத்தி கூர்மை படைத்தவனும் பாவியுமாகிய சகுனி.

''யுத்தம் என்பதில்லாமலும் உயிருக்கு ஆபத்தில்லாமலும் பாண்டவர்களுடைய சம்பத்தை எனக்குச் சகுனி சம்பாதித்துத் தருவான். நீர் யுதிஷ்டிரனை அழைக்க மாத்திரம் உடன்பட வேண்டும்'' என்றான் துரியோதனன்.

திருதராஷ்டிரன், ''இது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. தம்பி விதுரனைக் கேட்கலாம். அவன் அறிவாளி. அவன் சொல்லின்படி நான் எப்போதும் செய்ய வேண்டியவன்'' என்றான்.

விதுரனுடன் ஆலோசிப்பது துரியோதனனுக்குச் சம்மதமில்லை. ''விதுரர் சாதாரண தருமத்தைத்தான் உபதேசிப்பார். அது வெற்றிக்கு உதவாது. அரசர்களுக்கு ஜெயம் வேண்டின் தருமத்தைப் புறக்கணிக்க வேண்டியதாகும். தர்ம சாஸ்திர நிபுணர்களாகிய விதுரரும், வியாசரும் நம்முடைய முன்னேற்றத்துக்கு விரோதிகளாவார்கள். விதுரருக்கு என்னிடத்தில் அன்பில்லை. அவருக்குப் பாண்டவர்களிடமே பிரியம். இது உமக்குத் தெரியாதா?'' என்றான்.

''பாண்டவர்கள் பலவான்கள். அவர்களோடு விரோதம் செய்து கொள்வது யுக்தம் என்று எனக்குத் தோன்றவில்லை. சூதாட்டம் என்பது பகைக்குக் காரணமாகும். சூதாட்டத்தில் உண்டாகும் கெட்ட மனப்பான்மை கரை கடந்து போகும். வேண்டாம்'' என்றான் திருதராஷ்டிரன்.

''பயம் என்பதை விட்டுவிட்டுத் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்வதே ராஜ தருமம். பகைவர்கள் அதிக அபிவிருத்தி அடைவதற்குள் நமக்குச் சக்தி இருக்கும் போதே வேலை செய்ய வேண்டுமல்லவா? அதுவே முன்ஜாக்கிரதையாகும். வியாதியும் மரணமும் நமக்காகக் காத்திருக்குமா? சூதாட்டத்தை நாம் புதிதாக உண்டாக்கவில்லை. முன்னோர்கள்தான் அதையும் உண்டாக்கி இருக்கிறார்கள். சூதாட்டத்தில் அபாயமும் உயிர் நாசமும் இல்லாமல் க்ஷத்திரியர்கள் தங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்'' என்று துரியோதனன் தகப்பனை வற்புறுத்தினான்.

திருதராஷ்டிரன், ''மகனே! நான் விருத்தாப்பியம் அடைந்துவிட்டேன். நீயே அரசன். உன் இஷ்டப்படி நீ செய்யலாம். நீ சொல்லும் வழி எனக்குப் பிடிக்கவில்லை. பிறகு வருத்தப்படுவாய். இது விதியின் வேலை'' என்றான்.

முடிவில் மகனுடைய தொந்தரவைப் பொறுக்க மாட்டாமல் திருதராஷ்டிரன் 'சரி' என்று ஒப்புக்கொண்டு சூதாட்டத்திற்குத் தகுந்த சபா மண்டபம் கட்ட வேலைக்காரர்களுக்கு உத்தரவும் கொடுத்தான்.

ஆனால் ரகசியமாக விதுரனிடம் இதைப் பற்றிக் கலந்து பேசினான்.

"அரசனே! இது குலத்திற்கு நாசம் கொண்டு வந்துவிடும். இந்த யோசனையின் பயனாக நம்முடைய குலத்தில் கோபமும் கலகமும் உண்டாகிப் பெரும் ஆபத்து நேரிடும்; வேண்டாம்!" என்றான் விதுரன்.

மகனுடைய வேண்டுகோளைத் தடுக்க முடியாமல் திருதராஷ்டிரன், "விதுரா! விதி நமக்கு அநுகூலமாயிருந்தால் இந்தச் சூதாட்டத்தைப் பற்றி எனக்குப் பயம் இல்லை. விதி பிரதிகூலமாயிருந்தால், நாம் என்ன செய்து என்ன பயன்? உலகமனைத்தும் விதியின் வசமே இருந்து நடத்தப்பட்டு வருகிறது. நீ போய் யுதிஷ்டிரனை ஆட்டத்துக்கு அழைத்தேன் என்று எனக்காகச் சொல்லி அவனை அழைத்து வா!" என்று விதுரனுக்குக் கட்டளையிட்டான்.

விதியின் சக்தியையும் மனிதனின் கடமையையும் சரியாக அறிந்தும் புத்தியைக் கலவரப்படுத்திக் கொண்டு மனவுறுதியற்ற திருதராஷ்டிரன், — துரியோதனனிடம் வைத்திருந்த பற்றினால் அவன் சொல்லுக்கு இசைந்தான். அரசன் கட்டளைப்படி விதுரனும் யுதிஷ்டிரனிடம் சென்றான்.

25. பந்தயம்

திருதராஷ்டிரன் கட்டளைப்படி விதுரன் இந்திரப்பிரஸ்த நகரத்துக்குச் சென்று யுதிஷ்டிரனைக் கண்டான். "ஏன் சந்தோஷமற்ற முகத்தோடு வருகிறீர்? ஹஸ்தினாபுரத்தில் எல்லோரும் சுகமா? அரசனும் ராஜகுமாரர்களும் நன்றாயிருக்கிறார்களா? நகரத்துப் பிரஜைகளின் நடத்தை சரியாயிருக்கிறதா?" என்று விதுரனைக் கண்டதும் கவலையோடு யுதிஷ்டிரன் கேட்டான்.

"ஹஸ்தினாபுரத்தில் அனைவரும் க்ஷேமம். நீங்கள் அனைவரும் சுகமா? புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மண்டபத்தைப் பார்த்து விட்டுப் போக உங்களைத் திருதராஷ்டிர ராஜன் சார்பாக அழைக்க வந்தேன். உங்களுடைய மண்டபத்துக்குச் சமானமான அழகிய மண்டபம் அங்கே கட்டப்பட்டிருக்கிறது. சகோதரர்களுடன் நீயும் வந்து பார்த்துப் பாய்ச்சிகை ஆடி விட்டுத் திரும்பிப் போக வேண்டும் என்பது அரசன் வேண்டுகோள்" என்று விதுரன் தான் வந்த விஷயத்தை முறைப்படி சொன்னான்.

"கவறாட்டம் க்ஷத்திரியர்களுக்குள் கலகம் விளைவிக்கும். புத்திசாலிகள் அதை விரும்பமாட்டார்கள். நாங்கள் உம்முடைய சொல்லைப் பின்பற்றி நடப்பவர்கள். உம்முடைய யோசனை என்ன?" என்று யுதிஷ்டிரன் விதுரனைக் கேட்டான்.

"காய் விளையாட்டு அனர்த்தத்துக்கு மூலம் என்பது அனைவரும் அறிந்த விஷயம். நான் இந்த ஏற்பாட்டைத் தடுக்கத்தான் முயற்சி செய்தேன். ஆனாலும் அரசன் உங்களை அழைக்கச் சொன்னான். அதனால் வந்தேன். உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்" என்றான் விதுரன்.

இவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டும் யுதிஷ்டிரன் சகோதரர்களையும் பரிவாரங்களையும் கூட்டிக்கொண்டு ஹஸ்தினாபுரம் சென்றான்.

மகா புத்திசாலியான யுதிஷ்டிரன் ஏன் சூதாட்ட அழைப்பை ஒப்புக்கொண்டான் என்ற கேள்வி பிறக்கிறது. இதற்கு மூன்று காரணங்கள்: காம விகாரம், சூதாட்டம், கட்குடிப் பழக்கம், இவை தெரிந்தே மனிதனை ஏமாற்றி இழுத்துக் குழியில் தள்ளுகின்றன. யுதிஷ்டிரனுக்குக் கவறாட்டத்தில் மோகம் என்பது பாரதத்தில் பல இடங்களில் சொல்லப்படுகிறது. இரண்டாவதாக அரச குலப் பண்பாட்டின்படி பாய்ச்சிகை ஆட்டத்துக்கும் பந்தயங்களுக்கும் விடுத்த அழைப்பை மறுதலிப்பது கூடாது. இவை இரண்டுமின்றி, குல நாசத்துக்குக் காரணமான கலகம் வரும் என்று வியாசர் சொல்லியிருந்தபடியால் திருதராஷ்டிரனுடைய பேச்சை அவமதித்துக் கோபத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது யுதிஷ்டிரனுடைய எண்ணம். இவையெல்லாம் காரணமாக, புத்திசாலியான யுதிஷ்டிரன் அழைப்பை ஒப்புக்கொண்டு ஹஸ்தினாபுரத்துக்குப் போனான். நகரத்துக்குச் சமீபத்திலே தனக்கும் தன் பரிவாரத்துக்கும் கட்டப்பட்டிருந்த அழகிய விடுதியில் தங்கிச் சிரமபரிகாரம் செய்தபின் அடுத்த நாள், காலைக் கடமைகளை முடித்து விட்டுச் சபாமண்டபம் சென்றான்.

குசலப் பிரச்னங்கள் முடிந்தபின் சகுனி பேசினான்: "யுதிஷ்டிரனே! ஆட்டத்துக்குத் துணி விரிக்கப்பட்டிருக்கிறது. வா, ஆடலாம்!" என்றான்.

(தொடரும்)

சென்னை கவர்னர்

கே. ராஜா ராமநாதன்

நம்மில் பலர் அமெரிக்காவில் உள்ள யேல் சர்வகலாசாலை பற்றிக் கேள்விப்பட்டிருப்போம். ஆயினும், அந்தச் சர்வகலாசாலை எவருடைய பெயரைத் தாங்குகிறதோ, அந்த எலிஹூ யேல் என்பவர் ஒரு சமயத்தில் சென்னையில் கவர்னரா யிருந்தவர் என்பது எவருக்குமே ஆச்சரிய மூட்டும்.

வடக்கு வேல்ஸின் ஒரு குடியைச் சேர்ந்த எலிஹூ யேல் அமெரிக்காவில் பிறந்தவர். இங்கிலாந்தில் கல்வி கற்ருர். 1672ல் சென்னைக்கு வந்தார். படிப்படியாக உயர்ந்து, 1687லிருந்து ஐந்தாண்டுகளுக்கு கவர்னர் பதவி வகித்தார். அமெரிக்காவில் பிறந்து, ஆப்பிரிக்காவில் சஞ்சரித்து, ஆசியாவில் மணந்து, லண்டனில் காலமான இந்தச் சென்னை கவர்னரின் கல்லறை மேல் உள்ள வாசகம் இவரது சர்வதேச சம்பந்தங்களைச் சொல்கிறது.


இவர் சென்னை கவர்னராக இருந்தபோது 1688ல் இறந்து போன இவரது புதல்வன் டேவிட் என்பானின் நினைவுச் சின்னத்தை இன்னும் சென்னை சட்டக் கல்லூரி நிலயத்தில் காணலாம். கடலூருக்கருகேயுள்ள ஸெயின்ட் டேவிட் கோட்டை என்பது இப்பிள்ளையின் பெயரில் அமைந்ததே.


ஸ்ரீமதி பலியா என்ற அம்மாளுடன் இவருக்கு இருந்த காதல் விவகாரம் அந்நாட்களில் சென்னையில் பெரும் வதந்தியாக இருந்தது. ஸ்ரீமதி பென்னி எழுதிய வைரங்கள் (Diamonds) என்ற நாவலில் எலிஹூ யேலை வைத்தே ஒரு பாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது.


1691ல் யேல் கவர்னர் பதவியை விட்டபோது அவர் ஐந்து லட்சம் பகோடா (இன்று எட்டு கோடி ரூபாய்க்குச் சமம்) சொத்து சேர்த்திருந்தார். வைர வியாபாரத்தில் 'ஸ்பெகுலேஷன்' செய்து தாம் நியாயமாகத் திரட்டிய செல்வமே இது என அவர் வாதித்தார். (பென்னியின் நாவலின் பெயர், 'வைரங்கள்' என்றிருப்பதன் பொருள் புரிகிறதல்லவா?) எனினும்

அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள தமிழக முதன்மந்திரி திரு அண்ணுதுரை அவர்கள் ஏப்ரல் 21லிருந்து ஏப்ரல் 26ந் தேதி வரை யேல் சர்வகலாசாலையில் தங்கியிருப்பார். அச்சமயம் அவருக்கு யேல் சர்வகலாசாலை 'சப் பெல்லோஷிப்' என்ற கௌரவத்தை வழங்குகிறது. யேல் சர்வகலாசாலையை நிறுவிய யேலின் சரித்திரமே ருசியானது.









இவர் ஒழுங்காகக் கணக்குக் காட்ட வேண்டும் என்று உத்தர விடப்பட்டது. அடுத்த ஏழாண்டு களில் தமது சொத்துக்கு இவர் விளக்கங்கள் காட்டியபோது இவர் மூவாயிரம் பவுன்கள் விட்டுக் கொடுக்கும்படி செய்யப்பட்டது. கடமையில் அசிரத்தை, மனம் போனபடி நிர்வாகம் செய்தது, கிழக்கிந்தியக் கம்பெனிப் பணத் தைத் தமது 'ஸ்பெகுலேஷ'னுக் காகச் செலவழித்தது ஆகிய இனங் களில் இவர் மீது குற்றம் சாட் டப்பட்டது. இதற்கு அளித்த பதிலில் யேல், தமக்குப் பல விரோதிகள் இருப்பதாகவும், தம்மைக் கொலை 'செய்யப் பல முயற்சிகள் ரு இருந்திருப்பதாகவும் கூறினார். இதற்கு ஏதாகிலும் ஆதாரம் இருக்குமோ என்பது சந்தேகத்துக் குரிய விஷயம். ஆனால் இவர் தமது கவுன்ஸில் அங்கத்தினர் பலருக்கு விஷம் வைக்கக் காரணமாக இருந்த தாக ஆதாரபூர்வமாகவே தெரிய வருகிறது.


அந்தக் காலத்தில் மக்களைக் கடத் திச் சென்று அடிமையாக விற்பது சகஜமாக இருந்தது. யேலின் பதவிக் காலத்தில் உடைந்த ஒரு படகு ஸெயின்ட் தோமா கடற்கரையில் தள்ளப்பட் டது. அதிலிருந்த இந்திய அடிமைகள் சிலரின் சடலங்கள் சங்கிலி பூட்டப்பட்ட நிலையிலேயே கரையில் ஒதுக்கப் பட்டன. ஸ்ரீமதி பலியா தந்த தகவலின் மீது எலிஹூ யேல் அடிமை வியாபாரம் செய்த குற்றவாளிகளைக் கண்டுபிடித்தார். ஸெயின்ட் தோமாவைச் சேர்ந்த ராமலிங்கம் என்ற வியாபாரியின் கீழ் வேலை பார்த்த ஒரு சிப்பந்தியே இதில் முக்கியமான குற்றவாளி என்று தெரிய வந்தது.

1687வரை கோல்கொண்டா நவாபின்கீழ் இருந்தது சென்னை. கோல்கொண்டாவின் வைரத் தொழிலுக்குச் சென்னையே மார்க்கெட்டாக இருந்தது. இந்த மார்க் கெட் மூலம்தான் புகழ்பெற்ற பிட் வைரம் உள் படப் பல விலைமதிப்புயர்ந்த வைரங்கள் வெளி உலகுக்கு வந்தன. இதில் 'ஸ்பெகுலேஷன்' செய்து நிறையப் பொருள் ஈட்டியதால் யேல் இங்கிலாந்து சென்ற பின்னரும் ஒரு நவாபைப் போல் படாடோபமாக வாழ முடிந்தது.

டேவிட் மரணமடைந்ததால் ஆண் சந்ததியில்லா திருந்த யேல் தமது சொத்துக்களில் ஒரு பகுதியைக் கல்வி வளர்ச்சிக்கு அளிக்க விழைந்தார். இதைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணிப் போஸ்டனைச் சேர்ந்த காட்டன் மாதர் என்பவர் யேலுக்கு ஒரு கோரிக்கை விடுத்தார். அதன்மேல் அமெரிக்காவில் ஒரு கல்லூரிக்காக ஐந்நூறு பவுன் பெறுமானமுள்ள பொருள்களும், ஏராளமான புத்தகங்களும் அனுப்பி வைத்தார் யேல். இது அமெரிக்காவுக்குப் போய்ச் சேர மூன்றுண்டுகளாயின. மேற்படி கல்லூரிக்குக் கிடைத்த மிகப் பெரும் நன்கொடை இதுவே. அதற்கு யேல் கல்லூரி எனப் பெயரிடப்பட்டது. பிறகு அது யேல் சர்வகலாசாலையாக விரிவடைந் தது. தலைசிறந்த பேராசிரியர்களைக் கொண்டதும், அறிவாற்றல் மிக்க மாணுக்கர்களைப் பெற்றுள்ளது மான யேல் சர்வகலாசாலை எலிஹூ யேலின் நினைவை என்றும் நிலைநிறுத்தி விட்டது.

நிறுவிய அமெரிக்க சர்வ கலாசாலை





1. எலிஹூ யேல். 2. யேல் சர்வகலாசாலையை ஆரம்ப நாட்களில் நிலைநிறுத்திக் காப்பாற்றியவர் யேல். அவர் சென்னை கவர்னராக இருந்த காலத்தில் செயின்ட் மேரி தேவாலயத்துக்கு வழங்கிய வெள்ளித் தட்டு. 3. செயின்ட் மேரி தேவாலயத்திலுள்ள யேலின் திருமணக் குறிப்பேடு. 4. யேல் சர்வகலாசாலையில் பட்டமளிப்பு விழாத்தொடக் கம். 5. யேல் சர்வகலாசாலை யிலுள்ள மோர்ஸ் கல்லூரி.

விஞ்ஞான மனிதர் விந்தையானர்

"மோட்டார் துரைசாமி நாயுடுவை உங்களுக்குத் தெரியுமா?

"தெரியவில்லையா! ஜோசியம் துரைசாமி நாயுடுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

"ஹூஹூம்! ரொம்ப சரி! இலக்கணம் துரைசாமி நாயுடுவைப் பற்றி உங்களிடம் யாராவது பேசியிருக்கிறார்களா?

"இல்லையா!... மேலே குறிப்பிட்ட மூவரில் ஒருவரைப் பற்றிக் கூட உங்களுக்குத் தெரிந்திருக்கவில்லையா?.., போகட்டும்! ஜி. டி. நாயுடு என்ற பெயர்....

"என்ன? 'அவரைத் தெரியாமல் இருக்குமா' என்கிறீர்களா? கரெக்ட்! அதே ஜி. டி. நாயுடுதான் முன்னால் குறிப்பிட்ட மூன்று துரைசாமி நாயுடுக்களும்!"

முந்நூறுக்கு மேற்பட்ட பஸ்களின் சொந்தக்காரராகி, தொழிலாளி கட்டத்திலிருந்து முதலாளி கட்டத்துக்கு இடம் மாறிவிட்ட பிறகும், நாற்பத்தி எட்டாவது வயதில் அமெரிக்காவிலுள்ள ஒரு மோட்டார் தொழிற் பயிற்சிப் பள்ளியில் மாணவராகச் சேர்ந்து பயிற்சி பெற்றுத் தேர்வும் பெற்றவர் அவர்!

திரு நாயுடு ஒரு காலத்தில் தமிழ் இலக்கண ஆராய்ச்சியிலும் தீவிரமாக ஈடுபட்டு இலக்கணத் துரைசாமி என்ற பெயருக்கு இலக்கானார். நல்ல வேளை! இயந்திர நுணுக்க ஆர்வம் அவரிடமிருந்து இலக்கணத்தைக் காப்பாற்றியது. ஜோசியக் கலையில் ஆர்வமாக இறங்கினார். நாயுடு ஏதாவது விபரீதமாக ஜோசியம் சொல்லிவிடப் போகிறாரோ என்று அவர் நண்பர்கள் அவரைப் பார்க்கவே பயந்த காலமும் இருந்தது!

ஒழுங்கு, கட்டுப்பாடு விஷயங்களில் திரு நாயுடு மிக மிகக் கண்டிப்பானவர். அவை மீறப்படுவதை அவரால் சகித்துக் கொள்ள முடியாது; தண்டனை கொடுக்கவும் தயங்க மாட்டார்.

ஆஸ்திரியா நாட்டிலுள்ள 'சால்ஸ் பர்க்' என்ற ஊருக்குப் போயிருந்தார். அப்போது அவர் கூட இயந்திர நுணுக்கப் பயிற்சிக்காக நான்கைந்து மாணவர்களும் பாரதத்திலிருந்து போயிருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட தினத்தன்று மாலை நான்கு மணிக்கு அவர்களை ரயில் நிலையத்தில், ஒரு தீர்மானிக்கப்பட்ட இடத்தில் வந்து சேரச் சொல்லிவிட்டுத் தம் அலுவல்களைப் பார்க்கப் போய் விட்டார். அன்று மாலை நாயுடுவும் அவர் நண்பர் ராமச்சந்திரனும், ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்த போது மாணவர்களைக் குறிப்பிட்ட இடத்தில் காணவில்லை. ஒரேமாதிரி நான்கைந்து வாயில்கள் அந்த நிலையத்தில் இருந்த காரணத்தால் அவர்கள் வேறு இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

நாயுடு அவர்களின் விளக்கங்களை ஏற்'



1. தொழிலதிபர் திரு ஜி. டி. நாயுடு அவர்களுக்கு அவரது எழுபத்தைந்தாவது பிறந்த தினத்தையொட்டி சென்னை நகரசபை வரவேற்பு அளித்துக் கௌரவித்தது. தமிழக முதன் மந்திரியுடன் திரு ஜி. டி. நாயுடு அளவளாவுகிறார். வலப்புறம் மேயர்.

2. தொழிலதிபர் ஜி. டி. நாயுடு அவர்களோடு திரு ராமச்சந்திரன்.



கொள்ளவில்லை. கட்டுப்பாட்டை மீறி விட்டதாகவே கருதினர். அவர்களிடமிருந்த அத்தனை மார்க்குகளையும் (அந்தத் தேச நாணயங்கள்) எண்ணி வாங்கிக் கொண்டார். அதன் பிறகு தொடர்ந்து மூன்று நாட்கள், ஒவ்வொரு மாணவனுக்கும் காலை, மதியம், மாலை என்று நேர இடைவெளி விட்டு ஒவ்வொரு மார்க்காக மூன்று மார்க்குகளைப் பிரதி தினம் கொடுத்தார். ஒரு துண்டு ரொட்டி காப்பிக்கே இரண்டு மார்க்குகள் தேவைப்படும். சாப்பாட்டுக்கு ஐந்து மார்க்குகள். ஆனால் அந்த மாணவர்கள் மூன்று மார்க்குகளைப் பெற்றுக் கொண்டு உபவாசமும் இருக்க வேண்டியதாயிற்று. கூட இருந்த நண்பர் ராமச்சந்திரன் ஒரு நாள் இரக்கம் தாங்காமல், நாயுடுவுக்குத் தெரியாமல் மாணவர்களுக்குச் சில நாணயங்கள் கொடுத்து விட்டார். இது எப்படியோ நாயுடுவுக்குத் தெரிந்தது. ராமச்சந்திரனின் மணிபர்சையும் வாங்கி வைத்துக் கொண்டுவிட்டார்!

இந்த நிலைமை தளர நான்கைந்து நாட்கள் ஆயின. அப்புறம்தான் ஒரு ரகசியம் தெரிய வந்தது. அத்தனை நாட்களிலும் நாயுடுவும் தினசரி மூன்று மார்க்குகள் விகிதத்திலேயே தம் சாப்பாட்டையும் நடத்திக் கொண்டிருந்தார் என்று! சோதனை பிறருக்கு மாத்திரம் அல்ல! ஆத்ம சோதனையும் உண்டு.

எந்த நாட்டில் உள்ள ஹோட்டலில் தங்க நேரிட்டாலும், அந்த ஹோட்டலின் சமையலறையை ஒரு நோட்டம் விடாமல் இருக்க மாட்டார். அந்தச் சமையலறை துப்புரவாக, சுத்தமாக இருந்தால் சாப்பாட்டை ஹோட்டலில் வைத்துக் கொள்வார். இல்லாத போனால் சுயம்பாகம் நடத்திக் கொள்ள அஞ்ச மாட்டார். உப்புமா கிண்டிச் சாப்பிடுவதில் ஆசை அதிகம். ஒரு சந்தர்ப்பத்தில் ஜெர்மானிய டாக்டர்கள் சிலரை வரவழைத்து உப்புமா விருந்து நடத்தி அவர்களுக்குச் சித்த வைத்திய முறைகளை விளக்கினார்.

எந்த நாட்டுத் தொழிற் கண்காட்சிக்கோ, தொழிற் சந்தைக்கோ நாயுடு போனாலும், ஒவ்வொரு நிறுவனமும் விநியோகிக்கும் விளம்பர—விளக்க வெளியீடுகளைக் கவனமாக வாங்கிச் சேர்த்துக் கொண்டு தம் ஹோட்டல் அறைக்குத் திரும்புவார். எல்லா வெளியீடுகளையும் அக்கறையுடன் படித்து முடிப்பார். பாரதத்தில் உபயோகிக்கக் கூடிய—தேவையான யந்திர சம்பந்தமான விளக்கங்களை மாத்திரம் பொறுக்கிக் கொண்டு, அவற்றைப் பற்றி எழும் சந்தேகங்களையும் அவை செயல்படும் முறைகளையும் மறு நாள் நேரடியாகப் போய்த் தீர்த்துக் கொண்டு வருவார். பிறகு பிரஸ்தாப இயந்திர சாதனங்களில் பயிற்சி பெறச் சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவார். இந்த அடிப்படையில்தான் அவரால் பல மாணவர்களுக்குக் குறுகிய கால, ஆனால் வெகு சிறந்த யந்திர நுணுக்கப் பயிற்சி கிடைத்திருக்கிறது.

* * *

நாயுடு ஒரு நேர்மைவாதி. ஆனால் தம் நேர்மையை யாரும் சந்தேகிக்கிறார்கள் என்றால் அவருக்குக் கோபம் வந்து விடும்.

ஒரு தடவை வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்து விட்டுத் தனுஷ்கோடி வழியாகத் திரும்பும்போது இரண்டு 'லேத்து'களை வாங்கி வந்தார். ஒன்று நாலடி நீளம், மற்றொன்று ஓரடி நீளம்.

சுங்க அதிகாரிகள் பெரிய லேத்தின் விலை மதிப்பைக் கேட்டார்கள். நாயுடு தாம் விலை கொடுத்து வாங்கிய நாணயத்தின் சரியான மதிப்பான விலையை — ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் என்று சொன்னார். அதிகாரிகள் அசல் விலைப் பட்டியலைப் பார்க்க வேண்டும் என்று ஆரம்பித்தார்கள். அது எங்கேயோ மற்ற மூட்டை முடிச்சுகளில் சிக்கிக் கொண்டிருந்தது. சிரமப்பட்டு நாயுடு அதைத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்தார். அவர் சொன்ன விலைதான் அதில் கண்டிருந்தது. அதற்கு ஒரு குறிப்பிட்ட சுங்க வரியை நிர்ணயித்து விட்டு அதிகாரிகள் ஓரடி 'லேத்'துக்கு வந்தார்கள்.

சுங்க அதிகாரிகள் அந்தச் சிறிய 'லேத்'துக்கு நான்கில் ஒரு பங்கு சுங்க வரியை, பெரிய லேத்தின் அடிப்படையில் நிர்ணயித்து வசூலித்தார்கள். உண்மையில் அந்தச் சிறிய 'லேத்' நான்கு பங்கு அதிக விலையுள்ள நுணுக்கமான கருவி. முதல் அயிட்டத்தில் சுங்க அதிகாரிகள் நாயுடுவைச் சந்தேகிக்காமலிருந்திருந்தால், அவர் நிச்சயம் இரண்டாவது அயிட்டத்துக்கு வாங்கிய விலையைச் சொல்லியிருப்பார். ஆனால் அவர்கள் நடந்து கொண்ட விதம், அவர்களையே ஏமாறச் செய்தது. நாயுடு விலை நிர்ணய உரிமையை அவர்களுக்கே விட்டுவிட்டுப் பேசாமலிருந்தார். அவர்கள் இம்முறை விலைப் பட்டியலைப் புரட்டிப் பார்க்கவேயில்லை.

'நாயுடு அவர்கள் அடிக்கடி சர்க்காருடன் சண்டை போடுகிறாரே, நாட்டுப் பற்று இல்லாதவராக இருந்தால் இவரை நாம் பயன்படுத்திக் கொள்ளலாமே' என்று நினைத்து ஹைதராபாத் போலீஸ் நடவடிக்கை காலத்தில் இவரை உதவிக்கு அணுகிய தேசத் துரோக சக்தியை முளையிலேயே கிள்ளி, இது பற்றிய தகவலை உடனே மாநில முதன் மந்திரிக்குத் தெரிவித்துப் போதிய பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்தவர் நாயுடு அவர்கள்.

'மனித வாழ்க்கையில் முதல் இருபத்தைந்து ஆண்டுகள் வாழப் பயில வேண்டும்; கல்வி கற்க வேண்டும். இரண்டாவது இருபத்தைந்து ஆண்டுகளில் பொருள் சேர்க்க வேண்டும். மூன்றாவது இருபத்தைந்து ஆண்டுகளில் சேர்த்த பொருளையெல்லாம் செலவழித்துத் தீர்த்து விட வேண்டும்' என்ற விசித்திரக் கொள்கை உடையவர் நாயுடு.

வாழ்க்கையில் எத்தனையோ பாடம் கற்று, எவ்வளவோ பணம் பார்த்து, எழுபத்தி ஐந்து வயதிலும் எந்த விதமான ஆடம்பரமான புகழுக்கும் ஆசைப்படாமல், மனத்தில் தோன்றியதை ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துரைத்து, எந்தத் துறையிலும் ஆராய்ச்சி மனோபாவத்துடன் ஈடுபடும் திரு ஜி. டி. நாயுடு அவர்களை 'விந்தை மனிதர்' என்பதை விட நன்கு பண்பட்ட 'விளைந்த மனிதர்' என்றே சொல்லலாம்! — மேஜு


கானகத்தின் காவலன் கந்தனின் கால்களில் இறக்கை தானிருக்க வேண்டும். பறந்தான்— பகைவர்களால் அணுக முடியவில்லை. தன் குழந்தையின் துயரங் கண்டு இயற்கையே சீற்றம் கொண்டது. இடி மின்னலுடன் வானம் குமுறியது.
ஓநாய்க் கோட்டை
கதை வாண்டுமாமா
சித்திரம் ரமணி..
16
இந்த மழையும் புயலும் இவர்களி டமிருந்து தப்பிச் செல்ல எனக்கு உதவும்..
பெருமழை பெரிதும் உதவியது. ஆனால் அதே சமயம் கந்தனின் வேகத்தையும் கட்டுப்படுத்தியது. அவனால் அந்த மழையில் முன்னேற முடியவில்லை.
பகைவர்களின் தொல்லை இல்லை. புயல் ஓயும் வரை இந்தக் குகைக்குள் தங்கி இருக்கலாம்..
மழை நிற்பதற்காகக் காத்திருந்த கந்தனின் காதுகளிலே இனிமையான ஒரு சத்தம் கேட்டது. ஆம், ஜம்பு கந்தனைத் தேடிக் கொண்டு வந்து விட் டான்...
ஜம்பு!.. நீ எப்படி இங்கு வந்தாய்?
மழை ஓயவில்லை. கந்தன் ஆனந்தனின் நினைவால் ஓய்ந்து போனான்...
என் உயிர்த் தோழன் ஆனந்தனை அவர்கள் என்ன செய்தார்களோ தெரியவில்லை ஜம்பு.
புயல் ஓய்ந்தது. ஜம்புவோடு கிளம்பினான் கந்தன்...
அவர்கள் போக வில்லை. இன்னும் என்னைத் தேடிக் கொண்டுதானிருக் கிறார்கள், ஜம்பு!


ஆனால் அவர்களின் பார்வையிலிருந்து அவனால் தப்ப முடியவில்லை...
அதோ... அதோ! இனி அவனைத் தப்ப விடக் கூடாது... வாருங்கள்.
விரைந்தோடிய கந்தனை இழுத்து நிறுத்தியது அந்த விநோதமான ஒலி. கானகத்தின் ஒலிகளுக்குப் பழக்கப் பட்ட அவனுக்கு அதன் பொருள் புரிந்து விட்டது.....
போர் முரசல்லவா? கானகத்து மக்களை யெல்லாம் ஒன்று சேர்க்கும் அழைப் பல்லவா இந்த சத்தமான ஓசை.
காட்டு மனிதர்களின் தலைவன் தம் மக்களுக்குக் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தான்.....
அந்தப் பயல் இக்கானகத் தில் எங்கிருந்தாலும் விட மாட்டேன். எனது பெரும் படை தயாராகட்டும்.
மலை முகட்டிலிருந்த கந்தன் கண்ட காட்சி...
நாசத்தை விளைவிக்கும் இந்தக் கொடியவர்களின் முன்னேற்றத்தை எப்படியாவது தடைப் படுத்தியாக வேண்டும். இல்லையேல் கானகத்தின் அழகும் அமைதியும் பாழாகி விடும்...
சாமுண்டனின் ஆணைக்குட்பட்ட நாட்டு மக்களின் தலைவன் கர்வத்துடன் அந்தப் பெரும் படையை முடுக்கிக் கொண்டிருந்தான்...



இரவு மணி பத்து (நாடகம்)

மணி ஒன்பது அடித்தது. மிஸ்டர் விநாயகம் இயந்திர கதியில் தம் அலுவல்களை முடித்துக் கொண்டு எந்தவிதமான பரபரப்பும் இல்லாமல் ஆபீசுக்குப் புறப்பட்டார். அவர் மனைவி கமலம் டிபன்பாக்ஸைக் கொண்டு வந்து கொடுத்தாள்; பெண் மரகதம் தர்மாஸ் பிளாஸ்கை எடுத்து வந்தாள். ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த விநாயகத்தை 'ஸடன் பிரேக்' போட்ட மாதிரி போஸ்ட்மேன் கொண்டு வந்து கொடுத்த கடிதம் நிறுத்திவிட்டது. கடிதத்தைப் பிரித்துப் படித்த விநாயகம் திகிலால் தாக்குண்டு திகைத்துப் போய்ச் சோபாவில் சாய்ந்துவிட்டார். அந்தக் கடிதத்தை அவர் மனைவி படித்துவிட்டு நடுங்கினாள்; மகள் படித்துவிட்டு மருண்டாள்; மகன் வேலையன் படித்துவிட்டுப் பதறினான்; அவருடைய ஆபீஸ் நண்பர் மூத்துரங்கமும் திடுக்கிட்டுப் போனார்; விநாயகத்தின் வீட்டு வேலையாள் மருதை அதைப் படித்துவிட்டு, பயந்து அலறிவிட்டான். அப்படி எல்லோரும் நடுங்கும்படி அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருந்தது? அதை எழுதியது யார்? அதுதான் இந்நாடகத்தின் உயிர்நாடியான 'சஸ்பென்ஸ்'.

முதல் நாள் வந்த மொட்டைக் கடிதத்தைப் படித்துவிட்டு நடுங்கி ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு வீட்டுக்குள்ளேயே இருந்த விநாயகம் இரண்டு நாட்களுக்குப் பிறகு வந்த இன்னொரு பயமுறுத்தல் கடிதத்தைக் கண்டதும் கைகால் ஓடாமல் அயர்ந்து போய் விட்டதில் அதிசயம் என்ன இருக்கிறது?

இரண்டு பயமுறுத்தல் கடிதங்களை வைத்துக் கொண்டு நெஞ்சை உறைய வைக்கும் ஒரு மர்ம நாடகத்தையே உருவாக்கிவிட்டார் பூர்ணம் விசுவநாதன். அவர் எழுதிய நாடகத்தில் அவரே முக்கிய பாத்திரமான விநாயகமாக நடித்து நல்ல பெயரையும் தட்டிக் கொண்டு விட்டார்.

விநாயகத்தின் மனைவியாக நடித்த கௌஸல்யா, மகளாக நடித்த ஸ்ரீ லலிதா, மகனாக நடித்த ஜெமினி மகாலிங்கம், வேலைக்காரனாக நடித்த எம். ஓ. கிருஷ்ணசாமி ஆகியவர்களெல்லாம் விநாயகத்தின் பயத்துக்கு ஏற்ப ஒத்துழைத்தது நாடகத்தின் சுவையை அதிகமாக்கி விட்டது.

நடுக்கத்தோடிருந்த விநாயகத்தை மேலும் நடுங்க வைத்து மேற்படி மொட்டைக் கடிதங்களை எழுதியது யாராக இருக்கும் என்ற பிரச்னையைக் கிளப்பி அவரைச் சந்தேகப் பைத்தியமாக்கிய பெருமை அவரது ஆபீஸ் நண்பர் மூத்துரங்கத்தையே சாரும். அந்தப் பாத்திரத்தை ஏற்ற எஸ். ஆர். வீரராகவன் அநாயாசமாக நடித்தார்.

விநாயகத்தின் சக ஊழியரான அப்பாவி நஞ்சுண்டராவாக நடித்த கே. கோவிந்தராஜன் தம் அப்பாவித்தனமான நடிப்பினாலேயே அனைவரையும் கவர்ந்து விட்டார்.

நாடகத்தில் இலை மறை காயாகக் காதலையும் புகுத்திச் சுவையூட்டியிருப்பது பாராட்டுக்குரியது. நாடகத்தின் சஸ்பென்ஸை விமரிசனத்தில் வெளியிட்டு விட்டால் சப்பெனப் போய்விடும்.

சுவாரசியமான கதை, சுவையான வசனம், சுறுசுறுப்பான நடிப்பு — எல்லாமாகச் சேர்ந்து இந்நாடகத்துக்குத் தனிச் சிறப்பை அளித்து விட்டன. இப்பொழுதெல்லாம் நாடகத்தில் நாடகச் சுவையே இருப்பதில்லை. வெறும் 'டயலாக்'தான் பேசப்படுகின்றன. ரசிகர்கள் அதைக் கேட்டு ரசித்து, அங்கேயே மறந்து விட்டுப் போய்விடுகின்றனர். நாடகம் பார்த்த உணர்ச்சியே இருப்பதில்லை. இந்த நிலைக்கு ''இரவு மணி பத்து'' ஒரு விதிவிலக்கு. இம்மாறுதலை வரவேற்கிறோம்.



துப்பாக்கிகள் கதை சொல்லுகின்றன

(மலையாளப் படம்)

பல தமிழ்ப் படங்கள் என்னென்ன காரணங்களினால் கலைப் படைப்பு என்ற நோக்கில் தோல்வியடைகின்றன என்பதைச் சரியாய்த் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் நவஜீவன் பிலிம்ஸின் தயாரிப்பான இம்மலையாளப் படத்தை — இன்னும் ஓடிக் கொண்டிருந்தால் — அவசியம் பார்க்க வேண்டும்.

அநாவசியமான வளர்த்தல், அசட்டு வழியும் காதல் காட்சிகள், நம்ப முடியாத, நடைமுறைக்கு ஒவ்வாத கதைப் போக்கு இவற்றை யெல்லாம் நீக்கிவிட்டுப் படத்தைச் சிக்கல் இல்லாமல் எடுத்திருக்கிறார்கள்.

ஒரு எஸ்டேட் முதலாளியின் தங்கை அவர்களிடம் வேலை செய்யும் காவற்காரனிடம் மனத்தைப் பறி கொடுக்கிறாள்; அவனும் அவளிடம் உயிரையே வைத்திருக்கிறான். இதை விரும்பாத முதலாளி அவன் மீது ஒரு கொலைக் குற்றத்தைச் சுமத்திச் சிறையில் தள்ளுகிறான். காவற்காரனின் தாயார் துயரம் தாங்காமல் இறந்து போக அவன் தங்கை சிறுமி தங்கம் அநாதையாக விடப்படுகிறாள்; ஆண்டுகள் செல்ல, தங்கம் அழகு கொழிக்கும் பருவ மங்கையாகிறாள். அவள் யார் என்றறியாத முதலாளி அவளைக் காதலிக்கிறான்; ஆனால் தங்கம் முதலாளியின் தம்பியைத்தான் காதலிக்கிறாள். தன் வாழ்வு பாழானது போல் இந்தக் காதலர்கள் வாழ்வும் ஆகிவிடக்கூடாது என்று முதலாளியின் தங்கை எண்ணுகிறாள். இந்த உண்மைக் காதலர்களைச் சேர்த்து வைக்க அவள் தன் அண்ணனையே சுட்டு விடுகிறாள். தண்டனைக் காலம் முடிந்து விடுதலை அடைந்த காவற்காரன் தன் காதலியைக் காணும் ஆர்வத்தோடு வெளியேறும் தருணத்தில், அண்ணனைக் கொன்ற குற்றத்துக்காகச் சிறை புகும் அவளைச் சிறை வாசலிலேயே சந்திக்கிறான்.

விதியின் கொடுமை படத்துக்குத் தனிச் சிறப்பைத் தந்து உயர்த்திவிட்டது. கேரள நாட்டின் இயற்கைக் காட்சிகளை நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். முக்கிய பாத்திரங்களான ஷீலாதேவியும், சத்யனும் நன்றாக நடித்திருக்கிறார்கள். முதல் காட்சியில் கவர்ச்சிக் கன்னியாகத் துடிப்புடன் தோன்றும் ஷீலா தேவி பின்வரும் காட்சிகளில் விரக்தியோடு அமைதியாக நடித்திருக்கிறார். சத்யனின் இயல்பான நடிப்பு நன்றாயிருக்கிறது. தங்கமாக வரும் ஜயபாரதியின் நடிப்பில் துடிப்பையும், துயரத்தையும் நன்கு காண முடிவது பாராட்டுக்குரியது. பகதூர் நடிக்கும் தமாஷ் காட்சிகள் நன்றாயிருக்கின்றன.

எல்லா நடிகர்களோடு போலீஸ் நாயும் நன்றாய் நடித்திருக்கிறது. சிறையிலிருந்து தப்பிவிட்ட கைதியைப் பிடிக்கப் போலீஸ் அதிகாரிகள் எடுத்துக் கொள்ளும் முயற்சி சிறப்பாகப் படமாக்கப்பட்டிருக்கிறது.



குழப்பம் இல்லாத திரைக் கதையும், திறமையான டைரக்ஷனும் படத்துக்குத் தனிச் சிறப்பை அளித்துவிட்டன. தோப்பில் பாஸியின் கதையில் நல்ல சஸ்பென்ஸும், சுருக்கமும், உயர்வான கருத்துக்களும் அடங்கி யிருக்கின்றன. ''தோக்குகள் கத பறயுந்நு'' என்னும் படத்தின் பெயரே புதுமையாயிருக்கிறது. பாடல்கள் குறைவா யிருப்பது வரவேற்கத் தக்கது.

அனுபவப் புதுமை

பாலின் நிறம் ஒரு குட்டி! கருஞ்சாந்தின் நிறம் ஒரு குட்டி!

கி.ராஜேந்திரன்

அமெரிக்காவுக்கு நான் புறப்படவிருந்ததற்கு நாலைந்து நாட்களுக்கு முன்னால் அங்கே டெட்ராய்ட் நகரில் நிற வேற்றுமைப் பிரச்னை காரணமாகப் பெரும் கலவரங்கள் நிகழ்ந்தது பற்றி எல்லாத் தினசரிகளிலும் செய்திகள் பிரசுரமாயின. கொள்ளையடிப்பதும் தீ வைப்பதும் பெருமளவில் நடந்து நிலைமையைக் கட்டுப்படுத்த ராணுவம் அழைக்கப்பட்டதாகச் செய்திகள் வெளியாயின. இதைப் படித்து விட்டு, இந்தத் தருணத்தில் நான் அமெரிக்காவுக்குப் போகத்தான் வேண்டுமா என்று நண்பர்கள் பலர் கவலையோடு கேட்கத் தொடங்கி விட்டார்கள்.





நானோ இந்தக் கலவரங்கள் நிகழ்ந்ததன் காரணமாகவே அமெரிக்கா செல்ல முன்னை விட ஆவல் துடிப்பு மிகுந்தவனாக இருந்தேன்.

டெட்ராய்ட் நகரைச் சென்றடைந்ததும் முதல் காரியமாகக் கலவரங்கள் நிகழ்ந்த இடங்களைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தேன். டெட்ராய்ட் நகர போலீஸ் கமிஷனர் கொஞ்சம்கூடத் தயக்கமின்றிப் போலீஸ் காரிலேயே என்னை இரண்டு அதிகாரிகளுடன் கலவரங்கள் நிகழ்ந்த இடங்களுக்கு அனுப்பி வைத்தார்.

அமெரிக்காவின் எழில் கொழிக்கும் பிரதேசங்களைப் பார்க்கவும் செல்வம் கொழிக்கும் பகுதிகளை நோக்கவும் எனக்கு வசதிகளைச் செய்து தந்தவர்கள் அந்நாட்டின் விகாரமான அம்சங்களையும் ஒளிவு மறைவின்றி எனக்குக் காண்பித்தார்கள்.

கலவரங்கள் எல்லாம் முடிந்து சுமார் இருபது நாட்களுக்குப் பிறகு நான் அந்தப் பகுதிகளில் காரில் சென்று கொண்டிருந்தேன்.

'ஷோகேஸ்' கண்ணாடிகளை உடைத்து உட்சென்று கொள்ளையடிக்கப்பட்ட கடைகள், தீக்கிரையான பெட்ரோல் பங்குகள், வீடுகள், இடிந்து செங்கல் குன்றாக நின்ற கட்டடங்கள் — நகரில் கலவரங்கள் நிகழ்ந்த பல பகுதிகளிலும் இதே காட்சிகளை மீண்டும் மீண்டும் பார்த்து வேதனையுற்றது என் நெஞ்சம். உயரமான ஒரு கட்டடத்தின் மீது ஏறி நின்று பார்த்தால் சுற்றுப்புறமெல்லாம் கண்ணுக்கெட்டியவரை குட்டிச்சுவர்களாக நின்ற காட்சி நெஞ்சை அடைத்தது.

"கொள்ளையடிக்கப்பட்ட கடைகளின் பெரும்பாலானவை நீக்ரோக்களுக்குச் சொந்தமான கடைகளே என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன" என்றார் போலீஸ் அதிகாரி.

"நீக்ரோக்களின் கடைகளையே ஏன் நீக்ரோக்கள் கொள்ளையடிக்க வேண்டும்? நீக்ரோக்களின் உரிமைக்காக எழுந்த போராட்டக் கிளர்ச்சிதானே இது?"

"அப்படித்தான் ஆரம்பமாகிறது. ஆனால் வெகு சீக்கிரமே இது அகப்பட்டதைச் சுருட்டும் காரியமாக மாறி விடுகிறது. தீ வைப்பதும் அந்த அமர்க்களத்தின் இடையில் கொள்ளையடிப்பதும் மூலைக்கு மூலை நிகழ்கின்றன. எட்டு வயது, பத்து வயதேயான நீக்ரோச்









சிறுவர்கள் கிடைத்தவற்றையெல்லாம் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். இளைஞர்கள் மட்டுமின்றி நீக்ரோப் பெண்மணிகளும்கூடக் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டார்கள்.''

இதற்கெல்லாம் அடிப்படையான காரணங்களை ஆராய்வதென்றால் சரித்திர காலத்துக்குப் போய் அடிமைகள் வியாபாரம் அமெரிக்காவில் செழித்த நாட்களையும் பிறகு லிங்கன் பதவிக்கு வந்து அடிமைத் தளைகளைத் தகர்த்தெறிந்ததையும் கவனிக்க வேண்டும்.

அந்த நாட்களைவிட்டு இன்று வெகுதூரம் வந்து விட்டோம் என்றாலும் அன்றைய சரித்திரம் அழுத்தமாகப் பதிய வைத்த மனப்பான்மைகள் பல தலைமுறைகளுக்குப் பிறகும் முழுமையாக மாறிவிடாமல் இன்னமும் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

அந்த நாட்களில் வயல்களில் வேலை செய்ய நீக்ரோ கூலியாட்கள் ஏராளமாகத் தேவைப்பட்டார்கள். அமெரிக்காவின் தென்பகுதியில் விளை நிலங்கள் மிகுதியாக உள்ள பிரதேசங்களில் இவர்கள் பாடுபட்டார்கள். நாளடைவில் இவர்களது வேலையைக் குறைந்த நேரத்தில் எளிதாகச் செய்து முடித்துவிடக் கூடிய ராட்சத இயந்திரங்கள் தோன்றி இவர்களை வயல்களிலிருந்து விரட்டின. வயிற்றுப் பிழைப்புக்காக இவர்கள் நகரங்களுக்கு வந்து சேர்ந்தார்கள். நகரங்களில் 'சேரி'கள் தோன்றலாயின. நீக்ரோக்கள் நகரங்களில் அதிகமாகக் குடிபுக, அதே சமயம் வெள்ளையர்கள் நகரங்களிலிருந்து வெளியேறி நகரின் சுற்றுப்புறங்களில் அமைதியான சூழ்நிலையில் வாழ்வது ஒரு நாகரிகமாகப் பரவி வருகிறது. இன்று தலைநகர் வாஷிங்டனில் வசிப்போரில் பெரும்பாலானோர் நீக்ரோக்களே.

சேரிகள் என்றதும் நமது நாட்டில் உள்ள சேரிகளை எண்ணிவிடக் கூடாது. திருவல்லிக்கேணியிலும் ராயப்பேட்டையிலும் மத்திய தர வகுப்பினர் வாழும் பகுதிகளைவிட அங்கே உள்ள சேரிகள் (ஸ்லம்ஸ்) வெகு நேர்த்தி!

அமெரிக்காவில் அறிவாற்றல் மிக்க நீக்ரோக்கள் முன்னுக்கு வரத் தடைகளே ஏதுமில்லை. வாஷிங்டன்







படங்கள்: இடது பக்கம் மார்ட்டின் லூதர் கிங்; ஸ்டோக்ஸ்; பாலின் நிறமும் கருஞ் சாந்தின் நிறமும் அன்பினால் பிணைந்து நிற்கின்றன; வாஷிங்டன் நகர மேயர் மிஸ்டர் வாஷிங்டன்; அமெரிக்க உயர்நீதி மன்ற நீதிபதி மார்ஷல். இந்தப் பக்கத்தில் — டெட்ராய்ட் நகரின் கலவரக் களின்போது ராணுவத்தினர் வருகை; லூயி ஆம்ஸ்ட்ராங், மேரியன் ஆண்டர்சன்; ஸிட்னி போய்ட்டர்; ஸாமி டேவிஸ்.

நகரின் மேயர், கிளீவ்லாண்ட் நகர மேயர் ஆகியோர் நீக்ரோக்களே.

கிளீவ்லாண்ட் நகர மேயர் ஸ்டோக்ஸ் அமெரிக்க சரித்திரத்திலேயே முதல் நீக்ரோ மேயராவார். இவர் அடிமையாக வாழ்ந்த நீக்ரோ ஒருவரது கொள்ளுப் பேரன். இவரைத் தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்ட டாப்ட் என்பவர் முன்னாள் ஜனாதிபதியின் பேரன். ஆக இன்று அமெரிக்காவில் ஜனாதிபதியின் பேரனை ஓர் அடிமையின் கொள்ளுப் பேரன் — ஒரு நீக்ரோ—தேர்தலில் தோல்வியடையச் செய்து மேயராகும் அதிசயம் நிகழ்ந்திருக்கிறது!

கலைத் துறையில் பாடகி மேரியன் ஆண்டர்சன் புகழ் உலகப் பிரசித்தி பெற்றது. ஜாஸ் இசையில் முடிசூடாமன்னனாகத் திகழ்கிறார் லூயி ஆம்ஸ்ட்ராங். திரைப் படத் துறையில் சிறந்த நடிகரெனப் போற்றப்படுகிறார் ஸிட்னி போய்ட்டர். ஸாமி டேவிஸ் நடனத்திலும் பாட்டிலும் புகழ்பெற்றவர். அவர் வெள்ளையரான ஓர் அமெரிக்கப் பெண்மணியை மணந்து இல்லறம் நடத்துகிறார். ஸுப்ரீம் கோர்ட் நீதிபதியாகவும் ஒரு நீக்ரோ பணியாற்றுகிறார். இன்னும் எத்தனையோ பல துறைகளில் நீக்ரோக்கள் அமெரிக்காவில் பெரும் புகழும் பெற்றுள்ளார்கள்.

ஆனால் ஒப்பு நோக்குகையில் இப்படி நீக்ரோக்கள் அதிகம் பேர் முன்னுக்கு வந்துவிட முடியாதபடி வெள்ளையருக்கு உள்ளது போன்ற சம வாய்ப்புக்கள் இவர்களுக்கு இல்லாமல் இருந்ததை மறுக்க முடியாது.

இன்று அந்த நிலைமை மாறி வருகிறது. படிப்படியாக நீக்ரோக்களுக்குச் சகலவிதங்களிலும் சம உரிமைகள் அளிக்கும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

என்னதான் சட்டங்கள் இயற்றப்பட்டாலும் மக்களின் மனத்தில் நல்லெண்ணத்துடன்கூடிய மாறுதல் ஏற்பட்டால் ஒழிய சட்டத்தினால் மட்டும் எதையும் சாதித்துவிட முடியாது. இதற்கு நீக்ரோக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

வெள்ளையர் வாழும் ஒரு பகுதியில் ஒரு நீக்ரோக் குடும்பத்துக்கு வசிக்க இடம் மறுக்கப்படுகிறதென்றால் அது அவர்கள் நீக்ரோக்கள் என்பதற்காக மட்டுமல்ல. அவர்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சுத்தமாக வைத்துக் கொள்ள மாட்டார்களோ என்ற சந்தேகமும் ஒரு காரணம்.

சென்னையிலேயே பங்களாக்களுக்குப் பக்கத்தில் குடிசைகள் தோன்ற ஆரம்பித்தால் உடனே போலீஸுக்கு டெலிபோன் செய்பவர்கள் இல்லையா, என்ன? காரணம் புறம்போக்கு நிலத்தைக் குடிசை ஆக்கிரமிக்கிறது என்பது மட்டுமல்ல; மலர்த் தோட்டத்துடன்கூடிய பங்களாக்களுக்குப் பக்கத்தில் குப்பை நாற்றமும் பன்றிக் கூட்டமும் வந்துவிடுமே என்ற கவலையும்கூடத்தான். இதனை யார் மறுக்க முடியும்?

இன்றைக்குத் தீண்டாமை சட்டபூர்வமாக ஒழிந்துவிட்டது. கிராமப்புறங்களில் அக்கிரஹாரத்துக்குள் இன்று ஹரிஜன் நுழைந்து விடலாம்; ஆனால் அக்கிரஹாரத்துக்குள் விலைக்கு வரும் ஒரு வீட்டை வாங்கிவிட எத்தனை ஹரிஜனங்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்? எங்கேயாவது போய்க் கடன் வாங்கி வந்தாவது அந்த வீட்டை அக்கிரஹாரத்தைச் சேர்ந்த ஒருவரே வாங்கிக் கொண்டு விடுவதைப் பார்க்கிறோமே!.... 'குழந்தை சிவப்பாக இலட்சணமாக இருக்கிறது' என்று பாராட்டுவதையும் 'ஜாதகம் பொருத்தம்தான், ஆனால் பெண் ரொம்பக் கறுப்பு, அதனால் வேண்டாம் என்றுவிட்டேன்' என்று கூறுவதையும் எத்தனை தடவைகளில் நாம் கேட்டிருக்கிறோம்?

இது போன்ற பிரச்னைகள் அமெரிக்காவிலும் நீக்ரோக்களைப் பொறுத்தவரை நிலவுகின்றன.

'நீக்ரோக்களை எல்லா வசதிகளையும் கொண்ட புதிய பல அடுக்கு மாடிக் கட்டடங்களில் குடியேற்றிப் பயன் என்ன? அவர்கள் அதையும் சேரியாக்கி விடுவார்கள்' என்று சில வெள்ளையர்கள் என்னிடம் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

'ஏழைகளான நீக்ரோக்களுக்கு உதவித் தொகை அளிப்பது தவறு. அது அவர்களை மேலும் மேலும் சோம்பேறிகளாக்கவே உதவும்' என்றனர் வேறுசிலர்.

முந்நாளில் பருத்தித் தோட்டங்களில் அடிமைகளாக உழைத்தபோது ஒரு கூரையினடியில் பத்து ஆண்களுக்கு இடையில் ஒரே ஒரு நீக்ரோ பெண்ணே இருந்தாளானால் அவள் அவ்வனைவருக்குமே மனைவியாகக் கருதப்பட்டாள். இன்றைக்கும்கூட இது போன்ற அருவருப்பான பழக்கங்கள் பல சேரிகளில் நிலவுவதாக ஓர் அமெரிக்கப் பெண்மணி என்னிடம் குறைப்பட்டுக் கொண்டாள்.

இது போன்ற பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வு காண—பல ஆண்டுகளாகச் சமூகத்தில் தாழ்ந்த நிலையில் இருந்துவிட்டுப் புதிதாகப் பல உரிமைகளைத் திடீரென்று பெற்றதும் அந்த உரிமைகளைத் திறம்படப் பிரயோகிக்க—நீக்ரோக்களுக்கிடையே கல்வி அறிவு அதிகம் பரவ வேண்டும்; வறுமையிலிருந்து அவர்கள் மீளவேண்டும்; பண்பாட்டில் அவர்கள் வளர வேண்டும். வளரவும் செய்வார்கள் நாளாவட்டத்தில். சென்ற தலைமுறையினருடன் ஒப்பிடும்போது பாரதத்தில் இன்றைய இளம் தலைமுறையினர் ஜாதி மத இனவேறுபாடுகளை எவ்வளவு துச்சமாக மதிக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அமெரிக்காவிலும் இளம் தலைமுறையினரிடம் இந்த மாற்றத்தை நீக்ரோக்கள் விஷயத்தில் கண்டேன் நான்.

இந்த இயல்பான, இயற்கையான மாற்றத்தைத் துரிதப்படுத்த சாத்வீக, காந்திய முறைகளைக் கையாண்டவர் காலஞ்சென்ற மார்ட்டின் லூதர் கிங். ஆனால் பலவந்தத்தாலேயே இந்த மாறுதல்களைச் சீக்கிரமாகக் கொணர முடியும் என நம்புகிற ஒரு கூட்டமும் அமெரிக்காவில் உண்டு. 'கறுப்புச் சக்தி' என்று தங்களைத் தாங்களே வர்ணித்துக் கொள்கிறார்கள். இவர்களில் பலர் கறுப்பர்களுக்காகத் தனி ராஜ்யமும் கோரி வருகிறார்கள்.

டெட்ராய்ட்டில் வேய்ன் சர்வகலாசாலையில் பணியாற்றும் ஒரு பேராசிரியரை — நீக்ரோ தலைவரை — நான் கேட்ட கேள்வி இது: ''டெட்ராய்ட்டிலும் நியூஆர்க்கிலும் (நியூயார்க்குக்குப் பக்கத்தில் உள்ள ஓர் ஊர்) சமீபத்தில் பயங்கரமான கலவரங்கள் நடந்தனவே. ராணுவத்தினர் டாங்குகளுடன் வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலகத்தை அடக்கும்படியான நிலைக்குப் போய் விட்டதே. இதனால் மார்ட்டின் லூதர் கிங் போன்ற தலைவர்களுக்கு நீக்ரோ மக்களிடம் உள்ள செல்வாக்குக் குறைந்து வருகிறது என்று அனுமானிக்கலாமா ?''

''அப்படி அனுமானிப்பது தவறு'' என்றார் அவர். ''இன்று தீயிடுதல், கொள்ளையடித்தல் போன்ற செய்கைகளில் ஈடுபட்ட சில நூறு பேர்களை நினைக்கும்போது இந்தச் செயல்களில் ஈடுபடாத பல ஆயிரம் நீக்ரோக்களை மறந்துவிடக் கூடாது. ஆனால் அதே சமயம் வன்முறைச் செயல்கள்தான் காரியத்தைச் சாதிக்கும் என்ற நம்பிக்கை நீக்ரோக்களிடம் வளரும் விதத்தில் அரசினின் போக்கு அமைந்துவிடாமல் உடனடியாகப் பிரச்னைகளைக் கவனித்துப் பரிகாரம் காண வேண்டியதும் அவசியம்.''

''நீக்ரோக்களின் நிலைமை உயர அரசாங்கம் முக்கியமாக இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''முதலில் வியட்நாம் போரை நிறுத்தட்டும். அங்கே செலவாகும் கோடிக்கணக்கான டாலர்களை இங்கே வறுமையில் அவதிப்படும் நீக்ரோக்களின் நல்வாழ்வுக்குச் செலவிடட்டும்'' என்றார் அவர்.

வறுமை என்னும்போது மீண்டும் நாம் அமெரிக்க நீக்ரோ குடும்பத்தின் வருடாந்திர சராசரி வருமானம் நாலாயிரம் டாலர் என்பதை நினைவூட்டிக் கொள்ள வேண்டும். (சுமார் ரூ. 30,000) சராசரி வெள்ளையரின் குடும்ப வருமானம் ஆண்டுக்கு 10,000 டாலர்கள். நம் நாட்டின் வறுமை நிலையுடன் ஒப்பிட்டு நோக்கக் கூடாது.

பேராசிரியர் அப்படிச் சொன்னதும் 'எபோனி' என்ற பத்திரிகையில் நான் படித்த ஒரு கட்டுரையின் ஒரு பகுதி என் நினைவுக்கு வந்தது:

''எது முதலிடம் பெற வேண்டும் என்பது பற்றி இப்போது குழப்பமான சிந்தனை நிலவுகிறது. தென் வியட்நாமிலுள்ள பதினாறு மிலியன் மக்களுக்காக முப்பத்தாறு பிலியன் டாலர்களை (1000 மிலியன் ஒரு பிலியன்) செலவழித்துவிட்டு அதே சமயம் அமெரிக்காவிலேயே உள்ள இருபது மிலியன் நீக்ரோ மக்களை அலட்சியம் செய்தால்; பிலியன் கணக்கில் டாலர்களை ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் கொட்டி அம்மக்களுக்கு உதவுகையில் நமது நகரங்களில் உள்ள சேரிகளை ஒழித்துப் புதிய நல்ல குடியிருப்புக்களை ஏற்படுத்தி ஐக்கியமடைந்த ஓர் அமெரிக்க சமூகத்தை உருவாக்கத் தேவைப்படும் சில பிலியன் டாலர்களைச் செலவழிக்காது போனால் சரித்திரம் என்ன சொல்லும் ?



கணவன் : வர வரக் குழந்தை என்ன புத்திசாலியாப் பேசுறான் ! என் மூளையெல்லாம் அப்படியே அவனிடம் போயிருக்கு !

மனைவி : ஆமாம் ! அப்படித்தான் இருக்கும். ஏன்னு என் மூளையெல்லாம் என்னிடம்தான் இருக்கு !

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

'அமெரிக்கா பிறதேசங்களைக் காப்பாற்றியது; ஆனால் தன்னைத் 'தானே காப்பாற்றிக் கொள்ளவில்லை' என்றுதான் சொல்லும் !''

'எபோனி'ப் பத்திரிகை இப்படி எழுதியிருக்கது. இப்பத்திரிகை அமெரிக்காவில் நீக்ரோக்களுக்கெனவே விசேஷமாக நீக்ரோக்களால் நடத்தப்படும் ஒரு சஞ்சிகை. இதன் ஆசிரியர், பெரும் புகழும் பெற்ற அமெரிக்க நீக்ரோக்களைப் பற்றி அடிக்கடி எழுதித் தம் சமூகத்தினருக்கு ஊக்கம் அளிப்பதில் நம்பிக்கை கொண்டவர்.

சிக்காகோவில் உள்ள இப்பத்திரிகைக் காரியாலயத்தில், ''நீக்ரோக்களை ஒதுக்கக் கூடாது. அவர்கள் எல்லாவிதங்களிலும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று நினைக்கும் நீங்கள் இப்படி நீக்ரோக்களுக்கு மட்டும் ஒரு தனிப் பத்திரிகை நடத்துவது எப்படிச் சரியாகும்? நீங்களே உங்கள் சமூகத்தினரைத் தனியாக ஒதுக்குவது போலாகிறதே !'' என்று கேட்டேன் நான்.

''நீக்ரோக்களுக்கென்று தனிப் பத்திரிகை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவர்களுக்குத் தனிப் பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. மற்றப் பத்திரிகைகள் நீக்ரோக்களுக்கு உரிய அந்தஸ்து கொடுத்து அவர்கள் பிரச்னைகளிலும் கவனம் செலுத்தினால் இவர்களுக்கென்று தனிப் பத்திரிகை வேண்டாம் தான். ஆனால் அப்படிச் செய்யப் பிற பத்திரிகைகள் முன்வரவில்லையே'' என்று குறைப்பட்டார் அவர்.

இவ்வாறு அவர் கூறியதில் உண்மை இருந்த போதிலும் இனம் இனத்தைச்



"ஹேமா! நம்முடைய நாலாவது பிள்ளையைக் காணுமாம். பேப்பரிலே போட்டிருக்கிறார்கள். சீக்கிரம் போய்த் தேடு!"

சேரும் என்ற இயற்கை விதிக்கு ஏற்பப் பெரும்பாலான நீக்ரோக்கள் நீக்ரோக்களுடன் சேர்ந்து வாழத்தான் விரும்புகிறார்கள் என்பதும் உண்மையே.

வியட்நாம் போர் அமெரிக்காவில் வறுமை ஒழிப்புத் திட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறது என்று பல நீக்ரோக்கள் குறைப்பட்டுக் கொண்ட போதிலும் ஏராளமான நீக்ரோக்கள் ராணுவத்தில் சேர்ந்து வியட்நாம் போருக்குச் செல்கிறார்கள். ராணுவத்தில் நீக்ரோக்கள் திருப்தியுடனே சேர்ந்து பணியாற்றுகிறார்கள் என்றுகூடச் சொல்லலாம். ஏனெனில், ராணுவத்தில் ஒருவனது நிறம் காரணமாக அவன் முன்னுக்கு வருவது தடைப்படாது. பதவி உயர்வு கிட்டும் என்ற நம்பிக்கை, பிற இடங்களில் கிடைக்கக்கூடியவைகளைவிட நல்ல ஊதியம் ஆகியவை ராணுவத்தில் நீக்ரோக்களைத் திருப்திப்படுத்துகின்றன.

ஆனால் இதையே சில நீக்ரோத் தலைவர்கள், வியட்நாமில் நீக்ரோக்களே அதிகமாகப் பலியிடப்படுகிறார்கள் என்று தொனியை மாற்றிச் சொல்கிறார்கள்.

ராணுவ சேவைக்கு இளைஞர்களைக் கட்டாயமாக அழைக்கும் சட்டத்தில் சிறிது காலம் முன்னர் வரை, நாட்டுக்கு அத்தியாவசியமான, விசேஷமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் ராணுவத்தில் சேர வேண்டாம் என்று விதிவிலக்கு இருந்தது. நீக்ரோக்களில் பெரும்பாலோர் கல்லூரிப் படிப்புக்குப் போகாததால் பெருமளவில் ராணுவ சேவையை அவர்கள் ஏற்க வேண்டியிருந்தது. ஆராய்ச்சிகள் புரிவதாகச் சொல்லி வெள்ளையரான இளைஞர்கள் பலர் தப்பவும் வழி இருந்தது. ஆனால் இப்போது சட்டம் மாற்றப்பட்டு விட்டது.

இப்போது கல்லூரிப் பேராசிரியர்கள் நாட்டின் அறிவெல்லாம் வியட்நாமில் பலியாவதாகப் புலம்புகிறார்கள்!

இன்று அமெரிக்காவில் நீக்ரோக்களுக்காக மிகவும் பரிந்துரைப்பவர்கூட, அவர்களுக்கு முன்னுக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதை மறுக்க முடியாது. அதே போல் நீக்ரோக்களுக்காக எவ்வளவோ செய்தாகிவிட்டது என்று அடித்துப் பேசும் வெள்ளையன்கூட செய்யக்கூடியது இன்னும் கொஞ்சம் இருப்பதை மறுக்க முடியாது!

டெட்ராய்ட்டிலும் நியூஆர்க்கிலும் நடந்த கலவரங்களுக்குப் பிறகு ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட ஒரு குழு நிலைமையை விரிவாக ஆராய்ந்து சில திட்டங்களை வகுத்துத் தந்திருக்கிறது. "அமெரிக்க வெள்ளை, கறுப்பு பிரஜைகளுக்கிடையே ஆழமாகிக் கொண்டே போகும் பிளவை மூட வேண்டுமானால் வினாடிகூடத் தாமதிக்கலாகாது" என்று கூறிச் சில காரியங்களை மேற்கொள்ளுமாறு சிபாரிசு செய்கிறது இக்குழு:

நகர போலீஸில் நீக்ரோக்களுக்கு அதிக இடமளித்துச் சேரிகளுக்குப் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும்; அதிகப்படியான வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்கத்தொழிலதிபர்களுக்குச் சலுகைகள் தர வேண்டும்; பள்ளிகளில் நீக்ரோக் குழந்தைகளுக்குத் தாராளமாக இடம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்; வருமானம் குறைவாக உள்ளோருக்கு அரசாங்கம் பண உதவி செய்ய வேண்டும்; குறைந்த வருவாய் உடையவர்களுக்கென ஏராளமான புதிய குடியிருப்புக்களைக் கட்டித் தர வேண்டும்.

இப்படி ஒரு பிரச்னைக்குள் புகைந்து கிடக்கும் பல பிரச்னைகளை அலசிச் சிபாரிசுகள் செய்திருக்கிறது குழு. என்னதான் சட்டங்கள் இயற்றப்பட்டாலும் அதனின்றும் தப்பிக்க மனிதன் விரும்பினால் வழி கண்டு பிடிப்பான். நீக்ரோக் குழந்தைகளை எந்தப் பள்ளியும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது சட்டம். ஆனால் பல பள்ளிகளில் இந்த நீக்ரோக் குழந்தைகள் மந்தபுத்தி உடையனவாயிருக்கின்றன, அவர்கள் நலனுக்காகவே அவர்களுக்கு விசேஷப் பயிற்சி அளிக்கிறோம் என்று கூறி அவ்விதம் விசேஷப் பயிற்சி பெறுவோருக்கென்று தனி வகுப்பறைகள் ஏற்படுத்தி விடுகின்றனர்.

ஆகவே, சட்டத்தைவிட முக்கியமானது மனமாற்றம்தான். மார்ட்டின் லூதர் கிங்கின் உயிர்த் தியாகம் இந்த மனமாற்றத்தைத் துரிதப்படுத்தும் என்று எதிர்பார்ப்போம்.

சாம்பல் நிறமொரு குட்டி -- கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,
பாம்பு நிறமொரு குட்டி -- வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி.

எந்த நிறமிருந்தாலும் -- அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும் -- இஃது
ஏற்ற மென்றுஞ் சொல்லலாமோ?

— மகாகவி பாரதியார்



நெசவு உற்பத்தியிலே 322 ஆண்டுகால மரபோடு முன்னேற்றத்தை இணைப்போர் யார்?

அது நாங்கள்

322 ஆண்டுகள் அனுபவம் என்றால் சும்மாவா! அது ஏழு நெசவாலைகளின் ஒருங்கிணைந்த அனுபவமாக இருந்தாலும் அது கொஞ்ச நஞ்சமல்ல, அபாரம். எங்களைத்தான் சொல்லுகிறோம்—லால்பாய் க்ரூப். எங்கள் துணிகளோ, பழம்பெரும் பாரத மரபின் ஒரு பகுதியாகும்.

எங்கள் முதல் ஆலை உற்பத்தி தொடங்கிய ஆண்டு 1906; அதன் பின் காலம் மாறிவிட்டது. இருப்பினும் காலத்தோடு ஒட்டி வளர்ந்துள்ளவர்கள் நாங்கள். இன்று எங்கள் ஆலைகள் அதி நவீனமான உத்திகளையும் எந்திர சாதனங்களையும் பயன்படுத்தி, நேர்த்தியான எல்லாவகை நெசவுகளையும் உற்பத்தி செய்கின்றன. நாட்கள் பல சென்றாலும் நடைமுறையில் இருந்துவரத் தவறாத துணிகள். லால்பாய் டிரேடு மார்க் இருக்கிறதா பாருங்கள். தரமான துணிகளுக்கு அவையே உத்தரவாதம்.

INTERPUBLIC 2A TH

லால்பாய் க்ரூப்

- தி அரவிந்த் மில்ஸ் லிமிடெட்.
- தி ராய்ப்பூர் மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்.
- தி அசோகா மில்ஸ் லிமிடெட்.
- தி ஸர்ஸ்பூர் மில்ஸ் லிமிடெட்.
- தி அருணா மில்ஸ் லிமிடெட்.
- தி அகமதாபாத் நியூ காட்டன் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.
- தி நூதன் மில்ஸ் லிமிடெட்.

துளசி சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் வாசலில் துணித் திரை மெதுவாக அசைந்தது. அங்கே ராகவன் வீட்டு வேலைக்காரி நின்று கொண்டிருந்தாள்.

''என்ன?'' என்று குரல் கொடுத்தாள் சரஸ்வதி.

''இந்தக் கடுதாசை ஐயா, துளசி அம்மாவிடம் கொடுத்துட்டு வரச் சொன்னாங்க'' என்றாள் வேலைக்காரி.

அந்தக் கடிதத்தை வாங்கி விந்தையோடு பார்த்தாள் சரஸ்வதி அம்மாள். விவரம் தெரியாத மகிழ்வும், அளவு கடக்கும் ஆத்திரமும் ஒருங்கே ஏற்பட்டன. ''துளசி வெளியே போயிருக்கிறாள். வந்ததும் கொடுத்துவிடுகிறேன்'' என்றாள். வேலைக்காரி போனதும் உறையைப் பார்த்தாள். ராகவனின் கையெழுத்துத்தான். துளசியின் பெயரை எழுதக்கூட அவருக்குக் கை வருகிறதா? அந்தப் பெயரை எழுத வேண்டும் என்ற நெருடலும் ஞாபகமும் கூட உள்ளதா? அந்தக் கணவனின் மனத்தில் பாவி துளசியின் உருவத்துக்கு ஓரிடம் உண்டா? தன் பாவங்களே பாலையாகப் பூத்துவிட்டாற்போன்ற வேதனையில் நெளியும் அவள் நினைவுக்கு அவர் கௌரவம் தருவதுண்டா?

''என்ன அக்கா! ஏதோ கடிதத்தை வைத்துக் கொண்டே யோசித்துக்கொண்டிருக்கிறாய்? யார் எழுதியிருக்கிறார்கள் அப்படி?'' கையில் ஒரு சிறு புத்தகக் கட்டோடு திரும்பி வந்த துளசி கேட்டாள்.

''வந்து.... உனக்குத்தானடி... ராகவன் எழுதியிருக்கிறார்போலிருக்கிறது.'' இதைச் சொல்வதற்குள் சரஸ்வதி அம்மாள் தவிதவித்துப் போய்விட்டாள்.

துளசி கடிதத்தைப் பெற்றுக் கொண்டு புத்தக அறைக்குள் ஓடினாள். பயிற்சி பெற்றுப் பழகிய வேதனைகளின் அந்தரங்க முனகல்கள் எல்லாம் ஸ்தம்பித்து வெறித்தன. அதரங்களின் நடுக்கமும், கைகளின் நடுக்கமும் ஒன்றையொன்று மிஞ்சின. இத்தனை காலத்துக்கு அப்புறம், பதினெட்டு வருடங்களுக்குப் பிறகு அவர் என்னை நினைத்து எனக்குக் கடிதம் எழுதியிருப்

இனிக்கும் நினைவுகள்



கோமகள்

இதுவரை:

வசந்தன் மருத்துவம் பயிலும் மாணவன். அன்னையிடம் அபார பக்தி கொண்டவன். உடல்நலம் குன்றிய அன்னை செல்லம்மாளைத் தாம்பரம் சானடோரியத்தில் சேர்த்த அவனுக்கு ஒரே குறை, தினம் தினம் அவளைப் போய்ப் பார்த்து வர முடியவில்லையே என்று! அக்குறையை ஆருயிர் நண்பன் திவாகரன் தீர்த்து வைக்கிறான்.

பயிற்சி பெற மகப்பேறு விடுதிக்குச் செல்லும் அவனுக்குச் சீலியா என்னும் மாணவி சகபாடியாக வருகிறாள்.

சீலியா 'காப்பியம்' அதிபர் மீனாட்சி சுந்தரத்தின் சகோதரர் மகள். சரஸ்வதி அம்மாள் மீனாட்சி சுந்தரத்தின் மனைவி. துளசி அவளது தங்கை. ஒரு வகையில் சீலியா துளசியின் மகள். எப்படி? 'இனிக்கும் நினைவுகள்' கதையைத் தொடர்ந்து படித்துப் பாருங்கள்!

யார்? என் நினைவு அங்கு எழும் பிரமேயம் கூட உண்டா? கடிதம் ஏந்தி வந்த விஷயங்கள் இனிமை கூட்டுபவையா? இனிமை என்றால் அது எத்தகையதாக இருக்கும்? அதைப் பிரித்தாலே அதில் இருக்கும் செய்தியின் சாரம் தெரிந்து, மறுபடியும் வாழ்வின் கணங்கள் சாரமற்றதாகி விடுமோ? அல்லது அவளது ஆசையின் பிரமைகள் ஓய்ந்துவிடுமோ?

மிகவும் நிதானமான வேகத்தோடு கடிதத்தை மெல்லப் பிரித்த கைகள் ரோஜா வண்ணக் காகிதத்தை விரித்தன. மெல்லிய பேனாவினால் எழுதப் பட்ட சிறிய எழுத்துக்கள்!

என் அன்புக்குரிய துளசிக்கு,


இப்படி அழைப்பதற்கு முதலில் உன் மன்னிப்பும், அநுமதியும் வேண்டும். நீ எனக்குத் தர ஒப்பாத உரிமையை, நானாக எடுத்துக்கொள்ள நேர்ந்ததற்கு என் மனக்



கலக்கம்தான்காரணம். இந்தக்காரணத்தையொட்டிக் கடந்தவைகளின் புண்ணை ஆற விட்டுவடுவாகவாவதுமாற விடலாம் என்ற நம்பிக்கை. ருகரும் புண்ணை விட, ஆறிய தழும்பு பரவாயில்லை என்று நினைக்கிறேன். நீயாக என்னோடு வாழ வர மறுத்தபோதிலும், உனக்கு, உன் மனநிலைக்கு மாறுபட்ட வாழ்வை நான் அமைத்துக்கொண்டதன் மூலம் உனக்குத் துரோகம் செய்துவிட்டேன். இதை ஒப்புக்கொண்டு உன்னை மறுபடியும் என்னுடன் வாழும்படி நிர்ப்பந்திக்கும் எண்ணம் எனக்கில்லை. அதற்குரிய பருவமும் விடைபெற்றுவிட்டது. எதிரெதிர் இருந்தாலும் உனக்கும் எனக்கும்தான் எத்தனை இடைவெளி! எத்தனை தூரம்! நீ உரிமையாக அனுபவித்து அடைய வேண்டியவைகளை மற்றொருத்திக்குக் கொடுத்து விட்டேன் என்று நீ காட்டும் தீவிர வைராக்கியத்தின் முன் என் கோபம் தோல்வி யடைந்துவிட்டது, துளசி. ஆனால் இப்போதுகூடக் கூறுகிறேன். கீழ்த்தரமான எந்த இச்சைக்கு உட்பட்டும் நான் லில்லியை மணந்து கொள்ளவில்லை. இதை உணர்த்தி, உன் நம்பிக்கையைப் பெற வேண்டும் என்ற என் மனத் துடிப்பின் அளவு உனக்குத் தெரியாது, துளசி! மிஸ்டர் ரிச்சர்டின் மரணத்தின்போது நான் தர நேர்ந்த வாக்குறுதியும், என் மனத்தில் நட்புஸ்தானத்தில் உலவி வந்த லில்லியை மனைவியாக ஏற்க வேண்டி வந்த நிர்ப்பந்தமும், உண்மையைக் கூறுங்கால் என் கூற்றை நீ ஒப்புக் கொண்டு நீ என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வாய் என்ற நம்பிக்கையும் என்னை எப்படி யெல்லாமோ மாற்றிவிட்டன. ஆனால் நடந்தது என்ன? என்னையும் லில்லியையும் சேர்த்துப் பார்த்த உன் கண்கள் அருவருப்பையே உமிழ்ந்தன. இப்போது நினைத்தாலும் என் உடம்பு நடுங்குகிறது. நீ எதுவும் பேசாமல், தலையை மட்டும் பலமாக அசைத்து மறுத்துவிட்டு உள்ளே போனவள்தான். எனக்கு மன்னிப்புக் கிடைக்கவில்லை.

எதிர் வீட்டை அண்ணன் எனக்கு ஒதுக்கித் தந்தார். அண்ணியின் அன்பில் வளர்ந்த நான், அப்போது அவள் கண்களின் ஜ்வாலையிலிருந்து தப்ப என்னையே அந்த வீட்டினுள் புதைத்துக் கொண்டேன். இன்னும் இன்றுவரை அண்ணியை நான் பார்ப்பேனே தவிர, அவள் கண்களில் நான் பட்டதில்லை. அண்ணன் என்னைச் சீக்கிரமே மன்னித்து விட்டார்.

லில்லியும் உன்னிடம் பேசித் தோல்வி யடைந்து விட்டாள். நீ என்னைப் பிரிந்து



வடித்த கண்ணீரளவு அவளும் உன்னைப் பிரித்துவிட்ட செய்கைக்கு அழுதாள். இடையில் எனது முயற்சிகள், சமாதானங்களெல்லாம் பயனற்று விட்டன. அதன் பின் இரண்டாண்டுகள் கழித்து உன்னைப் பார்க்க நேர்ந்தது. ஒரு நாள் சின்னஞ் சிறு குழவியான சீலியாவை ஆயா தள்ளு வண்டியிலிட்டுத் தள்ளிக் கொண்டு வீட்டை அடையும்போது நான் மாடியில் நின்றிருந்தேன். 'சட்'டென நீ எதிர் வீட்டின் முகப்பருகே வந்து சுற்று முற்றும் நோக்கினாய். என்னைப் பார்க்கவில்லை. ஆயாவிடம் ஜாடை காட்டிவிட்டு நீ படியிறங்கி வந்தாய். உன் இளைத்த, களைத்த தோற்றம் குழந்தையை அள்ளி அணைத்து உச்சி முகர்ந்து முத்தமிட்டது. ஒரு கணம்தான். நீ திரும்பி விட்டாய். துளசி! அந்தக் கணத்தை என்னால் மறக்க முடியவில்லை.. உன் தாய்மையின் உணர்வுக்கே நான் செய்த அநீதி புலப்பட்டது. நான் துடித்தேன். அதன் பின் கண்ணீரின் களைப்பில் பல இரவுகள் என்னைத் தாலாட்டி விருக்கின்றன. அதன் பின்னும் மறு முயற்சி செய்து பார்த்தேன். அப்புறமும் நீ மறுத்து விட்டாய். உருவ வழிபாட்டில் எனக்கு என்றுமே நம்பிக்கையிருந்ததில்லை. துளசி! உன்னை நான் மனத்துள் காத்துப் போற்றினேன். ஆயினும் உன் உருவமோ நிழலோ எதிர் வீட்டில் காணக் கிடைக்காதா என்று சபல சித்தனாகத் தவித்த நாட்களை உனக்கு எப்படி உணர்த்த முடியும்? இத்தனை பெரிய கடிதம் எழுதி உன்னை நெகிழ்வித்து உன்னை ஏமாற்றி விடலாம், உன்னை வென்று விடலாம் என்று எண்ணி இதைத் தொடரவில்லை.

நாளை சீலியாவுக்குப் பிறந்த நாள். அவள் உன்னைத் தெய்வமாக மதிப்பவள். நீ வரவேண்டும் என்று விரும்பி உன்னை அழைத்ததாகக் கூறினாள். எனக்குத் தெரியும், என் அழைப்புக்கு மறுத்தாலும் அவள் அழைப்பைக் கொஞ்சம் யோசித்து விட்டு ஏற்பாய் என்று. அவள் என் மகள் என்னும்போது உன் மகளில்லையா? வில்லியும் இதையேதான் கூறுகிறாள். எனக்கு நேரில் வந்தே கூட உன்னை அழைக்க ஆசைதான். என்னைக் கண்டதும் முகம் திருப்பி நீ உன் அதிருப்தியைக் காட்டி விட்டால் பிறகு சமூகத்தின் எல்லை இன்னும் சில வருடங்களுக்கு அப்பால் அல்லவா போய் விடும்! உன்னை எதிர்பார்க்கும் எங்கள் விருப்பத்தை உண்மையாக்கும் இடம் உன்னிடம் இருக்கிறது. சீலியாவுக்கு உன் ஆசிகள் கிடைக்குமா? ராகவன்''


'எங்கள் விருப்பம்!' இதயம் விம்மியது. எங்கள் என்று தனித்துக் கூறும் போது அவளை விட்டு விலகிவிட்ட இடைவெளி! பின் உண்மை அது தானே? அவள் தூர இருப்பதால் தானே அழைப்பு வருகிறது! கண்களில் முத்துக்களாகத் தோன்றிய நீர் மலையாக வடிவெடுத்தது. வாழ்வின் இனிப்பான நிகழ்ச்சிகளைத் தூரத்து இசையாகத் தள்ளிவிட்ட பின் என்ன மீதி உள்ளது? கழிந்த வருடங்கள் வெள்ளத்தைப் போல் அவளது ஆசாபாசங்களை வாரிக் கொண்டு போய் விட்டன. இனி எஞ்சியது மனம்! மனம்தான். பொய்யான பிரமையில் இதமான சமாதானம் கண்டு, உன்னுக்குள் குமுறி ஒரு கணம் மெய்யாகவும், மறு கணம் பொய்யாகவும் நின்று வாதித்தது பாழும் மனம்!

துளசிக்கு ஊடே ஒரு வியப்பும் ஏற்பட்டது. ஏதோ மெல்ல நெருங்கி வரும் பிரமையில் இதமான வருடல்கள் புலப்பட்டன. மனத்தில் புரண்டு கொண்டிருந்த எண்ணப் பெருமூச்சுக்கு ஒரு வழி புலப்பட்டு விட்டலிப்புத் தெறித்தது. நியதியாய் நின்று வழிகாட்டாமல் விட்டுவிட்ட, மன உறைவுள் அழுந்திக் கிடந்த மோகன உருவம், ஒவ்வொரு துளிச் சுவையையும் சொற் புதர்களில் அமைத்து அதுவே தேனாக, இத்திப்பாகக் காணக் கிடைத்த விந்தை அது. முன்னைப் பழைமை எண்ணங்களையும், பின்னைப் புதுமைப் பின்னல்களையும் உறவுகளின் கனம் மாற்றி யமைக்காது நிலை குலையாமல் காத்து வரும் பண்பு, ஒரு குலுக்கலில் இதுவரை நடந்தவற்றை மாற்றிவிடும் போல் அதிர்ந்தது.

ஏன்? ஏன்? தபாலில் சீலியாவுக்கு அனுப்பி வைக்கலாம் என்று வாங்கி வந்திருந்த திருக்குறள் புத்தகம் கண்ணீரில் நனைந்தது. சட்டென்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தால் சரஸ்வதி நின்றிருந்தாள்! ''அக்கா!'' என்ற அலறலோடு, தன் உடன் பிறந்தவளைச் சேர்த்து அணைத்துக் கொண்டு கேவினாள் துளசி. அவளது வைராக்கியம் நீராகக் கரைந்து உருவற்றுப் போகிறதோ?

4. பிறந்த நாள்!

மனத்தின் பரபரப்பு என்றும்போல் வில்லியைச் சாவதானமாகக் குளிக்க விடவில்லை. காரணம், அன்றுதான் சீலியாவின் பிறந்த நாள். அவசரம் அவசரமாகக் குளித்துவிட்டு, உடை மாற்றிக்கொண்டு, உண்டிக்கான மேசையைத் துப்புரவாக்க வந்தாள். புதிய மேசைத் துணி, கைக்குட்டைகளால்



அலங்கரித்து விட்டு முதல் நாளே வாங்கி வைத்திருந்த சீலியாவின் பெயர் பொறித்த பிறந்த நாள் கேக்கை எடுத்து நடு நாயகமாக வைத்தாள். பளபளக்கும் அழகிய கத்தி ஒன்றும் காட்சி தந்தது.

''பாக்கியம்!'' என்று குரல் கொடுத்தாள் லிஸ்லி.

பாக்கியம் சிற்றுண்டிகளை எடுத்து வந்து அடுக்கினள். லிஸ்லி கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். 'மணி ஏழரை. இன்னும் சீலியாவைக் காண வில்லையே! இரவுப் பணியை முடித்து விட்டு, புறப்பட்டு வந்து விடுவதாக உறுதி கூறினளே!'

''சீலியா இன்னும் வரவில்லையா?'' என்று கேட்டுக் கொண்டே குளித்து முடித்துத் தூய்மையான கோலத் தோடு காலைப் பத்திரிகையைக் கையில் ஏந்தியவாறு அவள் அருகே வந்து உட் கார்ந்தார் ராகவன்.

''நானும் அதைத்தான் யோசிக் கிறேன். ஏழரை மணிக்குள் வந்துவிடு வேன் என்றளே!''

''ஹியர் ஐ ஆம் கமிங், டோன்ட் ஒர்ரி'' என்றவாறே சீலியா ஓடி வந்து தாயார் அருகே அமர்ந்தாள்.

''போய்ச் சீக்கிரம் குளித்து விட்டு வந்துவிடு, பெரியப்பாவெல்லாம் வந்து விடுவாங்க.''

அரை மணியில் சீலியா அழகிய காஞ்சிபுரம் பட்டுப் புடவையைக் கன ஜோராக உடுத்திக் கொண்டு ரோஜா மலர்கள் சூடி, நெற்றியில் மாணிக்க மாகச் சிவப்புச் சாந்து சுடர் விடக் குதூகலத்துடன் வந்தாள்.

''அப்பா! எனக்கு என்ன பரிசு தரப் போகிறீர்கள்?''

''நீ உன் 'ஸ்டெத்'தை மாற்ற வேண் டும் என்றாயல்லவா? புதிய ரப்பர் டியூப் வாங்கி வந்துள்ளேன்!''

''மம்மி! நீங்கள் என்ன?''

''பென்டக்ஸ் வாட்ச் ஸ்ட்ராப். கறுப்புக் கயிறு அறுந்து விட்டதாகக் கூறினயே!''

''உங்களுக்கு என் நன்றிகள். ஏன் அப்பா! பெரியப்பா எனக்கு என்ன பரிசு தருவார்?''

''அது எனக்கு எப்படித் தெரியும்?''

''முதன் முதல் தரப்போகும் அந்தப் பரிசு நிச்சயம் நல்ல பரிசாகத்தான் இருக்கும். இதோ! உம்! பெரியப்பா வந்தாச்சு! வாங்க, பெரியப்பா!'' சீலியா எழுந்து வரவேற்றாள். மற்ற வர்களும் எழுந்து, மீனாட்சி சுந்தரத்தை வரவேற்றனர். ஒருமுறை வாசலைத் துழாவிய ராகவனின் கண்கள் ஏமாற் றத்தில் கனன்றன.

''பெண்களையா எதிர்பார்க்கிறாய்? இன்னும் நூறு பாரதிகள் பிறந்தாலும் நம் நாட்டுப் பெண்கள் புதுமைப் பெண்களாக முடியாது. நீங்கள் ஆரம் பியுங்கள்.'' மீனாட்சிசுந்தரத்தின் குர லின் விரக்தி அவர் போராடித் தோற் றதை உணர்த்தியது.

சீலியாவின் முகம் கன்றிவிட்டது. வெளியே சொல்லத் தெரியாத ஏக்கம் சூழ்ந்தது. அவள் உட்காரும்போதே குழலி ஓடி வந்தாள். குழலியாவது வந்தாளே என்ற நிம்மதியோடு 'கேக்' வெட்டிப் பரிமாறப்பட்டது. பெரி யப்பா கொணர்ந்த பரிசை அவள் கைகள் நெருடிப் பிரித்தன. அவள் கண்கள் விந்தையால் மலர்ந்தன. அது தமிழரசி எழுதிய ''இதய வீணை முதலிய சிறுகதைகள்!''

''பெரியப்பா இது...?''

''உனக்கு என் பரிசு அம்மா. 'தமி ழரசி'யை மிகச் சாதாரணமான எழுத் தாளர் என்று கருதிவிடாதே. இந்தத் தொகுதியில் வரும் கதைகளின் நாயகி ஒவ்வொருவரும் இலட்சியப் பெண்கள்; வளரும் நம் சமுதாயத்தில் இன்னும் பல இலட்சியப் பெண்கள் தோன்ற வழிகாட்டும் தெய்வங்கள்!''

சீலியாவின் இதயம் சிட்டுக் குருவி யின் இதயத்தைப் போல் படபடத்தது. மகிழ்வில் விம்மிய மெய்யும், உணர் வும் கண்களின் ஒளியாக மின்னி, ஆனந்தக் கண்ணீராக விகசித்தது. 'தமிழரசி'யின் இலட்சியப் பெண்ணைப் போல் அவளும் வாழ வேண்டும் என்று அவள் பெரியப்பா வாழ்த்துகிறார்?

''நீ காப்பியம் இதழைப் படித்து வருகிறாயல்லவா?''


''ஓ! தவறாமல்...!''

''எங்கே கல்லூரி சென்றதும் தமி ழையே புறக்கணித்து விட்டாயோ என்று கருதினேன்.''

''இல்லை, பெரியப்பா. கலைக் கல் லூரியிலும் சரி, மருத்துவக் கல்லூரியி லும் சரி, தமிழ் சம்பந்தப்பட்ட கூட்டம், பாராட்டு விழா, விவாத அரங்கு எல்லாவற்றிலும் எனக்கு ஒரு தனிப் பங்கு உண்டு.''

''நல்லதம்மா. நான் வருகிறேன், ராகவா!'' லிஸ்லியைப் பார்த்துக் கை கூப்பி விடைபெற்றார் மீனாட்சி சுந்தரம்.

பீடாவை மென்று கொண்டிருந்த குழலி, ''என்ன சித்தப்பா! எல்லோரும் சீலியாவை ஏமாற்றி விட்டீர்களே! நீங்களாவது ரப்பர் டியூப் வாங்கி வந்திருக்கிறீர்கள். சித்தியாவது பென் டக்ஸ் ஸ்ட்ராப், அப்பாவாவது ஒரு கதைப் புத்தகம். இதெல்லாம் ஒரு பரிசா?'' என்று கேட்டாள்.



''பின்னே எது அம்மா பரிசு?''

குழலி ஓர் அழகிய அட்டைப் பெட்டியைத் திறந்து ஓர் உட்கழுத்துச் சங்கிலியை எடுத்தாள். கறுப்பு மணிகள் தங்கத்தில் கட்டப் பட்டிருந்தன. மூன்று வரிசை. இடையே தங்க முகப்புக்கள் சிறிது சிறிதாக இணைந்திருந்தன. நகாசு வேலை இழைத்த சாமந்திப்பூ டாலர். அதன் நடுவே பளீரிட்ட பச்சைக் கல்.

''ரொம்ப அழகாக இருக்குது, குழலி!''

குழலியின் அன்பு விஸ்வியை நெகிழ வைத்தது. அவளை அப்படியே சேர்த்து அணைத்து முத்தமிட்டாள். அந்தக் காட்சி ராகவனின் நெஞ்சில் அழியாத ஓவியமாகி விட்டது. குழலி தன் அன்புப் பரிசை ஏந்திச் சீலியாவின் அருகே சென்று அவள் கழுத்தில் பூட்டினாள்.

''என் அன்புச் சகோதரி சீலியா பெரிய டாக்டராகி வரவேண்டும்—அடாடா! திருஷ்டி பட்டுவிடும்போல் இருக்கிறதே! சித்தப்பா! இவளுக்குத் திருஷ்டி சுற்றிப் போட வேண்டும். உங்களிடம் கூறுகிறேனே! சித்தி, சீலியாவுக்குத் திருஷ்டி கழித்து விடுங்கள். டர்மரிக் பவுடரையும், லைமையும், வாட்டர் விட்டுக் கலந்து, அதில் பீட்டல் லீஃபைக் கிள்ளிப் போட்டு காம்ஃபர் கொஞ்சம் கொளுத்தி வைத்துச் சீலியாவை உட்கார வைத்து...''

''நீ சிரமப்படாதே, குழலி! சீலியாவுக்குத் திருஷ்டி கழித்துப் பழகியுள்ளேன். ஆங்கில வார்த்தைக்குத் தவிக்காதே!''

''சரி, சித்தி! நீங்கதான் அழகாக இங்கிலீஷ் பேசுவீங்க. சீலியாவும் நன்றாகப் பேசுகிறாள். எனக்குத்தான் இத்தனை சரளமும், வேகமும் வரவில்லை. நீங்களும் எங்கூட இங்கிலீஷே பேசற இல்லை...''

''பேசினால் போயிற்று. வருத்தப் படாதே.''

''தேங்க்ஸ் சித்தி! சித்தப்பா, சீலியா, நான் போயிட்டு வரேன்.'' மங்கைப் பருவத்தின் துள்ளல்களை ஏந்தி நின்ற குழலி குதித்தோடித் தன் வீட்டை அடைந்தாள்.

விஸ்வி ஏதோ பேச வாயெடுக்கு முன் ராகவன் பரபரப்போடு நிமிர்ந்தார். வாசல் திரையருகே மல்லிகை மலர் ஆரம் தூய்மை வடிவில் நின்று கொண்டிருந்தாற்போல் துளசி நின்றாள். விடி வானத்தின் வெண்மையில் மலர்ந்த மலராகச் சிவந்த மேனி, அரிய கம்பீரம், காற்று கிசுகிசுக்கும் கூந்தலிடையே உயிர்ப்பான தன்மை, தழையத் தழைய முடிந்திருந்த கூந்தலில் பளபளத்த ஒன்றிரண்டு நரைகள்!

''வாருங்கள் பெரியம்மா!'' என்று உற்சாகத்தோடு கூவிய சீலியா அவள் கைகளைப்பற்றி உட்கார வைத்தாள்.

விஸ்வி கேக்கையும், சிற்றுண்டியையும் தட்டில் பரிமாறினாள். ராகவன் வைத்த கண் வாங்காமல் தமக்குரியதென்று உலகம் கூறும் ஒருத்தியை, தாம் நுகராத மலரை உற்று நோக்கினார். இளமையில் கண்ட துளசியா இவள்! மணப் பெண்ணாக நாணி நின்று, வெட்கப் புன்னகை புரிந்தவளா? மணந்த ஒரே மாதத்துக்கெல்லாம் தம் கண்களிலேயே படாதவளிடம் தனிமையில் விடை பெற முயன்றதும், அது முடியாமல் தவித்ததும், 'போய் வாருங்கள்' என்று கள்ளத்தனமாக அவள் கண்களால் விடை கொடுத்ததும் நினைவுக்கு வந்தன. அவளைப் பொறுத்தவரை அவருக்கு வேறு இனிமையான காட்சிகள் ஏது? எதுவுமே நடக்கு முன்பே விதியின் திரை விழுந்து விட்டதே. அவளுடைய ஆசை, அச்சம், நாணம், கோபம், சலிப்பு, உல்லாசம், ஊடல், எதையுமே ரசித்ததில்லையே! ஒருமுகமான ஏக்கம் சுமந்த இந்த முகம்? இதை மட்டும்

அவர் எத்தனை தரம் கண்டுவிட்டார்? எத்தனையோ முறை அழைத்தும் மறுத்தவள் வந்திருக்கிறாள் இப்போது. காலம் அவள் கசப்பைப் போக்கிவிட்டதா? அவள் உள்ள மலர் கடைசியில் எனக்காக விரிந்து விட்டதா? அது என்னை ஏற்றுக் கொள்ளும் நாள் வந்துவிட்டதா? அந்தத் தகுதி என்னிடம் பூரணமாக உண்டு என்பதைத் துளசி இத்தனை நாட்கள் கழித்தேனும் உணர்ந்து கொண்டாளா? இத்தனை நாட்கள் காத்த உறுதியின் சுமை அவளுக்குக் கனத்து விட்டதா? அந்த ஏக்கமே அவளது பற்றுக்கோலாக நிற்கிறதா? ஆனாலும்...இதோ...கணவனின் அழைப்புக்கு இணங்கி மனைவி வந்திருக்கிறாள். துளசி எனக்கு மனைவியா? இது உண்மையா? நினைக்க வியப்பாக, காணப் பிரமிப்பாக, உணரத் திகைப்பாகத் தெரியும் உண்மை அது. அதனோடு படரும் உவகையை வெல்ல முடியவில்லை.

துளசி தட்டில் கேக்கில் குத்தியிருந்த 'ஸ்பூனை' எடுத்துத் தூர வைத்துவிட்டு நாசூக்காக விரல்களால் நெருடி வாயில் வைத்துக் கொண்டாள். விரல் கணுக்கள் உப்பி, தோல் சுருங்கிவிட்ட விரல்கள்; பளீரிட்ட நக வரிசைகள். பல ஆண்டுகளுக்கு முன்பு கங்கணம் கட்டிய போது மென்மையோடு உருண்டு திரண்டிருந்த பிஞ்சு விரல்களில்லை. நடுங்கி நாணத்தால் விதிர்த்த கைகளில்லை அவை.

சீலியா அவள் கொணர்ந்த பரிசைப் பிரித்தாள். கையடக்கமான புத்தம் புது திருக்குறளை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்ட சீலியா யாரும் சற்றும் எதிர்பாராத வகையில் துளசியின் கால்களில் விழுந்து வணங்கி எழுந்தாள். துளசியின் கண்கள் பளபளத்து விட்டன. சீலியாவின் தோள்களை அரவணைத்து எழுப்பித் தன் அருகில் உட்கார வைத்தாள். அன்போடு அவள் நெற்றியைத் தடவி விட்டாள். சீலியா துளசியின் கைகளைப் பற்றிக் கொண்டு, ''நான் அழைத்ததற்கு மதிப்பளித்து அன்புகூர்ந்து வந்தீர்களே, பெரியம்மா, அதுதான் என் பாக்கியம்'' என்று மெய்ம்மறந்து கூறினாள். ஒவ்வொன்றாக உணர்ந்து வந்த வார்த்தைகள் இதயத்தை நனைத்தன.

''நீங்கள் என்றைக்கும் பெரியம்மா எங்களுடனேயே தங்கிவிடப் போகிறீர்கள் ?''

இந்தக் கேள்வியைத் துளசி சற்றும் எதிர்பார்க்கவில்லை. இதன் பதிலைத் தன் கணவனும் ஆவலாக உன்னிப்பாகச் செவிமடுக்கிறார் என்பதும் புரிந்தது. ஆனாலும் சில கணங்கள் எதுவுமே அவள் பேசவில்லை.

''காலம் இப்படியேதான் போய்க் கொண்டிருக்க வேண்டுமா? இதற்கு ஒரு முடிவில்லையா ? சட்டென்று முடிந்து ஐக்கியமடையக் கூடியதை இப்படித் தள்ளிக் கொண்டேதான் போக வேண்டுமா ?'' என்று விஸ்வி கனிவாக அந்தப் பேச்சின் தொடரிலேயே ஆரம்பித்தாள்.

ராகவன் கேட்க வேண்டிய முறையீடுகளையும், தூண்ட வேண்டிய கேள்விகளையும் சீலியாவும், விஸ்வியும் கேட்டார்கள். துளசி இவற்றுக்கெல்லாம் பதில் கூற வேண்டியது அவசியமா என்ற நோக்கில் எங்கோ லயித்து, எதையோ தேடும் பாவனையிலேயே இன்னமும் அமர்ந்திருந்தாள்.


''பெரியம்மா ! உங்களை இங்கே அழைத்துவிட்டு, அம்மா ஏதேதோ பழைய நினைவுகளைக் கிளறும் கேள்விகளைக் கேட்டுத் துன்புறுத்துவதாகக் கருதி விடாதீர்கள். உங்கள் மீது கொண்ட அன்பினால், அம்மாவும் அப்பாவும் வருந்தாத நாட்களில்லை. அவர்கள் மீது தவறு என்றுதான் நீங்கள் ஒதுங்கி வாழ்கிறீர்கள். இத்தனை வைராக்கியமும், நெஞ்சுறுதியும் படைத்த நீங்கள், அம்மாவுக்காக வேண்டாம், அப்பாவுக்காக அதை விட்டுக் கொடுத்து மன்னித்துவிடுங்களேன். உங்கள் உயர்ந்த உள்ளத்தின் மன்னிப்பு கிட்டிவிட்டால், தவறுகூட மறைந்து விடும்....என்ன, பெரியம்மா! உங்கள் வாயிலிருந்து வரப் போகும் ஒரு வார்த்தைக்கு நாங்கள் காத்திருக்கிறோம்........''

துளசியின் நாற்காலி அசைந்தது. அவள் 'சட்'டென்று எழுந்தாள். அனைவரின் கண்களும் வியப்பில் விரிந்த போது துளசி, ''வருகிறேன்'' என்று கைகூப்பிவிட்டு விருட்டென்று வெளியே நடந்தாள்.

ஒருவிதத்தில் எல்லோரும் திக்பிரமை அடைந்தாலும் ஒருவிதத்தில் துளசி இந்த மட்டும் வார்த்தைகளை எறியாது போனது குறித்து ஓர் ஊமை நிம்மதி அடைந்தனர். ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கும் துணிவும் வரவில்லை. ராகவன் தினப் பத்திரிகையை விரித்து முகத்தை மறைத்துக் கொண்டார். சீலியா எழுந்து போய் உடை மாற்றிக் கொண்டாள். விஸ்வி மட்டும் வெகு நேரம் மனம் குழம்பி உட்கார்ந்திருந்தாள். **(தொடரும்)**

பொன்னிவனத்துப் பூங்குயில்

கொத்தமங்கலம் சுப்பு



லில் ஈடுபடுத்த ஓர் அறையில் அடைத்து வைத்து விட்டுச் செல்கிறான். கள்ளுக் கடையில் பிரேதமான பஞ்சவர்ணத்தை வீட்டுக்கு அழைத்து வந்தபோது குயிலி அடைபட்ட அறையிலிருந்து விடுபட்டு ஓடிவிடுகிறாள் தன் நண்பர்களான சிறுவர்களின் உதவியினால்! வீட்டில் ஒரு சண்டையே வாரணத்துடன் போடுகிறான் பஞ்சவர்ணம்!

* * *

பிரதாப சிம்மர் அரண்மனைக்குள் நுழைந்ததும் தன் சகோதரர் யுவராஜா பாவாஜியைக் காண்கிறார். யுவராஜா பாவாஜிக்கு ஒன்பது மனைவிகள். அவருக்கு அந்தப்புரமே வாசம்; பாவாஜிக்குக் கோயிலிலிருந்து பூசாரி பிரசாதம் எடுத்து வருகிறான். பிரசாதத்தோடு பாம்பும் வருகிறது. அந்தப் பாம்பைத் தீர்த்துக் கட்டுகிறார் பிரதாப சிம்மர். அந்தப் பாம்பை விடும் ஒற்றர்களைக் கண்டு பிடிக்கப் பிரதாப சிம்மரும் முனைகிறார். அந்தப் பணியில் பிரதாப சிம்மரின் தோழர் சர்க்கரையைப் பண்டித முனிவர் கைது செய்வது பிரதாபசிம்மருக்கு வியப்பை உண்டாக்குகிறது. உண்மையில் சர்க்கரையைக் காப்பாற்றவே முனிவர் அந்தத் தந்திரம் செய்தார் என்பது பின்னால் புரிகிறது. 'முல்லைவேந்தன்' செய்யும் சதிச்செயல் என்பது தெரிந்ததும், அவனை முறியடிக்கப் பிர



முன் கதைச் சுருக்கம்

கலைகளுக்கெல்லாம் பிறப்பிடமான தஞ்சையில் இரட்டைக் குதிரைகள் பூட்டிய வண்டியில் கிருஷ்ண பரமாத்மா, பாமா-ருக்மிணி சமேதராக விஜயம் செய்கிறார். அந்தக் கிருஷ்ண பரமாத்மா வேஷத்திலுள்ளவர் பிரதாப சிம்மர். பிரதாப சிம்மரின் கண்ணில் சுதந்திரமாகத் திரியும் குயிலி படுகிறாள். குயிலி தாசி பரம்பரையில் பிறந்தாலும் தனிப் பிறவி. சிட்டுக் குருவியாக அவள் தஞ்சை நகரையே சிறுவர்களுடன் உல்லாசமாகச் சுற்றி வருகிறாள். ஏழைச் சிறுவனின் பசி துடைக்க அவள் ஓர் உணவு விடுதியில் சாய வேட்டிக்காரரின் பொடி டப்பியினால் ஒரு வராகன் சம்பாதித்து விடுகிறாள். தன் பரிவாரங்களுக்கு உணவளிக்கிறாள். அவள் ஆனந்தத்தைக் கெடுக்கச் சின்னம்மா வந்து அவளை வீட்டுக்கு இழுத்துச் செல்லுகிறாள். அவளுக்கு மாமா என்றால் பயம். அவள் மாமன் வெள்ளைவாரணம் அவளைப் பரம்பரைத் தொழி

தாபசிம்மர் மூண்கிறார். வாளுக்குப் பிறந்த மகனான பிரதாப சிம்மனுக்கு அரசர் துக்கோஜி தரும் மதிப்பும் மரியாதையும் பாவாஜியின் மனைவி சஜனாபாய்க்கு எரிச்சலை உண்டாக்குகின்றன. அதோடு துக்கோஜி மகாராஜா ஊர்வலத்தில், குதிரையில் பிரதாபசிம்மர் ஆரோகணித்து வருகிறார். அவர் வருவது எதற்காக? மேலே தொடர்ந்து படித்தால் தெரிந்து விடுகிறது.

அத்தியாயம் 18

"பூங்காற்றே! பூவிதழே!"

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' என்று பாடியவரும் நாயன்மார்களில் ஒருவர்தான். நாயன்மாரும் நாயகிமார்களும் காதலை வளர்ப்பவர்களே. ஆனால் இடத்தில்தான் வேறுபாடு. இளவரசருக்குப் பின், ஏராளமான பல்லக்குகள் வந்தன. அறுபத்து மூவர்தான் வருகிறார்களோ? அல்ல, நாயன்மார்களுக்கென்று தனித் திருவிழா தஞ்சையில் உண்டு. இவற்றில் வந்தவர்கள் நாயகிமார்கள். ''மாமியார் ஒன்பது பேர்களும், மருமகள் ஒன்பது பேரும் பதினெட்டு மூடு பல்லக்கில் வருகிறார்கள்'' என்றான் சின்னத்தம்பி. திகிலடைந்தாள் குயிலி.

இத்தனை அலங்காரம் செய்து கொண்டது வீணாயிற்று. பல்லக்கில் போட்டு மூடிவிட்டார்களே என்று சஜனாபாய் வருந்தவில்லை. கெட்டிக்காரி யல்லவா? பட்டுத் திரையின் வழியே வெளியே இருப்பவர்களை அவள் பார்த்துக் கொண்டே வந்ததால் தன்னையும் அவர்கள் பார்க்கிறார்கள் என்று எண்ணினாள்.

வீதி அழகாக உள்ள தஞ்சாவூரிலே சந்துகளும் அதிகம். குயிலியும் அவளுடைய கூட்டத்தினரும் எல்லையம்மன் கோயில் தெரு வழியாக ஓடிச் சந்து பொந்துகளில் புகுந்து ஊர்வலத்தின் ஆரம்பத்துக்கே வந்து விட்டார்கள்.

பீரங்கி வண்டியைப் பார்த்தவுடனே குயிலி கடகடவென்று சிரித்தாள்.

''என்ன சிரிக்கிறாய்?'' என்று கேட்டான் சின்னத்தம்பி.

''ஏன் தம்பி, இது என்ன தம்பி?'' என்றாள்.

இதற்குள் முந்திரிக் கொட்டைவெகு அவசரமாகப் பதில் சொன்னான்: ''இது தெரியாதா குயிலி? இதுதான் சாரங்கி'' என்றான்.



சின்னத்தம்பி அவன் தலையிலே ஒரு குட்டுக் குட்டி ''சாரங்கி இல்லடா. இது பீரங்கி'' என்றான்.

சாரங்கிக்கும் பீரங்கிக்கும் உள்ள வித்தியாசம் குயிலிக்குத் தெரியாதா? ''ஏண்டா சின்னத்தம்பி, சாரங்கின்னு சந்தோஷம் வரும். பீரங்கிலே என்ன வரும்?'' என்றாள்.

இதற்குள் முந்திரிக் கொட்டை, ''ப, பா, பி, பீ'' என்றான்.

''என்னடா புதிர் போடறே?''

''புதிரில்லே குயிலி. பறங்கி வருவார், பாதிரி வருவார், பின்னாலே பீரங்கி வரும். அதுதான் நாயகரு மகாராஜா பெரிய கோயில்லேயே சுதை வேலை செய்து பரங்கிச் சிலையைப் போட்டுக் காட்டிட்டாரே?'' என்றான்.


இதற்குச் சின்னத்தம்பி, ''நாயக ராசா சோசியம் பார்த்துச் சுதை வேலை செய்யலே. தரங்கம்பாடியைப் பரங்கிக்காரனுக்குக் கொடுத்துட்டு அவன் கிட்டேர்ந்து ஒரு பெரிய பீரங்கியை வாங்கினாரு. அதுக்குப் பேரு 'ராஜகோபாலன்'னு வச்சாரு. அவன் தலையைத்தான் கோபுரத்தில் சுதை வேலை செய்தாரு.''

''அப்படியொண்ணுமில்லே. அவன் பரங்கியில்லையாம். டச்சுக்காரனாம். கல் தச்சு, மண் தச்சு எல்லாம் நல்லா செய்வானாம். நாயக்கருக்கு அரண்மனை கட்டிக் கொடுத்தானாம். அதுக்காக அவன் தலையைத் தொப்பியோட கோபுரத்தில் போட்டாராம்.''


''இல்லே. இது இரும்புப் பீரங்கி. நம்ப தஞ்சாவூர்க் கோட்டைக்குள்ளே இருக்குது பாரு. ஒம்பது மொழ நீளத்திலே. மூணு யானைங்க ஒண்ணு பின்னாலே ஒண்ணு படுத்தாப்பலே கன்னங்கரேலென்று இருக்குது பாரு. இராட்சசப் பீரங்கி!''

''பீரங்கியை ஏன் வாங்கினாங்க? அவங்க சிரங்கத்தை நம்பினவங்களாச்சே.''

''என்ன செய்யறது? முதல்லே சீரங்கத்தைத்தான்



சக்திக்கும் வலிமைக்கும் போர்ன்விடா!



சக்தியளிக்கும் போர்ன்விடா நாவினிமையிலே சிறந்ததோர் பானமாக விளங்குவதன் ரகசியம்—செழுமையான கோகோ!



வளமையின் சிறந்த பொருள்களான கோகோ, மால்ட் சர்க்கரை, பால் இவையாவும் திட்டமாக கலக்கப் பெற்று தயாரிக்கப்பட்டதன் பலன்—தெம்பும் திடமும் தரும் ஒரு தீஞ்சுவை பானம் போர்ன்விடா. சூடான பாலிலே போர்ன் விடா கலந்து ஒரு கோப்பை அருந்துங்கள்...நாவுக்குத் தான் என்ன இனிமை, உடம்புக்குத்தான் என்ன வலிமை.

சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்

காட்பரிஸ் போர்ன்விடா

2296 A TM

நம்பினுங்க. பின்னுலே வந்தவங்க பீரங்கியை நம்பப் பண்ணிட்டாங்க.''

''எதுக்குப் பீரங்கி? பீரங்கினு என்ன? அது மழை, மின்னல், இடி, மேகம் எல்லாம் கலந்த ஒண்ணு. பின்னுலே தீப்பந்தத்தை வெச்ச உடனே ஒரு மின்னல் வெட்டும். அந்த மின்னலுக்குப் பொறகு ஒரு இடி இடிக்கும். அந்த இடியைத் தொடர்ந்து கறுப்பா புகை மேகங்கணக்கா கௌம்பும்.''

''ஆ! அப்புறம் மழை?''

''மழைதான். ஆனு மழையிலே நல்ல தண்ணி பெய்யும்; இந்தப் பீரங்கி மழையிலே கண்ணீர்தான் பெய்யும்'' என்ருன் முந்திரிக்கொட்டை. குயிலி அப்படியே ஸ்தம்பித்து நின்ருள்.

''ஆமா, இந்தப் பீரங்கியை வச்சு யாரைச் சுடுவாங்க?''

''உங்க மாமன் வெள்ளையைச் சுடுவாங்கன்னு வெச்சுக்கவேன். அவனைப் பீரங்கி வாயிலே நிறுத்திச் சுடுவாங்க'' என்ருன் சின்னத்தம்பி.

குயிலி, ''ஹூம், எங்கே என் மாமனைச் சுடட்டும் பார்ப்போம். அப்படிச் சுடறவங்க கையை எடுத்து நான் கட்டுப்புடுவேன். அப்படி வேணுமின்னு அந்தப் பஞ்சவர்ணத்தை வச்சுச் சுடட்டும்'' என்ருள் குயிலி. எல்லோரும் கடகடவென்று சிரித்தார்கள்.

அதற்கடுத்தாற்போல் யானையின் மேல் வருகின்ற வெள்ளி முரசம் குமுறுவதைக் கேட்டாள் குயிலி. ''ஏய், இதை எதுக்காக வச்சிருக்காங்க? நம்ம சோழ மண்டலக் கடற்கரை நீளம் அதிகம். அம்பிட்டு ஊர்க் கடலும் சேர்ந்து குமுறினு எப்படி இருக்குமோ அப்பிடிக் குமுறுதடா இந்த மொரசு'' என்ருள் குயிலி.

முந்திரிக் கொட்டை சிரித்தான். ''ஏன் குயிலி! இத்தனை கொடிகள் இருக்கும்போது இவங்க ஏன் காவிக் கொடியை இம்புட்டு ஒசரத்துக்குப் போட்டிருக்காங்க?'' என்று கேட்டான் சின்னத்தம்பி.

''எங்க பாட்டன் கூடத்தான் வீட்டிலேயே கொடி போட்டு ஆண்டாரு'' என்ருன் முந்திரி.

''சொல்லுடா! சொல்லு! ஏன் நிறுத்திட்டே? உங்க பாட்டன் கொடி போட்டாரு. உங்க அப்பா அதிலே வேட்டி உலர்த்திட்டாரு, இல்லையா?'' என்ருன் சின்னத்தம்பி.

''போடா! எங்க பாட்டன் சோழ மகாராஜாவோட நம்ப ஊர் மலையிலே வேட்டைக்குப் போனரு. அங்கே புலி வந்து மேலே பாய்ஞ்சுடுச்சு. உடனே அதைப் பிடிச்சு ஒரு கொடியாலே கட்டிக் கொண்டாந்துட்டாரு. புலியைக் கொடியால் கட்டினதுக்காக மகாராஜா எங்க பாட்டன் கிட்ட 'நீ வீட்டிலேயே புலிக்கொடி போட்டுக்' கன்னுட்டாரு.''

குயிலி சிரித்தாள். ''தஞ்சாவூரில் ஏதுடா மலை?'' என்று கேட்டாள்.

''ஆ! அப்ப எவ்வளவு மலை இருந்தது தெரியுமா? சோழ மகாராஜா தான் சாமிமலை ஒண்ணை மட்டும் வச்சுக்கிட்டு மத்த சாதா மலைகளை எல்லாம் இடிச்சு, பெரிய கோயில் கட்டிப்பிட்டாரு'' என்ருன் சின்னத்தம்பி.

''சபாஷ்டா! புளுகினுலும் பொருத்தமாப் புளுகறே.''

''நம்ப நாடு கோயில் பெருத்த நாடு. பக்திக்கு வாயில் வருத்த நாடு. ராஜா கூடக் கரூர்ச் சித்தரைக் கும்பிடுவாரு. வாயில் காவி, வானியில் காவி, களிப் பெருக்கு காவி, காவிரியிலே மூணுலே இரண்டு பங்கு காவிதானேடா?'' என்ருள் குயிலி.

இதைக் கேட்டு அந்த ஞானக்கொடி வானில் மேலும் ஒளி வீசிப் பறந்தது. சடேரென்று திரும்பிப் பார்த்தாள் குயிலி. அரசன் வருவது தெரிந்தது.

''என்ன தம்பி, நம்ம ராசாவினுலே யானைக்கு அழகா, யானையினுலே ராசாவுக்கு அழகா?'' என்ருள் குயிலி.

''யானைதான் அழகு.''

''போடா! ராசாவினுல்தான் யானைக்கு அழகு. எத்தனை வைத்திய சாலை வச்சிருக்கிருரு. எத்தனை சத்திரம் கட்டி யிருக்கிருரு!'' என்று சொன்னுள் குயிலி.

இத்தனைக்கும் குயிலிக்குச் சத்திரத்தில் சோறு கிடைத்ததில்லை. அப்படியிருந்தும் அவளுக்கு அரசர் பிறருக்குச்

பிரியம் எங்கே?

''நான் ஒன்பது நாய்களை வளர்க்கிறேன். இதனுல் சில சமயம் கோபம் கொண்டு என் கணவர் வீட்டைவிட்டுப் போய் விடுவதாகப் பயமுறுத்துகிருர். தங்களைவிட நாய்களைப் பற்றியே நான் அதிகம் கவலைப்படுவதாக என் குழந்தைகள் குற்றம் சாட்டுகிருர்கள்.''

இப்படிச் சொன்னவர் யார்?

(54ம் பக்கம் பார்க்க)



''வர வர நீ சினிமா ஸ்டார் மாதிரி ஆயிண்டு வரே!''

செய்த தருமங்களெல்லாம் பெரிதாகத் தோன்றின.

அவரை இவ்வாறு வியந்து பார்த்துக் கொண்டே இருந்தவள் சடக்கென்று நின்றாள். அவள் கண்களிலே ஒரு மின்னல் தட்டியது போல் இருந்தது. பிரமித்தாள். ''ஏய்! இந்தக் குருதை மேலே வருவது மனுஷரா? தெய்வமா?'' என்று கேட்டாள்.

''குருதை மேலே மனுசங்கதான் வருவாங்க. தெய்வம் வருமா?''

''ஏன் தெய்வம் வராது? தேவலோகத்துக் குருதையா இருந்தா காலு தரையில் படாது! அந்தக் குருதைக்குக் கால் இருக்குதா பாரு?'' காலைப் பார்த்தாள். அது அவள் சந்தேகத்தைத் தீர்க்கவில்லை. தரையில் கால் பாவியும் பாவாமலும் ஆடிக் கொண்டே இருந்தது. அதன் அழகிலே மயங்கி நின்றாள். புஞ்சையே இல்லாத தஞ்சையில், கொள்ளுக்கு எங்கே போகும் குதிரை? வீறுக நடும் பாலைக் குடித்து வெள்ளை வெளேர் என்று இருந்தது அந்தக் குதிரை. பிடரி மயிரால் அடிக்கடி தன்னுடைய நெற்றியில் இருக்கும் நீலப் பதக்கத்தைத் துடைத்துக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் தன்னுடைய வாயில் இருக்கும் கவரியை மேலே இருப்பவருக்கு வீச ஆசைப்பட்டு, வாலை ஒரு முழம் தூக்கியது. ஆனால் மேலே இருக்கின்ற வீரரோ அசுவ சாஸ்திரத்தையும் நன்கு அறிந்தவர். ஆகவே அவர் குதிரையைப் புரிந்து கொண்டார். தன்னைப் புரிந்து கொண்டார் என்பதைத் தன் வாயிலிருந்த கடிவாளத்தின் மூலம் குதிரை புரிந்து கொண்டாலும் அதன் குணம் போகுமா?

குயிலி நினைத்தாள்: ''அடேயப்பா! அவர் முகத்தில்தான் எத்தனை ஆனந்தம்! எல்லோரும்தான் மீசை வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த மீசைக்கு ஏன் இவ்வளவு அழகு வந்தது?'' என்று அவள் எண்ணியபோது அவர் முகத்திலே அரும்பிய மீசையைப்போல அவளுடைய அகத்திலே ஏதோ ஒன்று அரும்பியது.

''தஞ்சாவூர் வாவலியிலே நெற்றிக் கண்ணைத் திறந்தார். நிலத்தில் மதன் விழுந்தான்'' என்று பாடுவார்கள். குயிலியின் எண்ணத்திலே பிரதாப சிம்மரின் உருவம் நெற்றிக் கண்ணைக் காணாத மன்மதனோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியது. அவரது திருமுக மண்டலத்துக்கு மேலே அந்த முகத்துக்கே அளவெடுத்துச் செய்த நவரத்தினக் கிரீடம் பளிரென்று மின்னிக் கொண்டிருந்தது. குயிலியின் பக்கம் கூட்டத்தின்மீது அவர் பார்வை திரும்பியபோது அவர் முகத்தைக்கண்டு அவள் நாணிக் கண் புதைத்தாளா அல்லது கிரீடத்தின் ஒளியால் கண்கள் கூசவே கண்களைப் பொத்திக் கொண்டாளா என்பது தெரியவில்லை. ஆஜானுபாகுவான அவரது கைகளிலே வாகு வளையமும் அங்கதகடகமும் புனைந்திருந்தார். அந்தக் கடகத்தையும் வளையத்தையும் பார்த்தபொழுது குயிலிக்குச் சிறிது சிரிப்புக் கூட வந்தது. ''ஹா! பெண்களைப் போல் இவர் நகை போட்டுக் கொண்டிருக்கிறாரே'' என்று எண்ணினாள். அப்படி ஏளனமாக எண்ணிய பொழுதும் அவளுடைய கண் அந்தக் கைகளை விட்டு வரவேயில்லை. 'எவ்வளவு நீண்ட கைகள்? 'கை நீளம்' என்று வேறு வேறு பொருள்களில் சொல்கிறார்களே! கொடுத்துக் கொடுத்து நீண்ட கை அல்லவா இவை' என்று அவளுக்குத் தோன்றியது. அந்தக் கைகளிலே ஒன்று லகானைப் பிடித்திருந்ததைப் பார்த்தபோது அவளுக்கு இந்தக் குதிரை செய்த பாக்கியம் எவ்வளவு? என்று பொறாமைப்பெருமூச்செறிந்தாள்.

பிரதாபசிம்மருடைய முகத்திலே களை சொட்டியது. அது வாலிபத்தின் களைதானா அல்லது வீரத்தின் களையா என்று குயிலி சந்தேகித்தாள். முத்துப் போன்ற பற்கள் சற்றே வெளியில் தெரியப் புன்னகை செய்து கொண்டு பக்கத்திலிருந்தவர்களை அவர் பார்த்துக்கொண்டிருந்தார். அந்தப் புன்னகையைக் கண்டவுடனே ஏதோ தன்னைப் பார்த்துப் புன்னகை செய்வது போலக் குயிலி இலேசாகத் தலை கவிழ்ந்தாள். சில நல்ல சித்திரங்கள் எந்த இடத்திலிருந்து பார்த்தாலும் அவர்களையே பார்ப்பது போலத் தோன்றும். பிரதாபசிம்மரின் புன்னகை எல்லாருக்கும் அவர் தம்மைப் பார்த்தே புன்னகை புரிவது போலத் தோன்றியது. கூட்


'வேண்டாமடி, என்
'ஸன்' வேக்வம் ஃப்ளாஸ்க்
—தானா அகப்பட்டது,
இந்தா, வேண்டாம்'.







பிழைக்கத் தெரிந்த ஒருவனிடம் — சென்றிப்
பெருங்கலை எப்படிக் கற்றதென்றேன்.
"முழுக்க முழுக்கமுன் தாக்குவதே — கொண்டு
முன்னேற லாயினன், வாழ்வில்!" என்றான்!

பிழைக்கிற மற்றோர் நபரிடமும் — சென்று,
பேசுக; உன்திறம் எங்ஙன் என்றேன்.
"வளைக்க வளைக்கமுன் தாங்குவதே — கொண்டு
வாய்த்ததில் வாழ்வும்தான் காக்கா!" என்றான்!

டமோ தாங்க முடியவில்லை. ஏழை! அதிலும் பெண் எவ்வாறு கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே செல்ல முடியும். ஊர்வலத்தின் இருமருங்கிலும் வரும் வீரர்கள் கூட்டத்தைப் 'போபோ' என்று விரட்டுகிறார்கள். அருகே சென்று அவர் முகத்தைப் பார்க்கவேண்டும் என்று அவள் மனம் நாடியது. அது முடியாததால் முகம் வாடியது. அப்பொழுது காவிரித் தென்றல் ஒரு நன்மை செய்தது. காற்றுவாக்கிலே ஒரு ஆனந்தம் அவளுக்குக் கிட்டியது. பூங்காற்று என்று தெரியாமலா பாடினார்கள். அவர் கழுத்திலே துலங்கிய தஞ்சாவூர் ரோஜாப்பூ மாலையிலிருந்து ஓர் இதழ் காற்றில் லேசாக அலைபட்டு அவள் கன்னத்தின்மீது வந்து மோதியது. அடேயப்பா! அவள் உடம்பில் தான் எத்தனை உணர்ச்சி! அந்தப் பூவிதழை அவள் பூ இதழாகக் கருதவில்லை. ஏதோ அவருடைய கைவிரல்கள்தான் தன்மீது பட்டதைப் போல் சிறிது நேரம் நடுங்கினாள். குபீரென்று வியர்த்தது. உடனே தன் கையிலிருந்த மச்சத்தைத் தன் மேலாடையினால் மூடிக் கொண்டாள். சற்றுக் குனிந்தாள். அவளறியாத ஏதோ ஓர் உணர்ச்சி அன்றுதான் முதன் முதலில் ஏற்பட்டது. இந்த உணர்ச்சியைக் கெடுப்பதற்காக வந்ததுபோல் "புலி! புலி!" என்று ஒரு பெரிய இரைச்சல் கேட்டது. குயிலி திரும்பினாள்.

புலி வேஷக்காரன் பிரதாபரைப் பார்ப்பதற்காகக் குதிரை வந்த பக்கத்திலே இரண்டடி திரும்பி நடந்தான். கூட்டத்திலே ஒரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. 'ஆ-ஆ-ஆ' என்று அலறினர் எல்லோரும். பிரதாபசிம்மரின் குதிரை குபீரென்று எட்டடி உயரம் எழும்பி ஒரு குதி குதித்தது. சக்கர வட்டமாகச் சுழன்றது. 'காட்டுப் புலி' என்று புலி வேஷத்தை எண்ணி விட்டதோ என்னவோ? அது பிரதாபருக்காகவே தனியாக வளர்க்கப்பட்ட குதிரை. அரசர் ஏறும் குதிரையில் வேறு ஒருவர் ஏறுவது அவமரியாதை ஆதலால் அதன்மீது இன்றுவரை யாரும் ஏறியதில்லை. ஒருவருக்கும் கிடைக்காத பாக்கியம் தனக்குக்

பிரியம் எங்கே? விடை:



ஒன்பது நாய்களை வளர்ப்பவர்

அரசி எலிசபெத்

ஆதாரம்: ''டெய்லி மிரர்''

அனுப்பியவர்: ''பாபு''

கிடைத்தது என்ற கர்வம் இருந்தாலும் அவரையும் கீழே கவிழ்த்துவிட வேண்டும் என்றுதான் அது எண்ணியது. படபடப்பும் துடி துடிப்பும் கொண்ட குதிரைக்குப் பக்கத்திலே திடீரென்று புலி வேஷக்காரன் வந்துவிடவே, அது தன்னையறியாமல் தாவி வெறி கொண்டு ஓடத் தலைப்பட்டது. ஊர்வலத்திலிருந்து பிரிந்து அது ஓடும்போது ஒரு கணத்தில் ஆபத்து நேர்ந்திருக்கலாம். ஆனால் தன் கைக்கு அடங்காதது ஒன்றுமில்லை என்று சொல்வதைப் போல் பிரதாப சிம்மர் அந்த லகானைப் பிடித்துச் சுண்டிய ஒரு சுண்டிலே ஓடிய குதிரை கனைத்துக் கொண்டே ஒரு முழங்காலை மண்டியிட்டது. தான் செய்தது தவறு என்று வணங்குவதுபோல் வணங்கி எழுந்தது. எட்டி நின்ற குயிலி கண் கொட்டாமல் பார்த்தாள். பிரதாப சிம்மர் குதிரையைத் தட்டிக் கொடுத்தார். ஓடி அவர் பக்கத்தில் நின்று ''சபாஷ்! நீங்கதான் ஆம்பிள்ளை'' என்று அவரையே தட்டிக் கொடுக்க எண்ணினாள் குயிலி.

ஊர்வலம் மேலே நடக்க ஆரம்பித்து விட்டது. குயிலிக்குத் தான் தஞ்சையில் தான் இருக்கிறோமா அல்லது விஞ்சையர் உலகத்தில் இருக்கிறோமா என்ற எண்ணம் ஏற்பட்டது. குதிரையின் கால்கள் தரையில் பாவவில்லை என்பதைப் போல அவளுடைய கால்களும் தரையில் பாவாமல் ஆனந்தத்தில் ஆட ஆரம்பித்தன. 'அழகு என்றால் இது வல்லவா அழகு! அழகிருக்கலாம். சிலருக்கு வீரமிருக்காது. ஆனால் இந்த வீர வாலிபர் அந்தக் குதிரையை எப்படி அடக்கினார்! அப்போது அவர் முகத்திலே கடுகடுப்போ, வேதனையோ இல்லையே? புன்சிரிப்பு மாறாமல் அந்தப் புரவியை அடக்கினாரே' என்று எண்ணியபோது அந்தப் புன்னகை அவளுடைய உள்ளத்தில் போய்ச் சிலிர்க்க வைத்தது. தன்னை மறந்து நின்றாள். அப்படி நிற்கும்போது பக்கத்திலிருந்த ஒரு குரல், ''என்டா, புலிவேஷக்காரப் பயலே! உன்னை யார்ரா புரவிக்குப் பக்கத்திலே போகச் சொன்னாக'' என்று கேட்டது. குயிலி திடுக்கிட்டாள். குயிலியின் கடைக் கண்கள், குதிரையின் கண்கள் போல் பயத்தோடு பக்கத்தில் திரும்பின. அங்கு நின்று கொண்டிருந்தான் அவளுடைய மாமன் வெள்ளை. அவனுக்கு அருகில் பஞ்சவர்ணம் ஆடிக் கொண்டே ''குட்டியைத் தேடு மாமா என்றால் குதிரையைப் பத்திக் கவலைப் படுறியே?'' என்று கோபித்தான். குபீரென்று பக்கத்தில் நின்றிருந்த சின்னத்தம்பியின் மேல் துண்டைப் பறித்துத் தலையில் முக்காடிட்டுக் கொண்டு கூட்டத்துக்குள்ளே நுழைந்து பறந்தாள் குயிலி. ஓடின ஓட்டத்தில் ஒருவர் மேலே மோதிக் கொண்டாள். அவரைச் சுற்றிலும் ஏராளமான கூட்டம் இருந்தது. அவர் கையிலே ஏதோவொரு புதுமையான பொருளை வைத்துக் கொண்டு அதன் மேல் ஈயத்தால் செய்த எழுதுகோலினால் கோடு கோடாகப் போட்டுக் கொண்டிருந்தார். அவர் கையில் உள்ள பொருளைப் பார்ப்பதற்குத் தான் அத்தனை கூட்டமும். அதைப் பார்த்து ஒருவர் சொன்னார்: ''இது தான் காகிதம்.'' அவர் கையிலே வைத்திருந்த புதுமையான பொருள் மன்னார்குடியிலே காகிதக்காரத் தெருவிலே செய்த காகிதம். அந்தக் காகிதத்தை ஒரு பலகையின்மீது பரப்பிக் கையில் வைத்துக் கொண்டே பிரதாப சிம்மரைப் பார்த்தபடி அவருடைய முக வளைவுகளையும், அங்க லக்ஷணங்களையும் குறித்துக் கொண்டிருந்தார் ஓவியர் ரங்கமன்னார். தம்மேல் வந்து மோதிய குயிலியை அவர் கவனிக்கவேயில்லை. குயிலி திரும்பிப் பார்த்தாள். உணவு விடுதியில் அவளை ஏமாற்றிய நிகழ்ச்சி அவள் கண் முன் தோன்றியது. நிற்பவர் இன்னொரு எதிரி. 'இவர் கையில் அகப்பட்டால் என்ன ஆகும்' என்று அங்கிருந்து அஞ்சி ஓடினாள். ''திருடி, திருடி'' என்றது ஒரு பெண் குரல். கூட்டம் சரேலென்று அவள் பக்கம் திரும்பியது. (தொடரும்)



ஓவல்டின்

ஒப்பற்ற 'ஒலிம்பிக்' பானம்

'ஒலிம்பிக்' தென்பை உங்களுக்குத் தருவதற்கென சக்தி செறிந்து வருகிறது.

மற்றெந்த உணவு பானத்தையும் விட அதிக மால்ட் அடங்கப்பெற்று, சக்தி செறிவூட்டப்பட்டது ஓவல்டின். மால்ட் என்பது தென்பு தரும், இயற்கையின் ஒப்பற்ற ஊட்டப் பொருள்களில் ஒன்றாகும். அதிக மால்ட், பால், வைட்டமின்கள், புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், யாவும் அடங்கிய ஓவல்டின், ஆட்ட வீரர்களுக்குக் கிடைக்கும் அதே 'ஒலிம்பிக்' தென்பை உங்கள் குடும்பத்திற்கும் அளிக்கும்.

அருந்துங்கள் ஓவல்டின் : உடல்நலத்திற்கு ஓவல்டின், வலிமைக்கு ஓவல்டின், தென்புக்கு ஓவல்டின்.

சக்தி செறிவிக்கப்பட்ட ஓவல்டின், 1932 முதல் நடத்தப்பட்டுவரும் 7 ஒலிம்பிக் ஆட்ட விழாக்களிலும் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு பானமாக விளங்கிவருகிறது.



ஒவ்வொரு துளியிலும் ஊக்கம் துள்ளும்

ஓவல்டினைப் பாரதத்தில் ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்., நிறுவனம், லண்டனிலுள்ள ஏ வாண்டர் லிமிடெட்டின் லைசென்ஸ் பெற்றுத் தயாரிக்கிறது.

கசா/பா/ம

ஏகபோக விநியோகஸ்தர்கள்: வோல்டாஸ் லிமிடெட்.



தீர்ப்பு

எஸ். ரங்கநாயகி

மாதவனுக்கு நன்றாகப் புரிகிறது. அவன் தாயார் நாராயணி மறைத்துப் பேசுகிறாள். தெளிவாக வர வேண்டிய வார்த்தைகளில் மறைவுக்கான பூச்சு இருக்கிறது. செயற்கை மலரைக் காட்டிவிட்டு 'இதுதானப்பா மலர்' எனக் கூறிவிட்டு இயற்கை என்ற சொல்லுக்கான வெளிச்சத்தைக் காட்டாமலே தொக்கி நிற்க வைத்து விடுகின்ற கெட்டிக்காரத் தனம்தான் அது.

''அம்மா! உண்மையாகத்தான் சொல்லுகிறாயா?'' என்று கேட்டுவிட்டு மாதவன் நிறுத்துகிறான்.

நாராயணி மகனை நோக்குகிறாள். சூரிய கிரகணத்தை நேராக நோக்க முடியாத கூச்சமாகத் தலை தாழ்கிறது. ''மாதவா! புவனா வீட்டுக்குப் போனேன். அந்த வார்த்தையில் பொய் நிழலாடுவதாக உனக்குப் புலப்பட்டால் அது என்னுடைய குற்றமில்லையப்பா !''

மாதவன் தாயாரைக் கூர்ந்து நோக்குகிறான். கண்களில் சத்தியத்தின் பிரகாசம்தான் தெளிவாகத் தோன்றுகிறது. அது தன் மனப் பிரதிபலிப்பாக இருக்குமோ! இந்நாள் வரை தாயை, தன்னுடையவளாக, தனக்கே சொந்தமாகக் கருதிவிட்ட நிலைக்கான தத்துவமாக இருக்குமோ ! அம்மா என்றுமே ஏமாற்றமாட்டாள். குழந்தையின் நலனே அவளுக்கு அமிர்தத்தின் ருசி என்ற எண்ண ஓட்டத்தின் காரணமாக இருக்குமோ ! அப்படித்தான் இருக்கட்டுமே. அம்மாவிடம் என்றென்றும் தன் அந்த அன்பு நிலைத்திருந்தால் நல்லதுதானே ! ஆனாலும் புவனா....

அவளை நினைக்கும்போதே ஒரு சிறு சிலிர்ப்பு. நிர்மலமான ஆகாயத்தின் நடுவே பூரண சந்திரனைக் காண்பது போன்ற இன்பம். சுற்றிலும் பிரகாசம் பரவுவது போல் அவள் புன்னகையே அவளுக்கும் சுற்றிலுமுள்ளோர்க்கும் ஒளியைத் தந்து விடும் மென்மை.

சொல்லப் போனால் புவனாவுடன் தன் வாழ்க்கை ஆரம்பமாகுமென்றே. முடிவு இப்படிக் காட்டுமென்றே அவன் நினைத்துக் கூடப் பார்த்திருக்கவில்லை. இருபத்திரண்டு வயதிலேயே நல்ல வேலையில் அமர்ந்துவிட்டவன். தாய்க்கு ஒரே மகன். அழகுக்கு, மன்மதன் இப்படித்தான் இருந்திருப்பானோ என்று சொல்லக்கூடிய உருவம். குறைவு என்ற சொல்லுக்கு எந்த வகையிலும் அவனிடம் பொருளே இல்லாமல் இருந்தும் முப்பத்தைந்து வயது வந்தும் இன்னும் தனியாகவே நிற்கிறானே என்று தாய் அங்கலாய்க்கும் நிலையும் வந்து விட்டது. வரன்கள் வந்தன. ஒன்றும் முடிவு வரையில் நிற்கவில்லை. தனக்குத் தகுந்த உருவத்தில், அழகில் தன்னைப் போல் ஒரு பெண்ணை மாதவன் விரும்பியதே காரணமாக இருக்கலாம்.

அப்போதுதான் ஒரு நாள் மகன் கூறியது நாராயணிக்கு நிம்மதியைத் தந்தது.

''அம்மா! நான் இனி தனிக்கட்டை இல்லை. எனக்கு ஒரு மனைவி வரப்போகிறாள்.''

''ரொம்ப சந்தோஷமப்பா !''

''பெண் யார் என்று நீ கேட்கவில்லையே! பொருளாதார நிலையில் நமக்குச் சமமில்லைதான். ஆனால் உருவத்தில், அழகில் சரியான பொருத்தம். பெற்றோர்கள் கிடையாது. ஒரே சகோதரன். இருவரும் ஏ. ஜி.



ஆபீஸ் குமாஸ்தாக்கள். எனக்கு அந்தக் காரியாலயத்திற்குப் போக வேண்டி வந்தது. அந்தப் பெண்ணிடமே வேலை. இப்படியாகத் தொடர்பு. இப்போது அவள் என் மனைவியாகப் போகிறாள்!''

நாராயணி ஒன்றும் கூறவில்லை. ஆனால் சட்டென அவள் மனத்தில் ஒரு சம்சயம் ஏற்பட்டது.

''ஏனப்பா, மாதவா! உன் வயது முப்பத்தைந்து என்று பெண்ணுக்குத் தெரியுமா?'' விடைகூறுமுன் மாதவன் பெரிதாகச் சிரித்து விட்டான். ''அம்மா, நான் கூறு முன்பே அந்தப் பெண் புவனா தனக்கு வயது முப்பது எனக் கூறிவிட்டாள். நான் சிறியவனே என அவள் நினைத்து விட்டாள் போலும்!''

தற்பெருமையுடன் கூறுவது போல் அவன் பேச்சு அமைந்துவிட்ட போதிலும், நாராயணியும் அதில் பெருமிதம் கொண்டாள். பொருளாதார நிலையும் வரதட்சிணையும் ஒன்றோடொன்று பிணைந்து நிற்கும்போது பெண்கள் முப்பது வயது வரை விவாகமாகாமல் நின்று விடுவதில் அதிசயமில்லை என அவளுக்குத் தெரியும். மகன் தானாகத் தேர்ந்தெடுத்துள்ள பெண். அதனால் புவனா அவனுக்கு ஏற்றவளாகத்தான் இருப்பாள் என்ற நம்பிக்கை. நாட்டுப்பெண்ணின் பணம் வந்து வீட்டை நிரப்ப வேண்டிய அவசியமில்லை என்பதை என்றோ உணர்ந்துள்ள அவள் சீர் வரிசைகளையெல்லாம் எதிர்பார்க்கவில்லை.

நாராயணி நினைத்தது வீண் போகவில்லை. புவனா அவள் மருமகளாகி வீட்டுக்கு வந்ததுமே, லட்சுமி தேவி அடியெடுத்து வைத்து விட்டது போல்தான் அவள் உணர்ந்தாள். இருபது வயதுப் பெண்கள்கூட இவ்வளவு தளிர் மேனியுடன் காணப்படவில்லை. தாமரை இதழ்கள் விரிவதுபோல் புவனாவின்



புன்சிரிப்பில் அவள் அங்கங்கள் விரிந்து மலர்ச்சி காட்டுவதாகத்தான் அவளும் கண்டாள். கூந்தலை இழைத்து வாரி நீளப் பின்னல்கள் போடும்போது கைகளின் பரபரப்பில் ஒரு நளினம். இன்னும் எத்தனையோ !

மகனின் இன்பத் திருமண வாழ்வு இப்படிப் பெரிய திட்டங்களோடு நகரும் என நாராயணி எதிர்பார்த்திருக்கவில்லை. தேன் நிலவு என்பதை அவள் காலத்தில் அறிந்திருக்கவில்லை. ஆனால் மாதவன் புவனாவுடன் வெளிநாட்டுக்கே கிளம்பிவிட்ட போதும் அவள் தடுக்கவில்லை. சில மாதங்கள் கழித்து அவர்கள் திரும்பி வந்தபோது, மகனின் சம்பளத்தில் இது நாள் வரை அவள் சேர்த்து வைத்திருந்த பணம் முழுதும் கரைந்து சேமிப்பு இலக்கம் பூஜ்ய சக்கரத்தைத் தொட்டுவிட்ட போதும் அவள் அதிர்ந்துவிடவில்லை. 'இன்பமும் மகிழ்ச்சியும் அநுபவிக்கும் வயது இது. அநுபவிக்கட்டும். சம்பாதிக்கும் திறமை இருக்கிறது. குடும்பச் செலவுக்குக் கவலையில்லை' எனக் கூறிக் கொள்வாள்.

தேன் நிலவு இன்பகரமாக முடிந்தும், மாத வருமானத்தை மாதச் செலவுக்கே ஈடு கட்டி வந்தனர். ஐந்து வருடங்கள் கனவுலகின் இன்பம் எல்லாவற்றையும் நனவுலகில் நடைமுறையில் பயின்று வந்தார்கள். நாராயணி மகன், மருமகளின் ஆனந்தத்தில் ஆனந்தம் கண்டவள். இடையே கடுமையான சொற்களை அவள் உபயோகித்த நாளே கிடையாது. அவளுக்கு அச்சொற்களே தெரியாது. புரியவும் புரியாது. சேமிப்புநிதியில் கூட்டலுக்கான வழி செய்யவில்லையே என வருந்தியவளில்லை. ஆனால் இது அதிக காலம் நீடித்திருக்கவில்லையே.

பொருளாதார நிலைக்கான வருத்தம் இல்லை. கருமையின் நிழலுக்கு வடிவம் கொடுப்பது போலல்லவோ அந்தச் செய்தி அவளைத் தேடி வந்துவிட்டது. மேகத்திரையை நிமிர்ந்துகூடப் பார்க்க அவசியம் இல்லாதிருந்தவளுக்கு, அடர் மழையும் வெள்ளமும் இப்படித்தான் இருக்கும் என்று விளங்க வைத்தன.

கொப்புளித்து வரும் நுரையில் அழுக்கும் சேர்ந்து வரும் கதையாக மகனுக்கு நேர்ந்துவிட்ட விபத்தோடு மருமகளும் இப்படி நகர்ந்துவிட்ட வேதனை அவளுடைய மனத்தில் குமுறிக் கொண்டு வந்தது. அந்த வேதனையை அவள் மறந்து விடுவாள், மறந்துவிட முடியும். முப்பத்தைந்து வருடகாலம் மகனுக்கு அவள் மட்டும்தானே துணையாக நின்றிருந்தவள். அது போலவே இனியும் இருந்துவிட முடியும். மகனுக்கு ஒரு குறைவில்லாமல் அவன் வாழ்க்கையை அவள் செலுத்தித் தர முடியும். ஆனால் மகனோ......?

மகனின் வற்புறுத்தலின் பேரில்தான் ஒரு நாள் புவனாவைத் தேடிக் கொண்டு அவளுடைய சகோதரன் கோகுலின் வீட்டுக்குச் சென்றாள். புவனாவைத் தேடிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கான நிகழ்ச்சியை மனக் கண்களின் முன் பார்த்துக் கொண்டேதான் அவள் சென்றாள்....

புவனாவும், மாதவனும் ஒரு நாள் தெருவில் உலாவச் சென்றிருந்த போது விபத்துக்கு ஆளாகிவிட்டதை அறிந்து பரபரப்புடன் ஓடினாள் நாராயணி. புவனா ரொம்பக் காயங்களுடன் தப்பிவிட, மாதவனோ லாரி சக்கரத்தின் கீழே கால் சிக்கியபடி நினைவிழந்து கிடந்தான். ஆஸ்பத்திரியிலேயே இரண்டு நாட்கள் புவனாவும் அவளும் பணிவிடை செய்திருந்தும், டாக்டர் அவர்களிடம் வந்து "இப்படிச் சொல்வதற்கே எனக்கு வருத்தமாக இருக்கிறதம்மா. மாதவனின் உயிரைக் காப்பாற்றி விட்டோம். ஆனால் கால் ஊனத்தை ஏற்படுத்தத்தான் வேண்டியிருக்கிறது. அவர் இனி முன் போல் நடக்க முடியாது. காலைச் சாய்த்து நொண்டித்தான் நடக்க முடியும்" எனக் கூறிவிட்ட போது, சட்டெனப் புவனா அவ்விடத்தை விட்டு எழுந்து விட்டதைப் பார்த்ததும் நாராயணியின் துடிப்பு எல்லை மீறிவிட்டது. 'ஒரு கால் தாங்க முடியாத வேதனை காரணமாகச் சென்று விட்டிருப்பாளோ' என்றுதான் நினைத்தாள். பிறகு புவனா நேராகத் தன் சகோதரன் வீட்டுக்குச் சென்றதோடு, மீண்டும் ஆஸ்பத்திரிப் பக்கம் வராமலே இருந்துவிட்டதும் அவளுக்குப் புவனாவைப் புரிந்து விட்டது.

"புவனா வரவில்லையாம்மா !" நினைவு திரும்பியதும் மாதவன் அடிக்கடி கேட்ட கேள்விக்கு அவள் ஏதோ சமாதானம் கூறி வந்தாள். வீடு திரும்பியதும் மாதவன் புரிந்து கொண்டு விட்டான். புவனா சகோதரனோடு தங்கி விட்டாள் என்பதை.

மாதவன் காரியாலயத்துக்குப் போக ஆரம்பித்து விட்டான். மகனின் நடையில் காணும் தள்ளாட்டம் ஊனத்தின் காரணமல்ல என்று நாராயணிக்குத் தெரியும். அவன் உள்ளம் புவனாவைத் தேடுகிறது.

"அம்மா! புவனாவைப் பார்த்துவிட்டு வாயேன்."

தினசரி விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் நாராயணியும் புவனாவைக் காணச் சென்றாள்.

வரவேற்பு புவனாவின் சகோதரன் கோகுலிடமிருந்துதான் வந்தது. புவனா நிமிர்ந்தும் நோக்கவில்லை.

"புவனா, நன்றாகத்தானேயம்மா இருக்கிறாய்?" நாராயணி கேட்டாள்.


புவனா முறுவலித்தாள். அப்புன்முறுவலில் நாராயணியால் மென்மை காண முடியவில்லை.

"வீட்டுக்கு எப்போதும்மா வருவதாக இருக்கிறாய்?"

"வீட்டுக்கா ? இதோ வீட்டில்தானே இருக்கிறேன்!" நீக்கிவிட்ட தோலைப் போல் அவள் தன் மனத்தைத் தெளிவாக விளக்கி விட்டதாக வார்த்தைகள் வந்தன.

கோகுல் இடைமறித்தான். "உன் மாமியின் பேச்சு உனக்குப் புரியவில்லையா புவனா? நீ விவாகமானவளாதலால் உன் கணவன் வீடு உன் வீடு என்று தெளிய வைக்கவும் வேண்டுமோ !"

"சும்மா இரு, கோகுல். கணவனாக நான் நினைத்தவரையில் அது என் வீடாக



அமெரிக்காவில் இன்று அதிகம் விற்பனை ஆகும் புத்தகம்:

ஹெரால்டு ராபின்ஸ் நாவல்.

ஹாவ்லாக் எல்லிஸின் நூல்.

கென்னடியின் மரணம் பற்றி மான்செஸ்டர் எழுதிய புத்தகம்

பைபிள்.

ஆக்ஸ்போர்டு டிக்ஷனரி.

இர்விங் வாலஸ் நாவல்.

வாத்ஸ்யாயனரின் காம சூத்திரம்.

இவற்றில் எது தெரியுமா?

(64ம் பக்கம் பார்க்க)

இருக்கலாம். இப்போது அது என் வீடாக இருக்க முடியாது.''

அதிக அதிர்ச்சி கண்டவன் கோகுல், மனத் துயரின் காரணமாகச் சகோதரன் வீட்டில் வந்து தங்கியிருக்கிறாள் என்றுதான் அவன் அந்நாள் வரை நினைத்திருந்தான். ஆனால் துயரின் வெப்பம் எரித்துச் சாம்பலாக்குவதாக அவள் பேச்சு இல்லையே!

கோகுல் சகோதரியின் அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

''புவனா, நீ இது போல் அதிர்ச்சிக்கு ஆளாகிப் பேசுவாய் என்று நான் பயந்தது தான். ஆயினும், நாம் என்னம்மா செய்ய முடியும்? இந்த விஞ்ஞான உலகில் வாழ்வுக்குப் பதில் அழிவுக்குத்தான் மனிதனின் கண்டுபிடிப்புக்கள் உபயோகமாகின்றன. லாரி என்ற பூதத்தைக் கண்டு பிடித்தவனும் அரக்கனாகத்தான் இருக்க வேண்டும்.'' கோகுல் கூறினான். பூச்சு வேலை செய்து பழைய பண்டத்தை மறைப்பதற்கான முயற்சியாகத் துயருக்குத் திரையிட்டு அவன் பேசினான்.

புவனாவோ புன்முறுவலுடன் பேசினாள். ''கோகுல், என்னையோ என் பேச்சையோ வேறு பொருளில் நீ எடுத்துக்கொண்டு விட்டால் அது என் தவறில்லை. நான் அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டு விடவில்லை. எல்லாம் புரிந்து கொண்டு தெளிவாகத்தான் பேசுகிறேன். விஞ்ஞானத்தையும் விதியையும் காட்டி எனக்குப் புரிய வைக்க வேண்டிய அவசியமில்லை. நான் உறுதியாகச் சொல்கிறேன். அங்கஹீனரை என் கணவராகச் சொல்ல எனக்கு விருப்பமில்லை. 'அந்த நொண்டி தான் இவள் கணவர்' என்று நாலுபேர் கூறுவதை என்னால் சகிக்க முடியாது. அவர் வீட்டில் பெரிய அதிகாரியின் மனைவி என்ற பொருளில் நான் வாழ்வதாக இனி என் நெஞ்சு நினைக்க இடம் கொடுக்காது. நொண்டியின் மனைவி என்றுதான் அவரைப் பார்க்கும்போதெல்லாம் என் நெஞ்சு இடித்துக் காட்டும். அதை என்னால் பொறுக்க முடியாது. ஆகவே இனி ஒருத்தரும் நான் மாதவனின் மனைவி என்றோ, மாதவன் என் கணவர் என்றோ சொல்ல வேண்டிய அவசியமில்லை.'' புவனா வார்த்தைகளை வீசிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்துவிட்டாள்.

நெஞ்சைக் கைகளால் பிடித்துக் கொண்டு வாசற்படியிலேயே நாராயணியம்மாள் எவ்வளவு நேரம் நின்று கொண்டிருந்தாளோ! புவனாவின் புண்படுத்தும் சொற்களை திரை நாடகத்துக்கு மறைவில் ஒலிக்கும் ஒலி ஒலியாக, மகனின் இந்த நிலைக்கான நிகழ்ச்சியின் நினைவுச் சுருளுக்குப்பின் ஒலித்துக் கொண்டிருந்தது.

தன் அருகே நின்றுகொண்டிருந்த தாயை நோக்கினான் மாதவன். இருள் படர்ந்த இடத்தை, இது இருட்டறை எனக்காட்டி விடாமல் தடுக்க விளக்கை மறைத்து ஒளியை மட்டும் பரப்பி விட்டாற் போல நாராயணி, மகன் கவனிக்கிறான் என்று தெரிந்ததுமே தன் மனத்தில் பரவி நின்ற துயரை மறைக்க முகத்துக்கு மூடியிட்டாற் போல் அசதியின் வியர்வையைத் துடைப்பதாகக் காட்டித் துண்டினால் முகத்தை மூடிக் கொண்டு பிறகு சலனமற்றவளாக அவன் எதிரில் அமர்ந்து கொண்டாள்.

''புவனாவைப் பார்த்தாயாம்மா?''

''என்னப்பா கேட்டாய்?'' என்று விளையாட்டுப் போக்கில் இருந்துவிட்ட குழந்தை மீண்டும் கேட்க விரும்புவது போல் அவள் கேள்வி இருந்தது.

''நம்ப புவனாவைப் பார்த்தாயா?'' என்று மாதவன் மறுபடியும் கேட்டான்.

நாராயணி தான் கூறப் போகும் பதிலுக்கு ஒரு ஆதாரம் கிடைத்துவிட்டதுபோல் உணர்ந்தாள். 'நம்ப புவனா' என்று தன் மகன் கூறியதில் அவள் பதிலுக்கு ஒரு துணை கிடைத்து விட்டது. நம்ப புவனாவாக இருந்தால், அவள் 'என் கணவர் இல்லை' எனச் சொல்லி இருக்க மாட்டாள் அவள் பார்த்துவிட்டு வந்தவள், 'நம்ப புவனா' இல்லை.

''நம்ப புவனாவைப் பார்க்கவில்லை. அவள் இல்லை'' என்று கூறிய நாராயணி 'நம்ப' என்ற சொல்லில் அழுத்தம் கொடுத்தாள்.

''வெளியே போயிருந்தாளா? அப்படியானால் நீ காத்திருந்து பார்த்திருக்கலாமே!''

நாராயணி பதில் கூறாமலே நகர்ந்து விட்டாள்.

அதன் பிறகும் தொடர்ந்து மாதவன் தாயிடம் கேட்டபடி இருந்தான்.

மாதவன் சோர்ந்து விட்டான். தாய் மூடி வைத்திருக்கும் பெட்டியில் பொக்கிஷம் இருக்கும் என நம்பமுடியவில்லை. மாதவன் தானே நேரில் புவனாவைச் சந்தித்து வர நிச்சயித்து விட்டான். இத்தனை நாட்களும் ஏற்பட்ட தயக்கம், நீர் கொட்டி நிமிடத்தில் அணைந்துவிடப்படும் நெருப்பாக இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. புவனாவைப் பார்க்க, சொந்த மனைவியைப் பார்க்க ஏன் இப்படித் தயங்கினேன் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு சிந்திக்கவும் நேரம் வைத்துக் கொள்ளவில்லை.

கோகுலின் வீட்டை அடைந்த போது தன்னை மறந்து, தன் நிலையை மறந்து, தனக்கு நேர்ந்து விட்டதையும் மறந்து, சிறிதும்

தயக்கமின்றி மாதவன் உள்ளே நுழைந்தான். அவன் கண்களில் முதலில் பட்டது புவனு தான். மாதவனைப் பார்த்ததுமே அவள் ஆவலோ வெறுப்போ காட்டிக் கொள்ள வில்லை.

''வாருங்கள், உட்காருங்கள்.''

புவனுவின் இந்த வரவேற்பு மாதவனுக் குப் புரியாத புதிராக இருந்தது. இத்தனை நாட்கள் கழித்துச் சந்திக்கும் ஆர்வம் அவன் ஒருவனுக்குத்தான் பற்றுக்கோடா? ஒளிக் கீற்று விழுந்தாற் போல கருணைக்குக்கூடப் பிரகாசம் அவளிடமிருந்து பிறக்காதோ!

கோகுல் வந்து விட்டான்.

''ஓ! நீங்களா?, வாருங்கள். நானே வர வேண்டியவன்தான். ஆனால் வரவில்லை. எல்லாவற்றையும் எதிர்த்து நிற்கும் துணிச் சலே நமக்கு வருவதில்லை'' என்று கோகுல் பேசினான்.

மாதவனுக்கு ஒன்றும் புரியவில்லை. பெரிய வர்கள் பேசும் போது ஒன்றும் புரிந்து கொள்ள முடியாத குழந்தையாகப் புவனுவின் செய்கையோ, கோகுலின் பேச்சோ ஒன்றை யும் தெளிய வைக்கவில்லை.

''புவனு! அம்மா அடிக்கடி இங்கு வந்தது உனக்குத் தெரியுமே!''

''சில முறைகள்தான் அவளுக்குத் தெரியும். எனக்கு எல்லாம் தெரியும். உங்கள் அம்மா புவனுவைச் சந்திக்காமல் வாசலோடு சென்று விடுவதைத்தான் நான் விரும்பினேன்.''


இவ்விதம் கோகுல் பேசியதும், அவன் உப யோகித்த ஓசை நயம், சொல்லிய முறை அனைத்தும் மாதவனுக்குக் கோகுல் மீது எரிச் சலுக்கான உணர்வைத் தரவில்லை. புவனு வின் மௌனம் கோகுலின் சொற்களுக்குத் துணையாக நின்று எல்லாம் புரிய வைத்துத் தாயின் மீதும் நினைத்துக்கான நிலைக் கொட்டி விடாமல் தடுத்தது.

''நான் இப்போது புவனுவை அழைத்துப் போக வந்திருக்கிறேன் கோகுல். அவள் தன் கணவன் வீட்டில் இருப்பதைத்தான் நான் விரும்புகிறேன்.'' மாதவன் கூறினான்.

புவனு விருட்டென மாதவன் பக்கம் திரும்பினாள். ''உங்கள் அம்மா என்னை வந்து பார்த்துவிட்டுப் போனது பற்றி உங்களிடம் சொல்லியிருப்பார் என்றுதான் நினைக்கிறேன் மிஸ்டர் மாதவன்!''

மரத்திலிருந்த கனி காற்றின் வீச்சில் கீழே விழுந்து நசுங்கிவிட்ட கதையாக அவள் சொற்களை மாதவன் உணர்ந்தான். 'மிஸ்டர் மாதவன்' என்ற ஒரே விளிச் சொல் அவ னுக்கு எதையெல்லாமோ விளங்க வைப்ப தாக இருந்தது.

அடிபட்ட வலியை மெல்லச் சமாளித்துக் கொண்டு பேச முற்படும் குழந்தையாக



மாதவன் நாற்காலியில் நிமிர்ந்து அமர்ந்து கொண்டு பேச முற்பட்டான். ''என்னிடம் அம்மா உன் வீட்டிற்கு வந்ததாகச் சொன்னாள்..... ஆனால்.......''

''எனக்குப் புரிகிறது. நான் சொன்னதை உங்களிடம் சொல்ல உங்கள் தாய்க்கு விருப்பமிருந்திருக்காது. ஆனால் உங்களிடம் சொல்லியிருந்தால் நீங்கள் இங்கு வந்து என்னிடம் நேராகக் கேட்க வேண்டிய சிரமம் இருந்திருக்காது என்று அவர் நினைத்துப் பார்க்கவில்லை..... மாதவன், உங்கள் மீது எனக்கு அன்பு இருக்கிறது. ஆனால் என்னை உங்களுடைய மனைவியாகச் சொல்லிக் கொள்ள எனக்கு இனி விருப்பமில்லை..... உங்களுக்குக் காரணம் புரிந்திருக்கும். உங்கள் அம்மாவிடம் சொன்னதையே மீண்டும் நான் சொல்கிறேன். உங்கள் வீட்டில் இருந்தால் ஒரு செல்வந்தரின் மனைவி என்று நினையாமல் அங்கஹீனருடைய மனைவி என்று என் மனம் இடித்துக் காட்டுவதை என்னால் சகிக்க முடியாது. அதனால் கணவன் மனைவி என்ற நம்மிருவர் பந்தத்தை நான் அறுத்துக் கொள்கிறேன்.''

மாதவன் எழுந்து விட்டான். ''புவனா! நான் வருகிறேன். நீ இப்படி வெளிப்படையாகச் சொல்லி விட்டது பற்றி எனக்கும் மகிழ்ச்சிதான். உன் மனச்சாட்சிக்கு எதிராகச் செல்லும்படி நான் கட்டாயப்படுத்தமாட்டேன்.''

புவனா பதில் கூறவில்லை. மாதவன் வெளியே சென்று விட்டான்.

இரவு சாப்பிடும் போதுதான் நாராயணிக்கு மகனின் மன நிலை அன்று சரியில்லை என்பது புரிந்தது.

''மாதவா! ஏனப்பா, இன்று உனக்குச் சாப்பாடு சரியாக இறங்கவில்லை?''

வேதனையைக் கூறுவதாக மாதவனின் மென்சிரிப்பு இருந்தது. ''ஆண் மகனே துணிவை ஏற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களும் சில இருக்கின்றன அம்மா! இப்போது நான் அந்த அனுபவத்தில் இருக்கிறேன்.''

மகனின் வேதனைக்குள் நாராயணி தன் வேதனையின் வித்தை உணர்ந்தாள். அவள் பதில் கூறாது மௌனமாக இருந்தாள்.

''நான் புவனாவைச் சந்திக்க இன்று போய்விட்டு வந்தேன் என்று மட்டும் கூறினால் உனக்குப் புரிந்து விடும் அம்மா!''

''இப்படி நீ ஒரு நாள் போவாய் என நான் எதிர்பார்த்ததுதான் மாதவா!''

''அதற்கு நீ வழி வைக்காமல் இருந்திருக்கலாம்......!''

நாராயணி வாய் திறவாமல் மகனையே உற்று நோக்கினாள்.

மாதங்களும் வருடங்களும் மேலேறின.

மாதவன் ஒரு நாள் தாயிடம் கூறினான். ''அம்மா, புவனா இன்னும் தனித்துத் தானே இருப்பாள்?''

புவனா மாதவனைத் தன் கணவன் என்று சொல்லிக் கொள்ள விரும்பாவிடினும் தனித்துத்தான் இருக்கிறாள் என்று நாராயணிக்குத் தெரியும். ஏதோ ஒரு காரியாலயத்தில் வேலை பார்ப்பதாகவும் தெரியும். ஆனால் முன்போல் அவளுக்கு வருமானமில்லை. கோகுலும் அவளுக்கு உதவுவதில்லை.

''தனித்திருப்பதாகத்தான் தெரிகிறது.''

''அவள் திருமணத்தைப் பற்றி மீண்டும் சிந்திக்காமல் இருப்பது ஒருகால் சட்டத்துக்குப் பயந்த செய்கையாக இருக்கலாம். அதனால்.....''

நாராயணி மகனைக் கேள்விக் குறியில் நோக்கினாள்.

''அதனால், அம்மா, அதனால் நான் அவளைப் பந்தத்திலிருந்து விடுவித்துக் கடிதம் தந்து விட்டால் அவள் விடுதலையாகிவிடுவாள் அல்லவா? அப்படிச் செய்து விட்டால் அவளுக்கு நன்மை பயக்கும். இனி என்னால் நேராக்கிவிட முடியாது. ஆனால் தன் வாழ்க்கையை அவள் நேராக்கிக் கொள்ள முடியுமே!''

நாராயணி மகன் மீதிருந்த பார்வையைத் குறைத்துக் கொண்டு விட்டாள். மனத்திலிருந்ததை வெளியே விட்டுவிட அவளுடைய இரு உதடுகளும் திறந்துவிடவில்லை. ஆனால் மகன் எழுதித் தந்ததை எடுத்துச் செல்லும் பொறுப்பை அவள்தான் ஏற்க வேண்டி வந்தது.

இம்முறை புவனா நாராயணியை நோக்கியதும், ''வாருங்கள்!'' என்று தலையை ஆட்டினாள்.

காற்றில் நகர்ந்து செல்லும் காகிதத்தை மேலோடு நோக்கும் செய்கையாகப் புவனா கடிதத்தைப் பிரித்து மேலெழுந்தவாரியாக நோக்கினாள். பிறகு நாராயணியிடமே அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, 'இதற்கு இப்போது அவசியமில்லை. எனக்கு இது தேவைப்படும்போது நானாகவே கேட்டு வாங்கிக் கொள்வதாக உங்கள் மகனிடம் சொல்லி விடுங்கள்' என்றாள்.

நாராயணி வற்புறுத்தவில்லை. திரும்பி விட்டாள். புவனா கூறியதைத் தாயிடமிருந்து அறிந்த மாதவன் தன் நாற்காலியிலேயே நிமிர்ந்து அமர்ந்தான். ''உனக்குப் புரிகிறதா அம்மா, புவனா என்னை மறக்கவில்லை. ஆனால் என்னைக் கணவனாகக் கூறிக் கொள்ளத் தான் விரும்பவில்லை.''

ஊட்டிக்கு மாற்றலாகிவிட்ட செய்தியை மகன் கூறியதும் நாராயணி ஆறுதல் பெற்றாள். ஆனால் ஆறுதல் அதிக காலம் நீடிக்க முடியாமலல்லவோ போய் விட்டது.

நதியின் வெள்ளம் தணிந்துவிட்டது என்று ஆறுதல் கண்டு நனைந்த பாகமெல்லாம் காய்வதற்குள் பேரிடி விழுந்து வீட்டையே நாசமாக்கிவிட்ட கதையாக அமைந்து விட்டது. இதயத் துடிப்பு எதிர்பாராமல் நின்றுவிடும், இந்த உலகிலிருந்தே விடுபட்டு விடுவோம் என்று மாதவன்கூட எதிர்பார்த்திருக்கவில்லை. அந்த அச்சம் இருந்திருந்தால் இன்ஷுரன்ஸ் பணத்துக்கான வாரிசாகத் தாயின் பெயரைக் காட்டிப் புவனாவின் பெயரை அடித்திருப்பானே! சேர்த்து வைத்த பணமெல்லாம் புவனாவோடு நடத்திய வாழ்க்கையில் கரைந்து விடத் தாய்க்கு ஏதுமில்லையே என நினைத்திருப்பானே!

நாராயணி மீண்டும் சென்னைக்குத் திரும்பிய போது அவள் தனி மரம். மகன்



அமெரிக்காவில் இன்று அதிகம் விற்பனையாகும் நூல் பைபிள்.

நாள் ஒன்றுக்குப் பதின்மூன் ருயிரம் என்ற கணக்கில் விற்பனையாகிறது.

ஆதாரம்: டைம். தகவல் : பாபு

என்ற மனிதத் துணையில்லை; பணமென்ற பொருள் துணையில்லை. துயர் என்ற ஒரே சொல் அவளை ஆக்கிரமித்து 'நான் துணை' எனக் கூறிக் கொண்டது. மனத்துக்கு வயிறு மசியவில்லை. அந்த வயிற்றின் கூப்பாடே உடலுக்கு வலிவு கொடுத்திருக்குமோ! உறவினர் ஒருவர் உதவ முன்வந்த போது, அவள் அங்கு பணி புரிய ஒப்புக் கொண்டு உள்ளோடு முடங்கிக் கிடந்தாள். அந்த வீட்டாரின் அன்பு ஒன்று மட்டும் துயரின் தவிப்பை மறக்கச் செய்தது.

திடீரென்று கோகுல் ஒரு நாள் அவளைத் தேடி வருவான் என நாராயணி எதிர்பார்த்திருக்கவில்லை. வீட்டில் வேறு ஒருவரும் இல்லை.

''அம்மா! நீங்கள் இங்கே இருப்பது அறிந்து துடித்துவிட்டேன். எனக்கு என் நண்பன் மூலம் இப்போதுதான் விவரம் தெரிந்தது.'' – கோகுல் கூறினான்.

அப்போதுதான் கோகுலைக் கவனித்தவள் போல், ''வாப்பா, கோகுல்! சுகமாகத் தானே இருக்கிறாய்? மாதவனாக இருந்தால் முதலில் புவனாவின் சுகத்தைப் பற்றித்தான் விசாரித்திருப்பான். ஆனால் என் குணம் இன்னும் அவ்வளவு பண்பட்ட நிலைக்கு வரவில்லை'' எனக் கூறினாள்.

''அம்மா! பண்பு அன்பு இந்தப் பேச்செல்லாம் என்னால் ரசிக்க முடியாது. அந்த ரசனைக் குணம் வேண்டும் என்ற விருப்பமும் எனக்கில்லை..... இந்த அநியாயத்தை என்னால் சகிக்க முடியவில்லை.''

''நீ எந்த அநியாயத்தைச் சொல்கிறாயோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் காலன் செய்துவிட்ட கூத்தின் அநியாயத்தை என்னால் மறக்க முடியவில்லை. எனக்கு வயதாகி விட்டது. நான் ஒரு மகனின் தாய் என்பதை அந்தக் கூற்றுவன் மறந்துவிட்டானே அப்பா!'' மழை அருவியாகக் கண்ணீரைப் பெருக்க விட்டுக் கொண்டு நாராயணி கூறினாள்.

''அந்த அநியாயத்தையும் தோல்வியடையச் செய்வது நான் குறிப்பிடும் அநியாயம்.''

''எதைக் குறிப்பிடுகிறாய், கோகுல்? புவனாவைப் பற்றி ஒன்றுமில்லையே!''

''புவனாவைப் பற்றித்தான் கூறுகிறேன். மாதவனைத் தன் கணவன் என்றோ, மாதவனுக்குத் தான் மனைவியென்றோ ஒருவரும் குறிப்பிடக் கூடாது எனக் கூறிக் கொண்டிருந்தவள், இப்போது என்ன செய்கிறாள் தெரியுமாம்மா?''

நாராயணி உதட்டை அசைக்காமலே விழிகளை அவன்மீது செலுத்திப் பதிலை எதிர்நோக்கினாள்.


''கணவனுக்குப் பிறகு, மனைவி பென்ஷன் தொகையை அடையலாம் என்றிருக்கிறதல்லவா? மாதவன் பணி புரிந்த காலம், அந்த வரம்புக்கு வந்து விட்டதால் அந்தப் பென்ஷன் தொகை புவனாவைத் தேடி வருகிறது. இவளும் அதைப் பெற்று அநுபவிக்கிறாள்! இது நியாயமாம்மா? மகனைப் போற்றி வளர்த்த நீங்கள் பொருளுதவிக்காக உழைக்கிறீர்கள். மாதவனைத் தன் கணவன் என மதிக்காத புவனா அவர் பென்ஷன் தொகையை அனுபவிக்கிறாள்! அம்மா! நீங்கள் இப்போதே மாதவன் காரியாலயத்துக்கு எழுதுங்கள். நான் அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்கிறேன்.'' கோகுல் பேசிக் கொண்டே போனான். பலதரப்பட்ட உணர்ச்சிகள் அலைகளாக அவன் பேச்சில் மோதின.

நாராயணியோ? அவள் முகம் ஏன் பிரகாசமடைய வேண்டும்? ''கோகுல், உண்மையாகவே புவனா, மாதவனின் மனைவி என்ற அந்தஸ்துடன் பணத்தை வாங்குகிறாளா?''

''அந்தஸ்து கூறிப் பணம் வாங்க வெட்கமடையாத ஜென்மம் அம்மா அவள்.'' கோகுல் வெறுப்புடன் கூறினான்.

நாராயணி கோகுலின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். ''மனைவி என்ற உரிமையில் அவள் பணம் வாங்குவதைத் தடுத்து விடாதே கோகுல். மாதவன் உயிருடன் இல்லாத போதிலும் அவனுக்கு இது பெரிய வெற்றி. நான் சொல்வது உனக்குப் புரியுமோ என்னவோ? சரீரத்தில் ஊனமான மாதவனை அவள் அன்பு செலுத்திக் கணவனென்று கூறிக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் இதன் மூலமே உள்ளத்தில் ஊனமாகிவிட்ட அவளை மாதவன் மறவாது தன் அன்பைப் பலமாக நிறுத்தி அவளை மனைவியாகக் கூறவே விரும்பினான். நானோ, நீயோ மாதவனோ புவனாவை 'மாதவனின் மனைவி' எனக் கூற வைக்க முடியவில்லை. ஆனால் இப்போது பார்த்தாயா கோகுல், மனைவிக்குப் பென்ஷன் உண்டு என்ற காரியாலயச் சட்டம், புவனாதான் மாதவனின் மனைவி என்ற தீர்ப்பை அவள் ஏற்கும்படி செய்து விட்டது. அந்தப் பென்ஷன் தொகை மாதவனுக்குச் செய்திருக்கும் இந்த உதவியை நாம் மாற்றிவிடக் கூடாது. புவனாவே மாதவனின் மனைவி எனக் கையெழுத்திட்டு மனைவி என்ற உரிமையை நிலைநிறுத்தட்டும். மனைவியின் மீதிருந்த என் மகனின் மாசற்ற அன்பு நிலைத்து நிற்குமடா, கோகுல். அந்தத் தீர்ப்பை நீ மாற்றி விடாதேப்பா!''

கோகுல் ஆச்சரியத்துடன் நாராயணியைப் பார்த்தபடி நின்று விட்டான். அவன் முகத்தில் அவன் கண்டது பாசமா, அன்பா, தீர்ப்பில் ஆறுதலா அவனுக்கே புரியவில்லை.



நிக்காய் லோவா

நாடோடி

திருமதி நிக்காய்லோவா என்னும் ரஷ்யப் பெண்ணைப் பற்றிப் பத்திரிகைகள் பிரமாதமாக எழுதத் தொடங்கியுள்ளன. இந்தப் பெண் தன் மனோசக்தியினால் எதிரேயுள்ள நெருப்புக் குச்சி, ரொட்டித் துண்டு, கண்ணாடி டம்ளர் போன்ற பொருள்களை நகரும்படி செய்கிறாளாம்! இந்தக் காட்சியைப் படம் வேறு பிடித்திருக்கிறார்களாம்!

இதில் என்ன அதிசயம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. சில அவுன்ஸ்கள் எடையுள்ள பொருள்களை மனோசக்தியைக் கொண்டு நகர்த்தியதற்கு இத்தனை பிரமாதப்படுத்துகிறார்களே, எனக்குத் தெரிந்து, என் வாழ்க்கையில், 160, 170 ராத்தல் எடையுள்ள பொருள்களையே தங்கள் மனோசக்தியைக் கொண்டு அப்பால், மைல்கணக்காக நகர்த்தியுள்ள அநேகரை நான் கண்டிருக்கிறேன்.

உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால் ஒரு நாள் முதல் தேதி மாலை, என் காரியாலயம் வந்து, என்னோடு வீடு திரும்புங்கள். அப்பொழுது தெரியும்.

முதல் தேதியானால் என்னால் வழக்கமாகச் செல்லும் வழியாக வீடு திரும்பவே முடியாது. காரியாலயத்துக்கும் வீட்டுக்கும் மூன்று மைல் தூரம் என்றால் அன்று அது பத்து மைலாக நீளும். அந்தச் சந்தில் புகுந்து, இந்தச் சந்தில் திரும்பி, இன்னொரு சந்தில் நுழைந்து, இப்படிச் சுற்றி வளைத்துச் செல்ல வேண்டி வரும். "ஏன், இப்படிச் சுற்றி வளைத்துச் செல்கிறீர்?" என்று உங்களுக்குத் தோன்றும். ஆனால் நானாகவா செல்கிறேன்? நான் போகும் வழியில் உள்ள சிலரின் மனோசக்தியல்லவா என்னை அப்படி ஆட்டி வைக்கிறது! 160 ராத்தல் உள்ள என்னை (இல்லை, 170 என்கிறீர் அடுத்த வீட்டு அண்ணாசாமி!) அப்படியெல்லாம் சந்துபொந்துகளில் நகர்த்துகிறது!

நேர் வழியில் சென்றால் நான் என் தையற்காரரைச் சந்தித்ததாக வேண்டும். போன வருடம் தைத்த கம்பளிச் சட்டைக்கு நான் இன்னும் அவருக்குக் கூலி கொடுத்தபாடில்லை.... ஆகவே, முதல் தேதி, மாலை 5-30 மணியானதும் (மாலை 5-30 மணிக்குத்தான் எங்கள் காரியாலயம் மூடுகிறது) அவர் என்னைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார். "சம்பளத்தை எடுத்துக் கொண்டு ஆள் இந்த வழியாகத்தான் போவார். ஒரு வருடமாக வராத தையற்கூலியை இன்று பிடுங்கிக்கொண்டு விடுவோம்" என்று என்னைப்பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார்.

அவர் தம் மனோசக்தியை என்மீது பிரயோகிக்க ஆரம்பிக்க வேண்டியதுதான் தாமதம், என் கால்கள், தாமாகவே, வழக்கமாகச் செல்லும் வழியாகச் செல்லாமல் இன்னொரு சந்துக்குள் திரும்பிவிடும். அவருடைய மனோசக்தி, என்னை இரண்டுமைல் தூரமாவது அப்பால் தள்ளிவிடும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

"அவருடைய மனோசக்திக்கு உட்படுவானேன், அவருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துத் தொலைத்து விடுவது தானே?" என்று நீங்கள் கேட்கலாம்.


ஆனால் முதல் தேதி பிறந்ததும் எங்கள் வீட்டு நிலைமை எப்படி இருக்கிறது என்று தெரிந்தால் நீங்கள் இப்படிக் கேட்க மாட்டீர்கள். முதல் தேதி பிறந்ததும் சாகளனக்கு எச்சரிக்கை விடுக்க ஆரம்பித்து விடுவாள். "இதோ பாருங்கள். இன்று சம்பளப் பணம் ஜாடா வீடு வந்து சேரணும். அதற்குக் கழித்துக் கொண்டான், இதற்குக் கழித்துக் கொண்டான் என்று சொல்லேனோ, பாருங்கோ!" என்று இறுதி எச்சரிக்கை விடுவாள். இவள் இறுதி எச்சரிக்கை விடுத்து முடிப்பதற்கும், வாசலில் பத்து நாய்கள், இருபது கழுதைகள், முப்பது சிங்கங்கள், நாற்பது யானைகள், ஐம்பது காண்டா



மிருகங்கள் எல்லாமாகச் சேர்ந்து கத்தினால் எத்தனை சத்தம் ஏற்படுமோ அத்தனை சத்தம் ஏற்படும். மிருகக் காட்சி சாலையிலோ, காட்டிலோ இருக்க வேண்டிய இத்தனை மிருகங்களும் இங்கே எப்படி வந்தன என்று ஆச்சரியப்படாதீர்கள். வீட்டுக்கார வீராசாமி, பால்காரப் பால்சாமி, துணிக் கடை துரைசாமி, நகைக் கடை நாகசாமி இவர்கள் எல்லாரும் சேர்ந்து போடும் சத்தம்தான் அது. இப்படிச் சத்தம் போட்டால், ''மாலை வந்ததும் எங்கள் கணக்கை ஒழுங்காகத் தீர்த்து விட வேண்டும்'' என்று என்னை ஞாபகப் படுத்திவிட்டதாக அவர்கள் கருத்து!

ஆனால் கடைசியில் காரியாலயத்தில் மாலை மூன்று மணிக்குக் காஷியர் கொடுக்கும் சம்பளக் காகித உறையை வாங்கும்போது, ''அடாடா! இது நம் சம்பளம்தானா? அடையாளமே தெரியவில்லையே! பஞ்சத்தில் அடி பட்டது போல் வாடி, வதங்கி, உருக்குலைந்து, சிறுத்து நிற்கிறதே! நம் சம்பளம் ரூ. 300 என்றல்லவா ஞாபகம்! ஆனால் கையில் வந்திருப்பதோ அறுபத்து மூன்று ரூபாய், முப்பத்தைந்து நயா பைசா அல்லவா!'' என்று சந்தேகப்படுவேன்.

என் சந்தேகத்தைத் தெரிந்து கொண்டு காஷியர் விளக்கஆரம்பித்துவிடுவார்.



''என்ன ஸார், யோசனை பண்ணுகிறீர்கள்! நாலாவது வருஷக் கடனுக்காக நாற்பது ரூபாய், மூன்றாவது வருஷக் கடனுக்காக முப்பது ரூபாய், போன வருஷக் கடனுக்காகப் பத்து ரூபாய்...'' என்று ஜாபிதா வாசிக்க ஆரம்பித்து விடுவார். எங்கே அதற்குமேல் அங்கே நின்றால், ''அடுத்த வருஷக் கடனுக்காக அறுபது ரூபாய்'' என்று கொடுத்த அறுபத்துமூன்று ரூபாயையும் பிடுங்கிக் கொண்டுவிடப் போகிறாரோ என்று பயந்து அங்கிருந்து அப்பால் செல்வேன்.

ஆகவே, இந்த நிலையில் நான் எப்படித் தையற்காரருக்குக் கொடுத்துத் தொலைக்க முடியும்? ஆகவே முதல் தேதியானால் அவருடைய மனோசக்திக்கு உட்பட்டு இரண்டு மைல் அப்பால் ஒரு சந்தில் தள்ளப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

சரி, அந்தத் தெருவில்தான் தள்ளப் பட்டுவிட்டோம், அந்தத் தெருவிலாவது தொடர்ந்து செல்ல முடியும் என்று நினைக்கிறீர்களா? அங்கு ஒரு துணிக் கடைக்காரர் என்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பார். போனவருடம் வாங்கின பட்டுப் புடவைகளுக்கு இன்னும் பணம் கொடுக்கவில்லையென்றால் என்னைப் பற்றி நினைக்காமல் என்ன பண்ணுவார்! ஆனால் அந்த மனோசக்தி என்னை ஆட்டிவைக்காதா, என்ன! அது என்னை இன்னொரு சந்துக்குள் இன்னும் இரண்டு மைல் அப்பால் தள்ளும்.

அந்தச் சந்திலாவது நான் தொடர்ந்து போக முடியும் என்று நினைக்கிறீர்களா! முதல் தேதி மாலையானதும் இந்தச் சந்தில் உள்ள ஒரு டாக்டர் என்னைப்பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார். ஆறு மாதங்களுக்கு முன்பு அவர் செய்த ஆப்பரேஷனுக்கு நான் இன்னும் பணம் கொடுக்காத போது அவர் என்னைப்பற்றி நினைக்காமல் வேறு என்ன செய்வார்? ஆனால் அந்த மனோசக்தி வீணாக முடியுமா! ஆகவே, அது என்னை இன்னொரு சந்துக்குள் பிடித்துத் தள்ளும்.

ஆக இந்த மாதிரி வளைந்து, வளைந்து, சந்து பொந்துக்குள் திரும்புவதால் காரியாலயத்திலிருந்து கிளம்பிய போது மூன்று மைல் தூரத்தில் இருந்த வீடு, இப்பொழுது பத்து மைல் தூரத்தில் இருக்கும்.

இருந்தும் வீடு திரும்புவதற்காக வீட்டுப் பக்கம் காலடி எடுத்துவைக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? முடியாது. ஏனெனில், அதே சமயம், வீட்டில் என்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் என் மனைவி சரசு, பால்காரப் பால்சாமி, வீட்டுக்கார வீராசாமி இத்யாதி இத்யாதி இவர்களின் மனோசக்தி என்னைப் பிடித்து எதிர்த் திசையில் தள்ளி ஒரு சினிமாக் கொட்டகைக்குள் கொண்டு போய்ச் சேர்க்கும். கடைசியில் எல்லாக் கடன்காரர்களும் போன பிறகு, என் மனைவி சரசுவும் பாதித் தூக்கம் போட்ட பிறகு, நான் ராத்திரி பதினொரு மணிக்குத்தான் வீடு போய்ச் சேர முடியும்!

ஆகவே மனோசக்தி சாமான்யனைத் தள்ளுகிறது என்பதை அறிய நிக்காய் லோவாவைப் படம் பிடித்துப் பார்க்கத் தேவையில்லை. முதல்தேதிமாலை என்னைப் படம் பிடித்துப் பார்த்தாலே போதும்!



'டக்-டக்'கென்ற ஊன்று கழியின் ஓசை தேய்ந்து மறைந்தது.

''அப்பா எங்கே போகிறார்?'' — கேட்டுக் கொண்டே காரியாலய உடையைக் கழற்றி அழுக்குக் கூடையில் போட்டான் ரகு.

''இதோ பாருங்கள்! வயசான காலத்தில் இவருக்கு எதுக்கு கடற்கரை? நான் கேட்கிறேன். கார்களும், வண்டிகளும் வரும் வேகத்தைப் பார்க்கும்போது இந்த வாகனங்களை யெல்லாம் தாண்டிக் கொண்டு நாமே ரோட்டைக் கடந்து போகக் கஷ்டப்படுகிறோம். இவர் எங்கேயாவது கால் இடறி வண்டிக்கு நடுவே மாட்டிக் கொண்டால்...''

மனைவி சந்திராவின் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைப்பதுபோல் ரகு இடைமறித்தான். ''வீட்டிலேயே இருந்து அவருக்கு அலுப்பு ஏற்பட்டிருக்கும். காலாறச் சற்று நடந்து விட்டுத்தான் வரட்டுமே. மணி

தாத்தா

என்ன பண்ணுகிறான்? கூட அவனைத் துணைக்கு அனுப்புகிறதுதானே?''

சந்திரா இதை எதிர்பார்க்கவே இல்லை. எப்படியோ பேசிச் சமாளித்துக் கொண்டாள். ''மணி படித்துக் கொண்டிருக்கிறான்'' என்றாள். ரகு காப்பி டிபனை முடித்துக் கொண்டு சைக்கிளில் ஏறிக் கிளம்பி விட்டான். ரகுவுக்கு ஓய்வு என்பதே கிடையாது. காரியாலயத்தில் கிடைக்கும் ஊதியம் போதவில்லைதான். அதற்காக மாலை வேளையில் ஒரு கடையில் கணக்கு எழுதியும், மற்றபடி கடிதப் போக்குவரத்தைக் கவனித்துக் கொண்டும் எப்படியோ மாதம் முப்பது ரூபாய்க்கு வழி செய்து கொண்டிருந்தான். அவன் வரவு, செலவு என்றெல்லாம் கணக்கு பார்ப்பது கிடையாது. அவனுக்கு அதற்கு நேரமும் கிடையாது. கையிலிருக்கும்வரையில் வீட்டுக்கு என்று செலவு செய்து கொண்டிருப்பான். மாதக் கடைசியில் ஐந்து பத்து மிஞ்சினால் அதை அப்பாவின் கைச் செலவுக்கு என்று கொடுத்து விடுவான்.

சொன்ன கதை

அட்டைப் படக்கதை

ஜி. கே. பொன்னம்மாள்

சிமிண்டுப் பெஞ்சு சுட்டது. தோளிலிருந்த மேல் துண்டை எடுத்து விரித்துக் கொண்டு அதன் மேல் அமர்ந்தார் நாகசாமி. 'இதைப் போலத்தான் சில மனிதர்களுக்குக் கோபம் வந்து விட்டால் அது சீக்கிரம் ஆறுவதில்லை' என்று தமக்குள்ளே சொல்லிக் கொண்டார். எதிர் சிமிண்ட் பெஞ்சியில் ஒரு கிழவர் தம் பேத்தியுடன் அமர்ந்திருந்தார். அந்தக் குழந்தை அடிக்கடி ஏதேதோ குறும்புத்தனங்கள் செய்து தன் தாத்தாவைச் சிரிக்கச் செய்து கொண்டிருந்தது. நாகசாமியும் வஞ்சனையில்லாமல் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டார். ''குழந்தை படு சுட்டி'' என்றார் நாகசாமி. மற்றவரும் தம் வயதுக்கொப்ப ஒரு துணை கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் பேச ஆரம்பித்தார்.

''நிம்மி! நீ சும்மா இருக்கணும். தாத்தா பேசிண்டிருக்கேன் பாரு'' என்று பேச்சுக்கு நடுவே குழந்தையை அடிக்கடி கண்டித்துக் கொண்டிருந்தார். இப்பொழுது குழந்தை நிம்மிக்குத்தான் பொழுது போகவில்லை. இரண்டு பெரியவர்களும் தங்கள் தங்கள் குடும்ப நிலவரங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.

தம் அருகில் யாரோ தொப்பென்று உட்காருவதைக் கண்டு நாகசாமி பெஞ்சியில் நீட்டி வைத்திருந்த தமது கழியை அவசரம் அவசரமாக எடுத்துக் கொண்டு சற்று ஒதுங்கி அமர்ந்தார். வந்தவன் யாரோ அவருக்குப் பழக்கமில்லாத ஓர் இளைஞன். ஜாலியாக பீச்சுக் காற்று வாங்கவோ அல்லது யாரையாவது சந்திக்கவோ வந்திருப்பான். நாகசாமிக்குத் தன் பிள்ளை ரகுவின் நினைவு வந்தது. தன் மனைவியுடன் உல்லாசமாக எல்லாரையும்போல் அவனும் கடற்கரைக்கு வந்து சற்றுக் காற்று வாங்கியபடி களித்திருப்பதாகக் கற்பனை செய்யலானார். மனத்திரையிலே உருவாக்கிக் கண்ட அந்த உல்லாசக் காட்சி எத்தனை நேரம் நீடிக்கும்? மறைந்தது. ரகுவின் உண்மையான வாழ்வு நினைவுக்கு வந்தது. ''பாவம்'' என்ற ஒரு சொல்லுடன் பெருமூச்சும் கலந்து வந்தது அவர் உள்ளத்திலிருந்து.

பரந்து கிடந்த மணற் பரப்பில் எத்தனை லட்சோப லட்சம் கால் சுவடுகள். அவை எல்லாம் எதைச் சொல்லுகின்றன? காலங்களை அல்லவோ நினைவுபடுத்துகிறது! நாகசாமி கழியை ஊன்றிக் கொண்டு எழுந்தார். ''நாளை வருவீர்களா?'' — புதிய நண்பர் கேட்டார். ''வருவேன்'' என்று பதிலிறுத்து விட்டு, கழியை ஊன்றிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். கடவுளிடமிருந்து பிரிந்து உலகில் விழுந்து விட்ட மனிதன் மறுபடியும் கடவுளையே நோக்கிப் போவது போல் நாகசாமியும் பாரம் நிறைந்த மனத்துடன் வீட்டை நோக்கி நடந்தார். கடற்கரைக்கு வந்தபோதிருந்த மன உல்லாசம் ஏனோ திரும்பும்போது இல்லை.

எல்லா இளைஞர்களையும் போல் ரகுவுக்கு மாலை வேளைகளில் சந்தோஷமாகப் பொழுது போக்க முடிவதில்லை. நாகசாமி தம்மையே நினைத்துக் கொண்டார். 'அறுபது வயதாகிறது. கடற்கரைக்கு வந்து பொழுது போக்குகிறேன்.'—இதை நினைக்க அவருக்குத் தாம் ஏதோ குற்றம் புரிவது போல் இருந்தது. ''சார்... சார்!'' பின்னால் யாரோ கூப்பிடும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். அந்தப் புதிய நண்பர்தான் அவரைக் கூப்பிட்டார்.

''சார், மேல் துண்டை வைத்துவிட்டுப் போய்விட்டீர்களே!'' நண்பர் நினைவுபடுத்தினார். துண்டைக் கையில் வாங்கிக்கொண்டே நாகசாமி தம் மறதியை நொந்தவாறே அதைத் தோளில் போட்டுக்கொண்டு நடந்தார். தார் ரோட்டில் 'டொக் டொக்' என்ற ஊன்றுகோலின் ஓசை மட்டுமே அவர் வருகிறார் என்பதைச் சொல்லிக்கொண்டிருந்தது. காலங்கள் கோலம் வரைந்து விட்ட அவர் முகத்தில் சிந்தனை ரேகைகள் படரக்கூட இடமில்லை. 'டொக் டொக்' கென்ற ஓசையைக் கொண்டே ''டேய் மணி உன் தாத்தா வருகிறார். கதவைத் திற'' என்றாள் சந்திரா, தன் மகனிடம்.

''ஏம்மா, ரகு இன்னும் வரவில்லையா?'' என்று வீட்டுக்குள் நுழையும்போதே நாகசாமி கேட்டார்.

''இல்லை; மணி இன்னும் ஒன்பது ஆகவில்லையே?'' என்றாள் சந்திரா. — இலையைப் போட்டபடி.

'எப்போதுமே அப்பாவுக்கு எட்டு மணிக்கெல்லாம் சாப்பாடு போட்டுவிடு; லேட்டாகச் சாப்பிட்டால் அவருக்கு உடம்புக்கு ஒத்துக்காது' என்பான் ரகு.

என்றும் போலவே அன்றும் நாகசாமியைச் சாப்பிடக் கூப்பிட்டாள் சந்திரா.

உழைத்துக் களைத்து வரும் ரகு எப்பொழுது சாப்பிடுகிறானோ என்ற நினைவு எழுந்தது நாகசாமிக்கு. ''ரகுவும் வந்துவிடட்டுமே, பிறகு சாப்பிடலாமே?'' என்று சொல்லத் தோன்றியது. ஆனால் ஒரு கணம் மணியின் நினைவு வந்தது. தாத்தாவுடன் தான் அவன் சாப்பிடுவான். நாகசாமி கழியை மூலையில் சாத்திவிட்டுச் சாப்பிட இலையின் முன் உட்கார்ந்தார்.

''இன்னும் கொஞ்சம் நெய் போடு அம்மா!'' -- மணியின் தேவை இது. ''அம்மா ரசத்தை ஒரு கிண்ணத்தில் ஊற்றிக் கொடு''—

நாகசாமிக்கு ரசத்தைச் சோற்றில் ஊற்றிப் பிசைந்து சாப்பிட ஏனோ அன்று பொறுமை இருக்கவில்லை.

''அம்மா!'' — இரண்டு பேருமே அம்மா என்றுதான் அழைத்தார்கள். இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக நாகசாமிக்குத் தெரியவில்லை. மணியுடன் உட்கார்ந்து சாப்பிடும்போதும், அம்மா என்று அழைக்கும்போதும் தாமும் ஒரு குழந்தையாகவே இருந்திருக்கக் கூடாதா? என்று அவருக்குத் தோன்றியது. ''தாத்தா! சாப்பிட்டு விட்டு ஒரு நல்ல கதை சொல்லுகிறாயா?'' என்று மணிதான் அவருடைய தாத்தா பதவியை நினைவூட்டினான்.

அன்று இரவெல்லாம் நாகசாமிக்குத் தூக்கமே வரவில்லை. ஏனோ இனம் புரியாத ஒரு வேதனை. ரகு இப்படி உழைத்து ஓடாகத் தாமும் ஒரு காரணமோ? என்றெல்லாம் நினைத்துக் கவலைப்பட்டார்.

காலையில் மனச் சோர்வினால் நாகசாமிக்குப் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவே களைப்பாக இருந்தது. ஆனால் வழக்கத்துக்கு மாறாகத் தாம் படுக்கையிலேயே இருப்பதைப் பார்த்தால், ''அப்பாவுக்கு உடம்புக்கு என்னவோ என்று ரகு பதறிவிடுவான்'' என்று எண்ணிக்கொண்ட நாகசாமி படுக்கையைச் சுருட்டி வைத்தார்.

சுவர்க் கடிகாரம் போல் ஒரே மாதிரியான வேலையிலேயே சுற்றிக் கொண்டிருந்தான் ரகு. தினப்படி ஒரே மாமூல்.

''மாமா, கடற்கரைக்குப் போகவில்லையா?'' கதவண்டை வந்து நின்று கேட்ட சந்திராவிடம் ''இதோ கிளம்பிக் கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லத்தான் நாகசாமியால் முடிந்தது. ''இல்லை, இன்று மனம் சரியில்லை'' என்று சொல்லத்தான் அவர் உள் மனம் தூண்டியது. மனத்தால் நினைப்பதெல்லாம் வெளியே தெரிந்துவிடும் என்றாகி விட்டால், மனிதனின் வாழ்வு எவ்வளவு சீர்குலைந்துவிடும்? அடுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் 'டொக், டொக்'கென்ற நாகசாமியின் கழி ஓசை கடற்கரை வரை தொடர்ந்தது. சிமெண்டு பெஞ்சியில் சோர்ந்துபோய் அமர்ந்திருந்த நாகசாமிக்கு நிம்மியுடன் கிழவர் தம் அருகே எப்பொழுது வந்து அமர்ந்தார் என்பது கூடத் தெரியவில்லை.

''என்ன... இன்று ஒரு மாதிரி...'' என்று கிழவர் பேச்சை ஆரம்பித்தார்.

''என்னமோ ஒரு வெறுமை''— அவர் சொன்னதன் பொருள் யாருக்குமே விளங்காதுதான்.

''பிறத்தியார் தயவில் சாப்பிடுகிறோம் என்ற உணர்வுதான் உங்களுக்கு. பையன் கஷ்டப்படுகிறானே என்ற கவலையாகக்கூட இருக்கலாம். நாமும் முப்பது நாற்பது என்று சம்பாதித்தால் குடும்பத்துக்கு ஓர் ஒத்தாசையாகவும் இருக்கும். நமக்கும் ஒரு பொழுதுபோக்காக இருக்கும். நான் கூட நாலைந்து பசங்களுக்கு டியூஷன் சொல்லித் தருகிறேன்'' என்று ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார் அவர். நாகசாமிக்கு அது ஒன்றும் செவியில் ஏறவில்லை. உடலை விட்டு உயிர் வெளியே வந்து கடல் காற்றில் அலைவது போன்ற ஓர் உணர்வு. அவரிலிருந்து சிந்தனை வெளிவந்து அலைந்தது. யோசனையின் முடிவில் ஏதோ ஒரு பாரம் தம்மிலிருந்து இறங்கிவிட்டதை உணர்ந்தார் நாகசாமி.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு தன் அறைக்கு வந்த ரகு, அப்பா இன்னும் தூங்காமல் இருப்பதைப் பார்த்து வியந்தான்.

''ரகு! நாளையிலிருந்து நண்பர் ஒருவரின் பிள்ளைக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கப் போறேன்'' — எந்தவித அலங்காரமாகவும் பேசத் தெரியாமல் விஷயத்தைப் பட்டென்று வெளியிட்டார் நாகசாமி.

''உங்களுக்குப் பிடித்திருந்தால் சரி!''

அவன் படுக்கைக்குப் போய்விட்டான். நாகசாமியும் நிம்மதியாக உறங்கினார்.

அன்று வழக்கத்துக்கு மாறாகக் காலையிலேயே ஊன்றுகோலின் 'டக்டக்' ஒலி வீட்டை விட்டு இறங்கி ஓய்ந்தது. ''காலையில் அப்பா டிபன் சாப்பிட்டாரா?'' என்ற கேட்டபின் அவரைப் பற்றிய மற்ற நினைவுகளுக்கு ரகுவுக்கு அவகாசமில்லை.

நாகசாமிக்குச் சற்றே தெம்பு வந்தது போலிருந்தது. ''டேய் மணி! உனக்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்கித் தரப் போகிறேன். கடைத் தெருவுக்கு நீயும் வா'' என்று மணியையும் அழைத்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் போனார் நாகசாமி. பத்து ரூபாய்க்கு மணிக்குத் தேவையான சில்லறைச் சாமான்கள் வாங்கிக் கொண்டு, ரகுவுக்கு ஒரு சட்டைக்குத் துணியும் எடுத்துக் கொண்டு வீடு திரும்பினார். ஒரு மாதம் சிரமம் எடுத்துக் கொண்டதற்கு இத்தனை இன்பம் கிடைத்ததே என்று அவருக்கு நினைக்கத் தோன்றியது. என் பணம், நான் சம்பாதித்தது என்று செலவு பண்ணி எத்தனை நாட்களாகின்றன? இன்று என் சம்பாத்தியத்தில் வீட்டுக்கு வேண்டியவற்றை வாங்கிப் போகிறேன் என்ற நினைப்பே அவருக்கு ஒரு நிறைவைத் தோற்றுவித்தது.

வெள்ளிக் கிழமை; புதுப் புடவையுடன் கிழவர் காலில் விழுந்தெழுந்த சந்திராவுக்கு அவர் உடுத்தியிருந்த கிழிந்த ஒட்டுப் போட்ட வேஷ்டிதான் தென்பட்டது. அவளுக்கு மனத்தை என்னவோ செய்தது.

மணி வாசலில் விளையாடிக் கொண்டிருந்தான். சந்திரா சற்று சாவதானமாகவே சமையலில் ஈடுபட்டிருந்தாள். நாகசாமி சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஏதோ தோத்திரப் பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். திண்ணையில் ரகுவுடன் இரண்டு நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஞாயிற்றுக் கிழமை மட்டும் சாவி ஓய்ந்த கடிகாரமாகச் சற்றே ஓய்வு கிடைக்கும் ரகுவுக்கு.

''ஏண்டா ரகு! உங்க அப்பாவை இந்த வயதிலும் வேலைக்கு அனுப்புகிறாயே, அப்படி என்ன பண முடை உனக்கு?''

தோத்திரப் பாடல் சட்டென்று நின்றது. நாகசாமிக்கு மனத்தை என்னவோ சங்கடம் செய்தது. தாமாக விரும்பிச் செய்யும் பணிக்கு ரகுவுக்கல்லவா பழி வந்திருக்கிறது!

''அப்பாவுக்கு இஷ்டப்பட்டதை அவர் செய்கிறார். இதில் நான் என்ன அபிப்பி

பிரிட்டானியா
க்ளாக்ஸோ

தேநீர் அருந்தும் வேளையில் உங்கள் குடும்பத்தினருக்கு இனிய சுவையுள்ள க்ளாக்ஸோ பிஸ்கெட்டுகளை வழங்கி மகிழ்ச்சி அடையுங்கள்! பிரிட்டானியாவின் க்ளாக்ஸோ பிஸ்கெட்டுகள் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் புஷ்டி தருகின்ற சிற்றுணவாகும். தேநீர், காபி, குளிர்ந்த பானம் ஆகியவை அருந்துகையில் க்ளாக்ஸோ பிஸ்கெட்டுகளை வழங்குங்கள்



பிரிட்டானியா பிஸ்கெட்டுகள்

இ பிரிட்டானியா பிஸ்கெட் கம்பெனி லிமிடெட்



இப்பொழுது நடைபெறுகிறது!
சென்னை
சாந்தி
கிரௌன் · சயானி
மற்றும் தென்னாடெங்கும்
பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் அளிக்கும்
ராம்குமார் பிலிம்ஸ்
கலாட்டா கல்யாணம்
டைரக்ஷன்
C.V. ராஜேந்திரன்
கதை: ஸ்ரீதர் - கோபு
திரைக்கதை · வசனம் · கோபு
ELEGANT

ராயம் சொல்ல?'' ரகு சொன்னதை நம்பினவர்களாகத் தெரியவில்லை அவன் நண்பர்கள். அவன் நண்பர்கள் பின்னும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். கட்டைக் குரலில் மாதவன் சொன்னான்: ''நான் எங்கப்பாவைத் திண்ணையிலிருந்து வாசலில் இறங்கவிட மாட்டேன். ஏனென்றால் வயதானவர்கள் வழியில் எங்காவது தலை சுற்றிக் கீழே விழுந்து விட்டால் நமக்குத்தானே தலை குனிவு...'' என்று பேசிக் கொண்டே இருந்தான். ரகு எதுவும் பதில் சொல்லவில்லை. பிள்ளையின் இக்கட்டான நிலையை ஓரளவு கணித்துக் கொண்டார், நாகசாமி. 'பாவம், ரகு. அவனா நம்மை வேலைக்குப் போ என்று சொன்னான்? இல்லையே? நமக்குச் சோறு போடாமல் தவிக்க விட்டானா? கடைசியில் நாமாக அவனுக்கு நல்லது செய்ய நினைத்த போது அவன் நண்பர்களிடமிருந்து பேச்சு வாங்கிக் கட்டிக் கொண்டதுதான் பயன்' இப்படியெல்லாம் நினைக்க நாகசாமி ஒரு முடிவுக்கு வந்து விட்டார்.

''மாமா!'' என்ற சின்னஞ்சிறு குரலைக் கேட்டுத் தலைநிமிர்ந்தார் நாகசாமி. ''இன்னிக்குப் பாடத்துக்கு வரவில்லையே, மாமா! உடம்பு சரியில்லையா?'' என்று பரிவுடன் கேட்ட தன் சிஷ்யப் பிள்ளையைப் பார்த்த நாகசாமியின் கண்கள் நிரம்பின. ''நன்றாகப் படி, போ! நாளையிலிருந்து வேறு யாரையாவது உனக்குப் பாடத்துக்கு அனுப்புகிறேன் போ!'' என்று கூறினார். சிறுவன் அரை குறை மனத்துடன் எழுந்து சென்றான். அவனுக்கு இன்னொருவரிடம் பாடம் படிக்க விருப்பமேயில்லை.

''அப்பாவைக் கேட்டீர்களா? ஏன் டியூஷனுக்குப் போகவில்லை என்று. அந்தப் பிள்ளை வந்துவிட்டுப் போகிறானே'' என்றாள் சந்திரா குழந்தையைத் தூளியில் விட்டு முன்னும், பின்னுமாக ஆட்டிக் கொண்டே.

''சந்திரா! அவர் பாடத்துக்குப் போனாலும், போகாவிட்டாலும் அது அவர் இஷ்டம். நானும் அதைக் கேட்கமாட்டேன். நீயும் அதைக் கேட்பதை நான் விரும்பவில்லை'' என்ற ரகு தேய்ந்து போன செருப்பில் தன் பாரத்தைப் போட்டு நறுக் நறுக்கென்று ஓசை எழும்ப வெளியே நடந்தான்.

''மணி அந்தக் கம்பளியை எடுத்து மேலே போர்த்தி விடேன். உடம்பு வெறச்சுப் போறது.'' மணி கம்பளியை எடுத்துத் தாத்தாவுக்குப் போர்த்தினான்.

''மணி! உங்க அப்பா ஒரு பேனா வாங்கணும் என்று சொல்லிக் கொண்டிருந்தானே, வாங்கினானா?'' நாகசாமிக்கு ஏனோ ரகு பேனா வாங்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்து விட்டது.

''வாங்கல்லியாம், தாத்தா! பணம் போதவில்லையாம். அடுத்த மாசம் வாங்கிக் கொள்கிறேன் என்று சொன்னார்!'' — மணி பதில் சொல்லிவிட்டு ஏனோ தயங்கினான்.

''தாத்தா! இன்னிக்குத்தான் நீ என்னோட சாப்பிடல்லியே! கதையாவது சொல்றியா?'' என்று கெஞ்சினான் மணி. அவன் ஏக்கமான பார்வையை நாகசாமி கவனிக்கவில்லை. அவர் கண் மூடிச் சிந்தனையில் ஆழ்ந்தார்: அவர் எத்தனையோ தரம் திரும்பத்



இன்ஷ்யூரன்ஸ் ஆபீசர் (பரிகாசமாக): உங்க காரை இன்ஷியூர் செய்தது பகல் பதினொரு மணிக்கு. சாயங்காலம் நான்கு மணிக்கு 'ஆக்ஸிடெண்ட்' ஆகியிருக்கிறது. ஏன் அவ்வளவு 'டிலே?'

''டிரைவர் லேட்டாக வந்தார்.''

திரும்பச் சொல்லியும் அலுக்காமல் மணி சிரித்துச் சிரித்து ரசிக்கும் ஒரு கதை உண்டு. ''ஒரு கிழவன் சந்தைக்குச் சென்று ஒரு கழுதை வாங்கினான். திரும்பும் போது அவன் கழுதையின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு வந்து கொண்டிருந்தான். 'பாவம், அந்தச் சின்னக் கழுதை மேல் இவன் உட்கார்ந்து வருகிறானே! அதனால் இவனைச் சுமக்க முடியுமா?' என்று யாரோ கிழவனின் செய்கையை விமரிசித்தார்கள். கிழவன் என்ன புரிந்து கொண்டானோ? கழுதையின் மேலிருந்து இறங்கிக் கழுதையை ஓட்டிக் கொண்டு சென்றான். ''பாவம், அந்தக் கிழவன் மட்டும் செருப்பு போட்டுக் கொண்டிருக்கிறான். கழுதை வெய்யிலில் நடக்கிறது'' என்றார் இன்னொருவர். கிழவர் கழுதையைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு நடந்தார். கிழவன் கழுதையைத் தூக்கிக்கொண்டு வரும் வேடிக்கையைப் பார்த்து எல்லாரும் சிரித்தார்கள். '' இதுதான் மணியைக் கவர்ந்த கதை.

கதையின் முடிவைப் பற்றி நாகசாமி சிந்தித்தார். அந்தக் கிழவன் மறுபடியும் அந்தக் கழுதை மேல் ஏறி உட்கார்ந்திருப்பானா? அவன்தான் முட்டாளாயிற்றே! தெளிவுபடாத கதையின் முடிவு அவருக்குப் பனியிடை உருவெனத் தெரிந்தது. அதே நிலை எனக்கு ஏற்பட்டால்? அதே முட்டாள்தனமான முடிவா? சிந்திக்க முடியாமல் அவர் இதயம் சோர்ந்தது. சமையல் வேலையில் வாடிக் கொண்டிருக்கும் சந்திராவுக்கு 'வெந்நீர் போட்டுக் கொடு. மிளகு ரசம் பண்ணிக் கொடு' என்று புதுப்புது வேலைகள் கொடுப்பதும், 'மணி, மூக்குப்பொடி! வாங்கிக்கொண்டு வாயேன்' என்றும், கால் குடைச்சல் எடுக்கிறது. சற்று பிடித்து விடேன்'' என்றும் அவன் விளையாட ஓடும் நேரங்களில் அவனைத் தன் அறையில் சிறை வைப்பதும், டியூஷனுக்குப் போகிறேன் என்று ''தகப்பனைக் காப்பாற்ற வக்கில்லாத பிள்ளை'' என்று ரகுவுக்குப் பெயர் வாங்கி வைப்ப

தையும் தவிர வேறு எதைச் செய்துவிடுகிறோம்? தம்மால் யாருக்கு என்ன லாபம் என்று நாகசாமி தமக்குள்ளாகவே சிந்தனைகளைப் பின்னிக் கொண்டார். முறுக்கேறி விட்ட இதயம் வெடித்துவிடும் போன்ற பிரமை; விண் விண் என்று உடல் வலி.

''தாத்தாவுக்கு ஜுரமாமே! டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போகக் கூடாதோ? அவர் சொன்னார் என்று கஷாயம், அது இது என்று கை வைத்தியம் பார்க்கலாமோ? பணச் செலவைப் பற்றி இந்த நேரத்தில் நினைக்கக் கூடாது.'' யாரோ ஒருவர் ஆபிஸிலிருந்து ஓய்ந்து வந்திருக்கும் ரகுவுக்கு உபதேசித்து கொண்டிருந்தார். என்ன பரிவு? நாகசாமிக்குச் சிரிப்புத்தான் வந்தது.

ரகு சட்டையைக் கழற்றாமலே, ''சந்திரா!'' என்று குரல் கொடுத்தான். ''அப்பாவுக்கு நல்ல ஜுரம். ஆசையாக மிளகு ரசம் பண்ணச் சொன்னார். அதைக்கூடச் சாப்பிடவில்லை'' என்றபடியே கையில் காப்பியுடன் வந்தாள் சந்திரா. காப்பியை வாங்கி ஒரே மடக்கில் சாப்பிட்டுவிட்டு அப்பா அறைக்குள் நுழைந்தவன், அப்பாவின் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான். நல்ல உஷ்ணம். ''அப்பா! நான் போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வந்துவிடுகிறேன்'' என்றான் ரகு. கண்ணை மெதுவாகத் திறந்து பார்த்த நாகசாமி. ''எதுக்கடா, ரகு டாக்டர்? ஒன்றும் வேண்டாம். இது வெறும் ஜுரம். அரை டம்ளர் மிளகு கஷாயம் சாப்பிட்டால் சரியாகப் போய்விடும்'' என்றார்.

ரகு சமையல்கட்டுக்குச் சென்று மெதுவாக, ''சந்திரா, உன்னிடம் பணம் ஏதாவது வைத்திருக்கிறாயா?'' என்று கேட்டான். சந்திரா வேதனையுடன், ''என்னிடம் ஏது பணம்? ஏதோ இரண்டு ரூபாய் இருக்கிறது'' என்றாள். நான் என் நண்பன் மாதவனிடமிருந்து பத்து ரூபாய் வாங்கிக் கொண்டு டாக்டரையும் அழைத்து வந்து விடுகிறேன்'' என்று கிளம்பினான் ரகு.

நாகசாமியும் சமையற்கட்டில் நடந்த பேச்சுக்களையெல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்.

அரை மணி நேரத்துக்குப் பிறகு ரகு வீடு திரும்பினான். வந்தவன் அப்படியே நாற்காலியில் உட்கார்ந்து விட்டான். ''சந்திரா! எனக்குப் பணம் கிடைக்கவில்லை. மாசக் கடைசி என்று எல்லா நண்பர்களும் கையை விரித்துவிட்டார்கள். ஞாயிற்றுக்கிழமைதோறும் உன் மனைவி செய்யும் வெண்பொங்கல் வெகு ஜோர். பூரி கிழங்கு ஏ-ஒன். என்று பேசிக் கொண்டே வயிறுபுடைக்க டிபன் தின்றுவிட்டு என்னுடன் அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் அந்த மாதவன்கூட என் கஷ்டம் தெரிந்தும், 'அதெல்லாம் இப்படிச் சமயத்தில் பணம், பணம் என்று பறந்தால் கிடைக்காதப்பா? மாசா மாசம் இந்த மாதிரி அவசரத் தேவைக்கு என்று ஐந்து ரூபாயாவது சேமிக்க வைக்கணும்' என்று உபதேசம் பண்ணி அனுப்பிச்சுட்டான். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லையே!'' என்றான் ரகு. அவன் கண்கள் கலங்கியிருந்தன.

அறைக்குள்ளிருந்து நாகசாமியின் குரல். ''அம்மா, சந்திரா! கஷாயம் போட்டுவிட்டாயா? கொண்டு வந்து கொடு'' என்று கேட்டது. கஷாயம் குடித்துவிட்டுக் கண்ணயர்ந்தார் நாகசாமி. அன்று இரவெல்லாம் ரகு தூங்கவேயில்லை. பலவிதமான கவலைகளில் மூழ்கிக் கிடந்தான்.

மறுநாள் பொழுது விடிந்ததும் நாகசாமி சுறுசுறுப்புடன் எழுந்தார். ஜுரம் நன்றாக விட்டிருந்தது. வெந்நீரில் கைகால் முகம் கழுவிவிட்டு நெற்றியில் பட்டையாக விபூதி இட்டுக் கொண்டு உடை மாற்றிவிட்டுச் சந்திரா கொடுத்த காப்பியையும் ரசித்துச் சாப்பிட்டு விட்டுக் குடையை எடுத்துக் கொண்டு கிளம்பினார். அவர் வாசல் திண்ணைக்கு வந்த போது, கண்ணாடி முன் நின்று முக க்ஷவரம் செய்து கொண்டிருந்த ரகுவும், மணிக்குத் தலைவாரிக் கொண்டிருந்த சந்திராவும், கவனித்து விட்டார்கள். ''மாமா! எங்கே கிளம்புகிறீர்கள்? ராத்திரி யெல்லாம் ஜுரமாகக் கிடந்த உடம்பு'' என்றாள் சந்திரா.

நாகசாமி திண்ணையில் ஒரு கணம் நின்றார். ''அம்மா, சந்திரா, எனக்கு ஜுரம் நன்றாக விட்டுவிட்டது. நான் இப்போ ஏழுமலையருக்குத்தான் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். நேற்று ரகு பட்ட கவலையை எல்லாம் நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். நண்பர்களும், வெளி மனிதர்களும் நீங்கள் அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்று யோசனை சொல்லுவார்களே தவிர ஆபத்துக்கு உதவ மாட்டார்கள். இது உலக நியதி. நம் வீட்டில் எனக்கு ரகுவும் அவனுக்கு நானும்தான் துணை. எங்கள் இருவருக்கும் நீ துணை. இதை நன்றாகத் தெளிவாக உணர்ந்து விட்டேன். இனி மேல் யார் என்ன சொன்னாலும் அவர்கள் யோசனைக்கு நான் செவி சாய்க்க வேண்டியதில்லை. எனக்கு உடம்பில் தெம்பு இருக்கிறது. உழைக்க வழியும் இருக்கிறது. நான் சோம்பி உட்கார்ந்திருப்பது தவறு. எனக்கு உடம்பில் பலம் இருக்குமளவும் நான் உழைக்கத்தான் செய்வேன். அதில் கிடைக்கும் ஊதியத்தை நாம் சிறு சேமிப்பாகச் சேமித்து வைத்துக் கொள்ளுவோம். இதுதான் என் முடிவு. இதை ரகுவிடமும் சொல்லிவிடு. நான் பத்துமணிக்கெல்லாம் சாப்பிட வந்துவிடுவேன். ஒரு பருப்புத் துவையல் அரைத்துவிடு. நாக்குக்கு உறைப்பாக இருக்கட்டும்'' என்று சொல்லி விட்டுத் தெருவில் இறங்கி நிமிர்ந்து நடந்தார்.

நாகசாமியின் பேச்சையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ரகுவும், 'இனி மேல் நம்ப குடும்ப விஷயத்தில் பிறருடைய யோசனையைக் கேட்கக் கூடாது. அப்படிக் கேட்டால் அப்பா மணிக்குச் சொல்லும் கிழவனும் கழுதையும் என்ற கதை போல் கேலிக்கு இடமாகிவிடும். நாமே ஒரு முடிவுக்கு வர வேண்டும்' என்ற உறுதியுடன் குளிர்ந்த தண்ணீரால் முகத்தைக் கழுவிவிட்டுத் தன் மலர்ந்த முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டான்.

படித்துப் பாருங்கள்

ஸ்ரீ பவாநீ புஜங்க ஸ்தோத்திரம்

ஆதிசங்கர பகவத்பாதர்கள் தேவியைக் குறித்து 'புஜங்கப் பிரயாதம்' என்ற விருத்தத்தில் இயற்றிய பதினேந்து சுலோகங்கள் கொண்ட அரிய துதி ஸ்ரீ பவாநீ புஜங்கம். முதல் சுலோகத்தில் குண்டலினி சக்தியாகத் தேவியைத் துதித்து விட்டு, அடுத்த எட்டு சுலோகங்களில் அவளது திருமேனி சௌந்தரியங்களைப் பாடுகிறார் ஸ்ரீ ஆசாரியர். ஒன்பதாவது சுலோகம் ஸ்ரீ சக்கரத்தில் உறையும் ராஜ ராஜேசுவரியைப் போற்றுகிறது. அடுத்த நான்கு சுலோகங்கள் தேவியின் ஒப்பற்ற பிரபாவங்களைக் கூறுகின்றன. கடைசி சுலோகத்தில் பாலகனுகிய தம் இதயகமலத்தில் தேவியின் ஒளி வடிவம் என்றும் விளங்க வேண்டுமென்று ஆசாரியர் வேண்டுகிறார்.

மந்திர சாஸ்திரங்களில் தேர்ந்த அப்பியாசமுடைய உரை ஆசிரியர், பவாநீ புஜங்கத்துக்குப் பதவுரை, பொழிப்புரை, விரிவுரைகள் தந்திருப்பதோடு, யோக சாஸ்திர உண்மைகளை நீண்டதோர் முகவுரையில் ஏராளமான மேற்கோள்களுடன் விளக்கியிருக்கிறார். தேவி பக்தர்களுக்கு, குறிப்பாக மந்திர சாஸ்திர யோக சாஸ்திரங்களில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மிகவும் பயனுள்ள உத்தம நூல்.

உரை ஆசிரியர் : வாதுல வே. ராமசந்திர சர்மா; வெளியீடு: ஸ்ரீ பக்தஜனமாஜம், மாம்பலம், சென்னை—33; விலை: ரூ. 2.00.

ஸ்ரீ கணேச சுப்ரபாதம்

ஸ்ரீ கணேச சுப்ரபாதமும் ஸ்ரீ சிருங்கார வேலன் ஸ்தோத்திரமும் என்ற சிறு நூலில் மூன்று அம்சங்கள் குறிப்பிடத் தக்கவை. இயற்றியவர்: மந்த்ர சாஸ்திர விற்பன்னர். தேவி உபாசகர். அவருடைய கவிதாசக்திக்கு இது ஒரு விசேஷம். சுப்ரபாதம் என்றால் நல்விடிவு. இது ஸ்துதி செய்யும் நமக்குத்தான் ஒவ்வொரு நாளும் நல்ல விடிவாக இருக்க வேண்டுமே தவிர, துதிக்கப்படும் தெய்வத்துக்கல்ல. எனவே, ''தவசுப்ர பாதம்'' என்பதற்குப் பதிலாக ''மமசுப்ர பாதம்'' என்று துதிகளை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. சிக்கில் தலம் உண்மையில் ''சித்கலா க்ஷேத்ரம்'' என்றுதான் இருக்க வேண்டும் என்று கருதி வடமொழியில் சிங்கார வேலன் மீது பாடப்பெற்ற துதிகள் அழகாகவும், சாஸ்திர நுட்பங்களும் நிரம்பப் பெற்றுள்ளனவாகவும் அமைந்திருக்கின்றன. பாராயணமாகவே செய்வதற்கு உகந்தவை.

கிடைக்குமிடம்: ஸ்ரீ ஸ்வாமி சாஸ்திரிகள், ''சிந்தாமணி ராமக்ருஹா'': கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம், சென்னை-24 விலை: 40 காசு.

தமிழ் இலக்கியத்தின் சரித்திரம்

இரண்டு உலகத் தமிழ் மகாநாடுகள் தமிழ் மொழி அகில உலகத்தின் கவனத்தைக் கவர்ந்துள்ளதைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன. இன்றுள்ள அயல் நாட்டுத் தமிழறிஞர் மட்டுமின்றிப் புதிதாகத் தமிழ் மொழி ஆராய்ச்சியில் ஈடுபட விரும்பும் அயல் நாட்டவருக்கும், ஏன், ஆங்கிலம் படித்த தமிழர்களே தமிழின் பெருமையை இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளவும் பயன்படும் வகையில் ஸ்ரீ ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கியத்தின் சரித்திரத்தை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

அகத்தியத்தில் தொடங்கி, தொல்காப்பியம், வள்ளுவம் என்று கிரமப்படி தமிழ் இலக்கிய சரித்திரத்தை விவரித்து வரும் நூலாசிரியர் பிறகு பல்வேறு சங்க நூல்களைப் பற்றிச் சொல்லுகிறார்.

சங்க காலத்திய பண்பாடு, சமூகப் பொருளாதார நிலைகளை விவரிக்கிறது அடுத்த அத்தியாயம். கடைசியாகச் சிலப்பதிகாரம் மணிமேகலை பற்றிக் கூறுகிறார்.

ஆங்காங்கே சில பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் தமிழில் மூலத்தையும் கொடுத்து இலக்கிய நயத்தை உணர்த்துகிறார் ஆசிரியர். புகைப்படங்கள் பலவும் சித்திரங்கள் பலவும் நூலுக்கு அணி செய்கின்றன.

இதைத் தொடர்ந்து இன்னும் மூன்று பாகங்களை மூன்று புத்தகங்களாக வெளியிட்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றினை முழுமையாக ஆங்கிலத்தில் தர எண்ணியிருக்கிறார் நூலாசிரியர். தமிழ்த் தாய்க்கு ஆற்றும் சீரிய தொண்டு.

A History of Tamil Literature. கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1. விலை ரூ. 12.




''வாங்கோ மாமா; வாங்கோ! உட்காருங்கோ!''

''வேண்டாம்பா! நாம் நின்று கொண்டே பேசுவோம். மூட்டைப் பூச்சின்னு எனக்கு அலர்ஜி!''

'போணி'

திரிசங்கு



வாசல் ஆளோடிக்கு வந்து எட்டிப்பார்த்தார் வைத்திலிங்கம். வழக்கமாய் வருகிற கூடைக்காரக் கிழவியை அவர் கண்கள் தேடின. அவள் வருகிறாள் என்றால், குரல் ஒரு பர்லாங் தூரத்திலிருந்தே கேட்கும். தெரு முழுக்க எதிரொலிக்கும்படி கத்தி வியாபாரம் செய்வதற்குத் தெம்பு அவளுக்கு அந்த வயதில் இருந்ததுதான் அதிசயம்!

இன்னுமா வரவில்லை கிழவி?

உள்ளுக்கும் வெளித் திண்ணைக்குமாகப் பத்து நடை நடந்திருப்பார் வைத்திலிங்கம். பழைய திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியார் தானே? 'டிக்டேஷன்' போட்டு விட்டுக் குறுக்கும் நெடுக்குமாகக் கால் கடுக்க நடந்து நடந்து கண்காணிக்கிற அநுபவம் பெற்ற மனுஷ்யர்!

தூரத்தில் கூடை தெரிந்தது மங்கலாக.

திண்ணை முகட்டுக்கு வந்து விட்டார் அவர். கிழவியும் வர வர, அருகே வந்து விட்டாள். 'ஆயினும், இன்னைக்கு ஏன் இப்படி அவள் ஆடி அசைந்து கொண்டு வருகிறாள்?'

''ஏ, கிழவி! சீக்கிரம் வரக் கூடாதா? உனக்காகத்தானே காத்திண்டிருக்கேன், நான்?''

கிழவி வந்து எதிரே நின்றாள். ஆனால் கூடையை இறக்கவில்லை.

'இறக்கு, கூடையை' என்று உத்தரவு இட்டவர், தாமே ஒரு கை கொடுத்து இறக்கத் தயாராகி விட்டார்.

''சாமி, வந்து.... கிழவி காட்டிய தயக்கத்தைப் பொருட்படுத்த வில்லை அவர். கூடையை இறக்கி வைத்து விட்டார். வைத்திலிங்கத்துக்கு இதுவரை 'ஷாக்' அடித்தது இல்லை. இன்று அவருக்கு 'ஷாக்' அடித்தாற்போல் இருந்தது.

காரணம், கூடையினுள் இருந்தவை சின்னஞ் சிறு மீன்கள். வைத்திலிங்கத்துக்குத் தூக்கிவாரிப்போட்டது, திறந்த கூடையைப் பார்த்ததும்.


கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தார். ''என்ன இது?''

''பழக்கக் குரல் கொடுத்திட்டேதானே வாரேன்? நீ கேட்கலையா?''

அவருக்குத் தம் தவறு தெரிந்தது. அவள் விற்பது என்ன என்பதையே காதில் வாங்கிக் கொள்ளாமல், தாம்பாட்டில் கூப்பிட்டுக் கூடையைத் திண்ணையில் இறக்கச் சொல்லிவிட்டார். பிசகு அவள் பேரில் இல்லை.

''சரி, கூடையைத் தூக்கு.''

கிழவிக்கு இந்தப் பேச்சு ஒப்பவில்லை. எப்பொழுதோ அவள் வைத்திலிங்கத்திடம் முதல் 'போணி' செய்து ருசி கண்டவள். கறிகாய் வியாபாரம் செய்தவள் இன்றுதான் முதன் முதலாக இந்த வியாபாரத்தில் இறங்கினாள். தெருவில் வரும்பொழுதே, அவளுக்கு இன்று அவரி



"இத்தனை பெரிய பெட்டியைத் தூக்கிட்டுக் கிளம்பிட்டீங்களே! எங்கே? ஊருக்கா?"

"இல்லே! வெத்திலைப் பெட்டிதான். ஆபீசுக்கு எடுத்திட்டுப் போறேன்!"

டம், 'முதல் போணி' செய்ய முடியாதே என்று தோன்றியது! ஆண்டவனைப் பார்த்தவா அவரையே அழைக்கும்படி வைத்திருக்கிறான்! இதை எண்ணியவள், "சாமி, சாமி! வேணும். மொத வீடு இதுதான். கூடையை நேரே உன் வீட்டிலேதான் இறக்கினேன். வெறும் கையோடே அனுப்பிராதே. போணி ஆவட்டும், உன் கையாலே!" என்றாள்.

வைத்திலிங்கம் ஊருக்கே உத்தமர் என்று பெயர் எடுத்த பரம சாது. தெரிந்தோ, தெரியாமலோ நாளது வரை ஒரு ஜீவனுக்கும் கெடுதல் பண்ணப்பட்டவர் இல்லை. கிழவியோடு அதிகம் வாதாடிக் கொண்டு நிற்க அவருக்கு இஷ்டம் இல்லை. "சரி, என்னை என்ன பண்ணச் சொல்றே?" என்றவர், உள்ளே விருந்து எட்டணா எடுத்து வந்து அவள் எதிரே நீட்டினார். கிழவி இரண்டு கைகளினாலும் காசை வாங்கிக் கூடையைச் சுற்றி மும்முறை வலம் செய்து, இடுப்பில் செருகிக் கொண்டாள்.

"எங்கிட்டு வெக்கட்டும் இதை?" என்று கேட்டு, கையில் ஒரு பிடி அள்ளி எடுத்தாள் கிழவி.

"நீயே எடுத்துக்கிட்டுப் போயிடு!"

"சாமி, சாமி! அப்படிச் சொல்லக் கூடாது. நான் வியாபாரம் செய்பவள். உன் காசை இனுமா வாங்கிப் போக மாட்டேன்! நீ யாருகிட்டேயாவது தள்ளிவிடு! உன் கைராசிக்கு என்னிக்குமே மதிப்பு உண்டு, சாமி!" என்றாள் கிழவி.

வைத்திலிங்கத்துக்கோ ஒன்றுமே புரியவில்லை. இயந்திரகதியில் திண்ணையின் உட்புற மூலையைக் காட்டினார்.

கிழவி திண்ணையேறிச் சுவர் ஓரமாக மூலையில் ஒரு காகிதக் கிழிசலில் அதைச் கருட்டி வைத்துவிட்டு இறங்கினாள். "அதென்ன இன்னிக்குத் திடுதிப்புனு இப்படிப் பண்ணிட்டே? தினமும் கீரை, காய்கறி ஏதும் கொண்டு வருவே. இன்னிக்கென்ன புதிசா இதைப் புடிச்சே?"

"நான் பூரா சுத்திக் கூடையைக் காலி செஞ்சாக்கூடக் காய்கறி வியாபாரத்திலே ரெண்டு ரூபாதான் தேறுது. இன்னிக்குப் பாலத்தடியிலே மீனு கிடைச்சது. அஞ்சு ரூபாச் சரக்கு எடுத்தேன், கட்டாயம் பத்து ரூபாய்க்குப் போகுமே. நல்ல விரால் மீனு, சாமி."

கிழவி சென்று விட்டாள்.

வைத்திலிங்கம் திண்ணை மூலையை ஓரக் கண்ணால் பார்த்தார்.

எதிர்வீட்டுக் கதவு திறக்கும் ஓசை வந்தது. நல்ல வேளை, பெரியவர்கள் எவரும் வெளிவரவில்லை, அவர் பயந்தாற்போல்! சந்துருதான் வந்தான். ஒரு யோசனை உதித்தது.

"சந்துரு!"

"ஏன் மாமா! கூப்பிட்டேளா?"

"ஆமாண்டா, கண்ணு."

பையன் வந்து நின்றான்.

"இப்படி வாயேன்" என்று அவனை அருகே அழைத்தார். திண்ணையின் மூலைக்குச் சென்றார்.

"இதப்பார். இதைக் கொண்டு போய்க் காத்தான் கடையிலே கொடுத்துட்டு வரியா?"

சந்துரு தயங்கிக் கொண்டே காகிதப் பொட்டலத்தின் அருகே சென்றான்.

"என்ன மாமா, இது?" என்று மருண்டவன் போலக் கத்தினான் சந்துரு.

"இரையாதேடா, சந்துரு! ஓசைப் படாமெ நடக்கணும். தெரிஞ்சுதா?"

"மீனு மாமா இது? ஐயையோ, நான் தொடமாட்டேன். நேக்குப் பயமாயிருக்கு."

"உசிர் கிடையாதுடா இதுக்கு!" என்று வைத்திலிங்கம் அழாக்குறையாகக் கெஞ்சினார்.

"போங்கோ, மாமா! இதப் போய் யார் தொடுவா? இதெல்லாம் போய் எதுக்கு மாமா வாங்கறேள்?" — போகிற போக்கிலே இப்படி ஒரு கேள்வி வேறே!

அவருக்கு வயிற்றைக் குமட்டியது.

"டேய், எனக்காக ஒரு காரியம் செய்யேன்! கொஞ்சம் கடைத் தெருவுக்குப் போயிட்டு வாயேன்!"

"மீனை எடுத்திண்டா?"

"இல்லேடா, மக்கடை வச்சிருக்கானில்லியா குஞ்சுப் பணிக்கர். அவனைக் கொஞ்சம் நான் கூப்பிட்டேன்னு கூட்டிண்டு வா."

"பகவதி விலாஸ் மக்கடையா மாமா?"

"ஆமாம், அதேதான். நான் கையோடே வரச் சொன்னேன்னு போய்ச் சொல்லு. உடனே வருவான்."

"அவன் வராட்டா?"

"இருந்தால், நிச்சயமா வருவாண்டா, — சந்துரு."

"அவனை இல்லேன்னு வச்சிக்கோங்களேன், அப்ப?"

வைத்திலிங்கம் பொறுமையாகச் சொன்னார். அவர் செய்திருக்கிற காரியத்துக்குக் கோபப்பட்டு என்ன பிரயோசனம்?

"அவன் இல்லேன்னா, வாசுக் குட்டி இருப்பான். அவனை அழைச்சிண்டு வா."

சந்துரு போய் விட்டான்.

வைத்திலிங்கம் மூலையைப் பார்த்தார். மீன் விழித்துக் கொண்டிருந்தது. சந்துரு போயிருக்கிறானே, ஏதாவது வழி பிறக்

இறதா, பார்க்கலாம். சிறிது நேரத்தில், 'பணிக்கர் வராங் மாமா' என்று கூறிவிட்டுச் சந்துரு மறைந்தான். பின்னோடு பணிக்கர் வந்து நின்றான்.

"சாமி என்னெ விளிச்சோ?" எனக் கேட்டுக் கொண்டே கறுப்பு வேட்டி வந்தது.

"ஆமாம், பணிக்கர்!" என்று விஷயத்தை எப்படிப் புரிய வைக்கலாம் என்று வைத்திலிங்கம் தலையைச் சொறிந்தார்.

பணிக்கரின் நெற்றியில் பட்டை பட்டையாக வாசனைச் சந்தனம் பூசியிருந்தது. குங்குமம் நடுவில் அப்பியிருந்தது. சட்டைக் கழுத்துக்குள்ளே துளசி மாலை தெரிந்தது.

வைத்திலிங்கம் விளக்கெண்ணெய் குடித்தாற் போன்ற முகச் சோபையுடன், நடந்ததைச் சொன்னார்.

பணிக்கர் 'மோசம் போயி' என்று இரண்டு முறை கத்தினான். "ஞான் மகர விளக்குக்கு மலைக்குப் போகும். மாம்சத்தெ ஞான் தொடாம்பாடில்லா" என்று அவன் கூறியதும் வைத்திலிங்கத்துக்கு மூச்சுத் தொங்கிப் போய்விட்டது. அவனை மேலே வற்புறுத்துவதற்கும் இல்லை. சபரி மலை போகிறவன் அவன். மீனை அவன் தொட மாட்டான்.

கண்ணில் தண்ணீர் வந்துவிடும் இன்னும் கொஞ்சம் போனால் — இத்தகைய ஒரு நிலைமைக்கு வந்து விட்டார் வைத்திலிங்கம்.

அவர் முகத்தைப் பார்த்ததும், பணிக்கருக்கும் வேதனையாக இருந்தது. அவனுக்கு என்னவோ தோன்றியது. "ஒன்னும் பயப்பட வேணும். இந்த மீனுக்கு ஒரு ஆளுதானே வேணும்? ஞான் போய் ஹனீபெ அனுப்பும்."

இவ்வாறு யோசனை கூறிவிட்டுக் கிளம்பிய பணிக்கர் கடைக்குப் போனதும் எதிர்க் கடை ஹனீபை அனுப்பி வைத்தான். அவன் வந்து நின்று "என்ன சாமி ஆச்சு?" என்று துக்கம் விசாரிக்கிறாற்போல் வினவவே, வைத்திலிங்கத்துக்கு அழுகையே வந்துவிடும் போலத் தோன்றியது.

ஹனீப் அவரிடம் பரம விசுவாசம் பூண்டவன். ஒரு காலத்தில் அவரிடம் திண்ணைப் பள்ளியில் படித்தவன். படிப்பும் ஏறவில்லை; அதற்கு ஏற்றாற்போல் வாழ்க்கையில் முன்னேற அது வேண்டியதும் இல்லை என்று ஞானோதயம் ஏற்படவே, மரியாதையாக ஒதுங்கிக் கொண்டு நகர்ந்தவன்.

அவன் மீசை துடிக்கலாயிற்று. "என்ன போக்கடாத்தனங்க இது? ஐயா வீட்டுத் திண்ணையிலே போய் மீன் கூடையெ இறக்குவானேன்? அவ்வளவு திமிர் பிடிச்சுப் போச்சுங்க!"

வைத்திலிங்கம் கிழவிக்குப் பரிந்து பேசினார். - "அதெல்லாம் இல்லேப்பா. கிழவி பாவம், அதுக்குப் போணியாகணும்னு கவலை...!"

"அதுக்காக ஐயா தலையிலே மீனைக் கட்டிட்டுப் போறதா? நல்லா இருக்குதே காரியம்!"

அவர் மீன் பொட்டலம் ஹனீபின் கையில் ஏறியதும் ஒரு நெடுமூச்செறிந்தார். ஹனீபின் கண்கள் அகல விரிந்தன. காகிதத்தை அப்படியே விரித்தான்.



"அரசியல் பொதுக்கூட்டங்களில் பேசும்போது கொஞ்சம் நிதானமாகப் பேசுங்கள் என்று எத்தனை தடவை படிக்கப் படிக்கச் சொன்னேன்!"

"நல்ல சாதி மீனுங்க, ஐயா. வரால் மீனு. நல்ல வளர்த்தி இந்தப் பக்கத்துக்கு!"

வைத்திலிங்கம் மூக்குத் துணியை மெல்ல அகற்றினார்.

"இந்தாங்க சாமி" என்று அவன் எட்டணாவை எடுத்து அவரிடம் நீட்டினான்.

"வேண்டாம்ப்பா, நீயே வச்சுக்க. எனக்குத் திண்ணையை விட்டு இது நகர்ந்தாச் சரி. காசு வேண்டாம்!" பாவம், குரல் தழு தழுக்கப் பேசினார்.

"அப்பிடிங்களா? காசு போட்டுத்தானே வாங்கியிருக்கீங்க? நீங்க வீணா ஏன் செலவு பண்ணணும்?"

காசு வாங்கிக் கொள்ள அவருக்கு இஷ்டமே இல்லை. திண்ணையின் மூலை காலியானால் போதும்!

ஹனீப் காசைக் கொடுத்துவிட்டு 'வரட்டுங்களா?' என்று கேட்டுவிட்டு நகர்ந்தான். வாடை தொடர, நடையைக் கட்டினான். வைத்திலிங்கம் நேரே உள்ளே சென்று, கிணற்றடியிலிருந்து செம்பு நிரம்பத் தண்ணீர் எடுத்து வந்தார். திண்ணையின் மூலையில் கொட்டிச் சுத்தம் செய்தார்.

"அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டுத் தலையை நிமிர்த்த பொழுது 'சாமி!' என்ற குரலுடன் எதிரே நின்றாள் கூடைக்காரக்கிழவி.

"நல்லா இருக்கணும் சாமி, நீ! உன் கையாலே இன்னிக்குப் போணுது தொடங்கிச்சு. பன்னண்டு ரூபா கெடைச்சுது சாமி. உன்கிட்டே சொல்லிட்டுப் போகலான்னு தான் இப்பிடி வந்தேன். வரட்டுமா சாமி!" கிழவியின் குரல் உணர்ச்சியோடு பேசியது.

வைத்திலிங்கத்துக்கு அவள் பேச்சு தேவாமிர்தமாக இருந்தது.

"என் கையிலே என்ன கிழவி இருக்கு? எல்லாம் பகவானுப் பார்த்துப் பண்ணுறார். அவரை வாழ்த்து நீ" என்று கூறிவிட்டு, நிறை மனத்துடன் கிழவியையே பார்த்துக் கொண்டு நின்றார் வைத்திலிங்கம்.

வட்டமேஜை

- ☐ உருக வைத்து விடுகிறார்
- ☐ பரிகாரம் தேட வழி வகுக்கிறது
- ☐ மிட்டாய்க்கு அடுத்தாப்ல
- ☐ நாற்பது காசிலே நாலாயிரம் விஷயங்கள்

ஸ்ரீமதி எஸ். பத்மாவதி அவர்களின் 'சாமி காப்பாத்து' மிகவும் அருமையாக இருந்தது. நான்கு வயதே நிரம்பிய கண்ணன் இவ்வளவு பொறுமையுடன் இருப்பானா என்பது சந்தேகத்துக்குரியது. எனினும், ஒரு குழந்தையின் வாயிலாக எல்லாருடைய நெஞ்சங்களையும் உருக வைத்து விடுகிறார் ஆசிரியர். ரவீந்திர மூர்த்தியின் 'மாது பேசி விட்டாள்' ஒரு சிறந்த படைப்பு. மாதுவின் நிலைக்கு நாமும் இரு சொட்டுக் கண்ணீர் சிந்துகிறோம்.

சென்னை
28—3—68 எல். சங்கரராமன்

திரு இ. ராஜேந்திரன் எழுதும் 'அனுபவம் புதுமை' நம் நாட்டின் நலனுக்கு உகந்த முறையில் சில முக்கியமான பிரச்னைகளை நன்கு சிந்தித்து அவற்றுக்குப் பரிகாரம் தேட வழிவகுக்கிறது. பாரதம் போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து 1967 — ஓர் ஆண்டில் மட்டும் 1472 விஞ்ஞானிகளும், 4229 பொறியியல் துறை வல்லுநர்களும், 2212 மருத்துவத்துறை மேதைகளும் அமெரிக்காவுக்குச் சென்று பணியாற்றி வருவதாக அண்மையில் ஓர் ஆங்கில நாளிதழில் படித்தேன். அமெரிக்கத் தலைவர்களே இதைக் கண்டு திகைக்கிறார்கள்! இந்த வெளியேற்றத்துக்கான வெளிப்படைக் காரணங்களை "அறிவுக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?" என்ற கட்டுரை நன்கு விளக்குகிறது. நம் நாட்டுக்கு இது எவ்வளவு பெரிய நஷ்டம் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்து இந்த இழப்பு இனியும் தொடர்ந்து நிகழாமல் இருக்க ஆவனசெய்வார்கள் என்று நம்பலாமா?

திருநின்றவூர்
2—4—68 இ. என். ராமு

இந்த உலகத்துலயே மிட்டாய்க்கு அடுத்தாப்ல நோக்கு என்ன பிடிக்கும்னு என்னைக் கேட்டா, வாண்டுமாமா கதைன்னுதான் சொல்லுவேன். நிஜமா 'ஓநாய்க் கோட்டை' கதை மிட்டாயை விட ரொம்ப 'ஸ்வீட்'டாத்தான் இருக்கு. என்னோட அண்ணாகூட ஜேம்ஸ் பாண்ட்டுங்கறவரோட மயக்கத்திலே முதல்ல வாண்டு மாமா கதையை நான் படிக்கச் சொன்ன போது படிக்காம இருந்துட்டான். அப்புறம் யதேச்சையா நடுவிலே ஒரு அத்தியாயத்தைப் படிச்சுட்டுச் சும்மா அசந்தே போயிட்டான். மறுபடியும் பழைய கல்கியையெல்லாம் எடுத்து ஆரம்பத்திலேர்ந்து அதைப் படிச்சான். இப்ப என்னடான்னா வியாழக் கிழமை காலம்பற எனக்கு முன்னாலேயே பேப்பர் காரர்டேர்ந்து கல்கியை வாங்கி மொத மொதல்ல ஓநாய்க் கோட்டையைத்தான் படிக்கிறான். நிஜமாகவே வாண்டு மாமா கதை ரொம்பத் 'த்ரில்லிங்'காகத்தான் இருக்கு.

மதுரை.
4—4—68 டி. ஆர். மீனு

'சிறப்புச் சிறுகதை மலர்' மிகவும் உயர்தரமாயிருக்கிறது. அதிலும் திரு பொன்னித்துறைவனின் 'நாம் செய்த பாவம்' என்னும் சிறுகதை மலருக்குச் சிகரம் வைத்தாற் போல் அமைந்துள்ளது. கண்களில் நீர் மல்க அந்தக் கதையையே பார்த்துக் கொண்டிருந்தேன் கொஞ்ச நேரம். அருமையான அற்புதமான படைப்பு.

மேட்டூர் அணை
12—4—68 வெ. முரளிநாதன்

புத்தாண்டு இதழைப் பார்த்தேன். நாற்பது காசுகளில் நாலாயிரம் விஷயங்கள். சிறுகதைகள் எல்லாமே ஒளிரும் முத்துக்கள். கட்டுரைகள் தரத்துடன் விளங்குகின்றன.

சென்னை—1
15—4—68 ஈ.எஸ். பட்டப்பா

கோவின் · பரப்பிக் கண்கவரும் விநுவின் அட்டைச் சித்திரம்; தன்னேரில்லாத ஒன்பது சிறுகதைச் செல்வர்களின் மாறுபட்ட பாத்திரப் படைப்புக்களைக் கொண்ட ஒன்பது சிறுகதைகள்; மதுவிலக்கு பற்றி ஆணித்தரமாக அரசியல் மேதை ராஜாஜி, மறைந்த மாணிக்கம் நேருஜி இவர்களின் அருமையான கருத்துக்கள்; வழக்கமான தொடர் கதைகளோடு இன்னொரு புதிய தொடர்கதை; பேட்டிகள், வாழ்த்துக்கள் — இப்படி ஒரு மலரைத் தமிழ்கூறு நல்லுலகுக்குப் படைத்த கல்கிக்கு என்னுடைய பாராட்டுக்கள். இந்த வாரத்துக்கு என்றில்லாமல் எந்த நேரத்திலும் படிக்கும் அளவுக்குச் சிறப்பான இம்மலரில் கவிதைகள் இல்லாதது ஒரு பெரும் குறை.

அய்யம்பேட்டை
12—4—68 அ. சேக்அல்லாவுதீன்

கல்கி புத்தாண்டிதழ் பார்த்தேன். அதில், "நாம் செய்த பாவ"த்தைப் படித்தேன்.

உணர்ச்சி நரம்புகளையெல்லாம் இழுத்திழுத்து விட்டு, "ஜில் ஜில்" என்று உடம்பெல்லாம் புல்லரிக்கின்ற நிலையை, கதையைப் படிக்கும் போது எத்தனை தடவை உண்டாக்கியிருக்கிறார் பொன்னித்துறைவன்!

சென்னை—14
12—4—68 க. பார்த்தசாரதி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

ஹெர்குலிஸ்®

வெறும் சைக்கிள் மட்டுமன்று வாழ்நாள் முழுதும் உழைக்கும் ஓர் உறுதுணை



உறுதிமிக்கது. மென்மையான ஓட்டம். ஹெர்குலிஸ் வாழ்நாள் முழுதும் உழைக்கத் தக்கபடி அமைந்தது. மிகஉயர்ந்த தரத்தில் தயாராகி, சகாயமான விலையில் கிடைக்கும் ஹெர்குலிஸ், சைக்கிள்களிலே சிறந்த முதலீடாக விளங்குகிறது.



®
ஹெர்குலிஸ் சைக்கிள் & மோட்டார் கம்பெனி லிமிடெட், யு.கே. அவர்களின் பதிவுபெற்ற டிரேட் மார்க்குகள். இந்தியாவில் தயாரிப்போர்: டிஐ சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ் 53. டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ் 1. பதிவு பெற்ற உபயோகிப்போர்.

TIC-14-4397

REGISTERED No. M. 4382
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி